


மாத இதழ் - November 2012
வண்ண
வானவில்
பருவம் 03 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 25
40/-
இனிய
தீ
பா
வ
ளி
வாழ்த்துகள்
பெண்ணாகும் ஆண்கள்
பாம்புக்கறி ஹோட்டல்
ஆடுகளம் ஜெயபாலன்
தீபாவளித் திரைப்படங்கள்
பஞ்சம் பட்டினி சென்னை
3வது ஆண்டில்
உங்கள் வானவில்
S.Krishkanhan @ ANCL 2012


# VIP Album
## Virat kohli
















ரவீந்திர ஜடேஜா
மற்றும் தோனியுடன்...




தாயுடன்...



விளம்பர படப்பிடிப்பின்போது
பிரபுதேவாவிடம்
நடனம் பழகுகிறார்





புதுடில்லி பாடசாலை
மாணவர்களை சந்தித்தபோது...

### பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | - விராட் கோஹ்லி |
| பிறந்த திகதி | - 05 நவம்பர் 1988, டில்லி |
| உயரம் | - 5 அடி 9 அங்குலம் |
| தந்தை | - பிரேம் கோஹ்லி |
| தாய் | - சரோஜ் கோஹ்லி |
| சகோதரர் | - விகாஷ் |
| சகோதரி | - பாவனா |




பட உதவி: பிரதீப்

# தீபாவளி கடந்து செல்லும் மற்றொரு நாளா?

பா.பிரதீப்

தீபாவளி என்றால் அது பலருக்கும் வழமையாக வந்துபோகும் ஒரு 'ஜொலி' பட்டாசு பண்டிகை மட்டுமே. பண்டிகைகள் என்றாலேயே அப்படித்தான் நினைக்கிறோம். சிலருக்கு தீபாவளி என்று காதைத் திருகி சொன்னால்தான் தெரியும். மலையகத்தில் கொலைகள் விழும் நாளாக ஒரு சமயத்தில் தீபாவளி இருந்தது. வேடிக்கை என்னவென்றால் பலருக்கு அது கலண்டரில் வரும் ஒரு விடுமுறை நாள். பலர் பெயரளவில்தான் அதை அறிவார்கள்.

கொண்டாடும் திருநாட்களை சற்று சிந்தித்து, என்ன என்று ஆராய்ந்தும் பாருங்கள். பல சுவாரஸ்யமான விடயங்கள் அடங்கியிருக்கும்.

தீபாவளிளை இந்துக்கள் கொண்டாடும் திருவிழாவாக மட்டும் தான் தெரியும். இதை சமணர்கள் மற்றும் சீக்கியர்களும் கொண்டாடுகின்றனர். எனினும் இங்கும் தீபத்தையும், வெளிச்சத்தையும் மையப்படுத்தியே கொண்டாடப்படுகிறது.

சமணர்களை எடுத்துக் கொண்டால் கி.மு ஆறாம் நூற்றாண்டு காலப்பகுதியில் சமணர்களின் கடைசி தீர்த்தங்கரான வர்த்தமான மகாவீரர் மக்களை நல்வழிப்படுத்தும் மற்றும் சிறந்த சிந்தனையை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட்டவர்.

இவர் பாவாபுரி நகரிலே அங்கு கூடியிருந்த மக்களுக்கு அறஉரை செய்து கொண்டிருந்தார். மக்களும் அவருடைய பேச்சில் மெய்மறந்து அவர் அருகில் அமர்ந்திருப்பர். அவரும் தொடர்ந்து பேசுவார். ஒரு நாள் நன்கு இருள் சூழ மட்டும் அவர் உரை நிகழ்த்தினார்.

மக்களும் மெய்மறந்து, தங்களது வீட்டையும் மறந்து அமர்ந்திருந்தனர். உரை முடிந்ததும் அங்கேயே உறங்கி விட்டனர். அன்று மகாவீரரும் அந்த இடத்திலேயே முக்தி அடைந்து விடுகிறார். அதாவது இறந்து விடுகிறார். காலையில் எழுந்த மக்கள் அதை அறிந்து அரசரிடம் கூற, அரசர்கள் பலர் சேர்ந்து ஒரு முடிவை முன்வைக்கின்றனர். இந்த நாளை அனைவரும் வீடுகளில் விளக்கேற்றி வழிபட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. சமணம் அழிந்த பின்னர் சமணர்கள் இந்து மதத்தில் இணைந்ததால் இந்து மதத்துக்குள் இவ்வழக்கம் புகுந்ததாகவும் சிலர் கருதுகின்றனர்.

இன்னொரு விளக்கமும் உண்டு. அக்காலத்தில் சமணரும் இந்துக்களும் ஓயாமல் மோதிக்கொண்டனர். சமணத்தை ஒழிக்க பெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தீர்த்தங்கரர் மகாவீரரின் மரணத்தையே, 'தீமை ஒழிந்தது' என்று அக்காலத்தில் இந்தக்கள் கொண்டாடினார்கள் என்றும் கூறப்படுகிறது.





சீக்கியரைப் பார்த்தால், 1577ல் இத்தினத்தில் பொற்கோயில் கட்டுமான பணிகள் துவங்கியதையே இவர்கள் தீபம் கொளுத்தி கொண்டாடுகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

இன்னொரு கதையும் உண்டு. சீக்கிய மதத்தின் ஆறாவது குருவான குரு- கோவிந்த்சிங் குவாலியர் சிறையிலிருந்து விடுபட்ட நாளைத்தான் தீபாவளியாகக் கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்துக்களை எடுத்துக் கொண்டால் இங்கு முக்கியமாக நரகாசுர வதம் கூறப்படுகிறது. அதாவது பூமாதேவியினுடைய மகன்தான் நரகாசுரன். இவனுக்கு கிடைத்த வரம் தாயாரினாலேயே அவனுக்கு முடிவு வரும் என்பதாகும். ஆனாலும் தாய் தன்னைக் கொல்ல மாட்டாள் என்ற தைரியத்தில் மக்களையும் தேவர்களையும் துன்பத்திற்கு உள்ளாக்குகிறான். இவன் வெளிச்சத்தை வெறுப்பவன். இரவு நேரத்தில் விளக்கேற்ற வேண்டாம் என்று கட்டளையிடுகிறான். இவன் வெளிச்சம் வைப்பவர்களின் தலையைக் கொய்கிறான். இதை மக்கள் கிருஷ்ணரிடம் முறையிட்டனர். அவரும் ''நரகாசுரனை அழிக்கின்றேன்'' எனக் கூறி பூமாதேவி அவதாரமாகிய சத்திய பாமாவுடன் இணைந்து நரகாசுரனுடன் யுத்தம் செய்தார். அந்த நேரம் நரகாசுரன் எய்த அம்பால். கிருஷ்ணர் மயக்கமடைந்து தேர்த்தட்டில் சாய்கிறார். இதைப் பார்த்த சத்தியபாமாவுக்கு கோபம் பொங்கியெழுகிறது. உடனே நரகாசுரனை சத்தியபாமா வதம் செய்கிறார். இறக்கும்போது நரகாசுரன் ''நான் வீடுகளில் விளக்கேற்ற கூடாது எனக்கூறி வெளிச்சத்தை வெறுத்ததினால் தான் எனக்கு இநத அழிவு ஏற்பட்டது. எனவே இந்த நாளை அனைவரும் விளக்கேற்றிக் கொண்டாட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என்று வேண்டிக் கொள்கிறான். இதுவே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது என்பது பிரசித்தமான ஒரு காரணம்.

மேலும் வட நாட்டில் ராமரும், சீதையும் வனவாசம் முடிந்து நாடு திரும்பும் போது இவர்களை தீபம் ஏற்றி வரவேற்ற நாளை நினைவு கூறுவதாகவும் ஒரு காரணம் தெரிவிக்கப்படுகிறது.

எத்தனை கதைகள் இருப்பினும் எமது பகுத்தறிவிற்கு உட்படுத்திப் பார்த்தோமானால் சில உண்மைகள் வெளிவரும்.

இந்த அண்ட சராசரமே எங்களுக்கு ஒரு தத்துவத்தை கூறுகிறது. நன்கு உற்றுப் பாருங்கள். அது உங்களுக்கு புரியும். இருள் மட்டுமே நிரந்தரம். இந்த சூரியனும், நட்சத்திரமும் இல்லாமல் போகும் போது மிஞ்சுவது இருள் மட்டும் தான். எனவே இருளை போக்க ஒரு வெளிச்சம் தேவை. அதை அவ்வளவு அழகாக தெளிவுபடுத்துகிறது இந்த தீபாவளி! தீபத்தில் இன்னொரு விடயமும் உண்டு. இதற்கு காற்றிலே உள்ள சில கிருமிகளை அழிக்கும் வல்லமை உண்டு. இதை வைத்து சில விடயங்களை தெளிவுபடுத்த முற்படுகின்றனர் நம் முன்னோர்.

எமது மனம், கோபம், பொறாமை, ஆசை, ஆணவம், திருப்தியின்மை, காமம் போன்ற இருள்மையால் சூழ்ந்துள்ளது. எனவே அவற்றை அன்பு, திருப்தி, அமைதி, சமாதானம் போன்ற தீபங்களை ஏற்றி எமது மனதிலும் நல்ல சிந்தனைகளை உருவாக்கி அண்டத்திற்கு சூரியன், நட்சத்திரம், ஒளி ஊட்டுவதுபோல் எமது வாழ்வுக்கும் சிந்தனைக்கும் ஒளி ஏற்ற வேண்டும் என்பதை இப்பண்டிகை உணர்த்துகிறது.

பண்டிகைகளை இப்படித்தான் கொண்டாட வேண்டும் என்று பலரும் பல வழிமுறைகளைச் சொன்னாலும், ஒவ்வொருவரும் தமக்கு உகந்த மாதிரி-தான் கொண்டாடுகிறார்கள். குடும்பச் சூழல், பொருளாதார வசதி போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளன. பலருக்கு பண்டிகைகள் மீண்டும் ஒன்றுசேரும் வாய்ப்பைத் தருகிறது. பல்வேறு பளுக்களில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியுடன் குடும்பத்தாருடன் நேரத்தை செலவிடுவதற்கான வாய்ப்பையும் பலருக்கு இது தருகிறது.

## வாசகர் கவனத்துக்கு...

உங்கள் அபிமான வண்ணவானவில் இந்த இதழுடன் மூன்றாவது ஆண்டில் காலடி வைத்திருக்கிறது. அத்தனையும் உங்கள் தளரா ஆதரவுடன்தான். இதற்கு கைமாறாக நாம் தொடர்ந்தும் புதுப்புது அம்சங்களை வானவில்லில் சேர்த்துக் கொள்வோம்.

இதே சமயம் இந்த இதழில் இருந்து வானவில்லின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. விலை வெறும் 40 ரூபா மட்டுமே! காகித விலை, மை, அச்சக செலவு என்பன பன்மடங்காக அதிகரித்திருப்பதால் எமது விருப்பத்தையும் மீறி இந்த விலை அதிகரிப்பை செய்ய வேண்டியதாயிற்று. தோள் கொடுப்பீர்கள் என்பது எமக்குத் தெரியும்.

- ஆசிரியர்


வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்



முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

# "எதிர்த்தாடீ பேசுற... இரு உனக்கு செய்யிறேன்!"

சிலர் சுபாவத்தில் ரொம்ப நல்ல மனிதர்களாக இருப்பார்கள். வெளியில் நல்ல மனிதர் என்று பெயரெடுத்திருந்தாலும் குடும்பத்தாரிடம் அல்லது மனைவியிடம் கேட்டுப் பார்த்தால் அவர்கள் சொல்லும் தகவல்கள் முற்றிலும் எதிர்மறையானதாக இருக்கும். அட, இந்த மனிதனுக்கு இப்படி ஒரு முகமா? என்ற ஆச்சரியம் ஏற்படும். இது ஒரு வகையான சுபாவக் கோளாறு. முற்றிலும் மனநோய் என்று சொல்லி விடுவதற்கில்லை. இங்கே இந்த குணா அப்படிப்பட்டவர்தான். அவர் கதையைக் கொஞ்சம் பார்ப்போம்.

குணாவுக்கு எந்தக் கெட்டப் பழக்கமும் கிடையாது. நண்பர்கள் கிடையாது. ஆனால், தினம் காலையில் வேலைக்குக் கிளம்பும் முன் மனைவியை ஒரு வழி பண்ணிவிடுவார். காலையில் எழுந்து, காலைக்கடன் முடித்து, டீ குடித்து, சாப்பிட்டு குளித்து, வேலைக்குக் கிளம்புவதற்குள் நூறு முறையாவது மனைவியை 'லட்சுமி, லட்சுமி' என அதிகாரம் தெறிக்கும் குரலில் கூப்பிடுவார். கைகெட்டும் தூரத்தில் உள்ள பொருளை எடுக்கக் கூட மனைவிதான் வர வேண்டும்.

அவருக்கு சமையல், ஐந்தாம் வகுப்பு படிக்கிற மகனைப் பள்ளிக்கு தயார் செய்வது என லட்சுமிக்கு எத்தனை வேலைகள் இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார். மீறி லட்சுமி ஏதாவது ஒரு வார்த்தை சொன்னால் போச்சு! அதையே சாக்காக வைத்துக் கொண்டு, வேலைக்குக் கூடப் போகாமல் மனைவியிடம் சண்டைக்கு நிற்பார்.

''எதிர்த்தா பேசறே... நீ குடும்பத்துக்கு ஒத்து வர மாட்டே... உன் ஜாதகம் சரியில்லை. உன் வீட்ல உன்னை சரியா வளர்க்கலை...." இப்படியே பேசிக் கொண்டே போவார். கல்யாணமான நாளான்று நடந்த விஷயத்திலிருந்து ஆரம்பித்து ஒவ்வொன்றாக எடுத்து பேசிக் கொண்டே இருப்பார்.

'தப்பு என்மேல தாங்க' என லட்சுமி சொன்னால், 'அப்ப தெரிஞ்சே செய்தியா' என்பார். மனைவியை சமைக்க விட மாட்டார். தானே சமையலறைக்குள் நுழைந்து சமைக்க ஆரம்பிப்பார். மனைவி பக்கத்தில் நின்றபடி, அவரது புலம்பலைக் கேட்டாக வேண்டும்.

'புருஷன் சமைக்கிறதை கால் மேல கால் போட்டு வேடிக்கை பார்க்கணும்னுதான் உங்க வீட்ல சொல்லிக் கொடுத்திருக்காங்களா?' என்று கேட்பார். இது இரண்டு மூன்று நாட்களுக்குத் தொடரும். வேலை நிமித்தம் குணா வெளியூர் போனால்தான் லட்சுமிக்கு நிம்மதியே.

மனைவி லட்சுமி தன் குடும்ப நண்பரிடம் தான் படும் அவஸ்தையை சொல்லவே, அவர் தனக்குத் தெரிந்த ஒரு மனநல மருத்துவரிடம் இது பற்றி சொல்லி லட்சுமியை அவரிடம் அழைத்துச் சென்றிருக்கிறார். அவரிடம் லட்சுமி தன் வேதனை அனுபங்களைக் கொட்டித் தீர்த்திருக்கிறார்.

''இதை எங்க வீட்டில சொல்ல முடியாது. என் பெற்றோர்கள், நீ தான் கொஞ்சம் அனுசரித்துப் போக வேணும் என்பார்கள். வாழா வெட்டியா வந்து உட்கார்ந்து விடாதே என்பார்கள். என் இடத்துல வேற யார் இருந்திருந்தாலும், இத்தனை நாள் தனியா போயிருக்கணும் இல்லைனா தற்கொலை பண்ணியிருக்கணும். ஆனா, பாருங்க மேடம், இதுவரைக்கும் ஒருநாள் கூட அவர் என்னை கை நீட்டி அடிச்சதில்லை. சமயத்துல குடிச்சிட்டு வந்து அடிக்கிற ஆம்பிளையா இருந்தாக் கூட பரவால்லையேனு தோணும். பேங்க்ல நிறைய பணம் போட்டு வச்சிருக்காரு. ஆனாலும் மகா கஞ்சத்தனம். என்கிட்ட காசே தர மாட்டாரு. காய்கறிலேர்ந்து, கறிவேப்பிலை வரைக்கும் அவரேதான் வாங்கிட்டு வருவார். பத்து வருஷமா இப்படியோ பழகிப் போச்சு'' என அழுதார் லட்சுமி.

குணா பெரிதும் மதிக்கும் ஒரு குருஜியைப் பற்றி பேச்சு வாக்கில் லட்சுமி அந்த மருத்துவரிடம் சொன்னார். அந்த நபரை மருத்துவருக்குத் தெரியும். பல போலிச்சாமியார்களைப் போல இல்லாமல், ஒரு சிறிய தியான மையம் நடத்திக் கொண்டு, இப்படி மனநல சிகிச்சை தேவைப்படுகிறவர்களை தகுந்த நபர்களிடம் அனுப்பி வைப்பவர். அவர் என்ன சொன்னாலும் குணா தட்டமாட்டார் எனத் தெரிந்து, அவரது பரிந்துரையின் பேரில் அந்த மனநல மருத்துவரை சந்திக்க குணாவை அழைத்து வரச் சொன்னார் லட்சுமியிடம்.

மனைவி லட்சுமிக்குத் தான் மனநல சிகிச்சை தேவை என்ற தோற்றத்தை ஏற்படுத்தி அவரை அழைத்துக் கொண்டு வரும்படி ஒரு ஆலோசனையை மருத்துவர் வழங்கினார். ஏனெனில் இத்தகைய சுபாவக் கோளாறு கொண்டவர்கள் மனநல சிகிச்சை என்றால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். என்னை மனநோயாளி என்று முடிவு கட்டி விட்டீர்களா? என்று பிரச்சினை இன்னொரு புறம் கிளம்பும்.

ஒரு நாள் அவர் மருத்துவரிடம் மனைவியை அழைத்து வந்தார். 'இவளுக்கு நல்லா புத்தி சொல்லி அனுப்புங்க மேடம். குடும்பத்தை எப்படி அனுசரிச்சுப் போகணும்னு சொல்லுங்க' எனச் சொல்லிவிட்டு வெளியே உட்கார்ந்தார்.

குணாவுக்கு இருப்பது ஒரு வகையான 'சுபாவக் கோளாறு' மாற்றுவது மிகவும் கடினம். எண்ணம் செயல் மாற்று சைக்கோதெரபிதான் இதற்குத் தீர்வு. மாதம் 2 முறை என ஒரு வருடத்துக்கு கொடுக்க வேண்டியிருக்கும். ஆரம்பத்தில் சில முறை லட்சுமிக்கும் கொடுப்பதாகச் சொல்ல வேண்டும். அப்போதுதான் வருவார் என்று தன் சிகிச்சையைத் தீர்மானித்தார் மருத்துவர். மனைவிக்கு கவுன்சலிங் என்ற பெயரில் அவருடன் வந்த குணாவையும் ஒவ்வொரு முறையும் தனியே அழைத்து அவரே அறியாத படி சிகிச்சையைத் தொடர்ந்தார் மருத்துவர். ஆறு மாதங்களில் குணம் தெரிய ஆரம்பித்தது.

இம் மாதிரியான மனிதர்களைப் பற்றி அந்தக் குருஜி என்ன நினைக்கிறார் என்பதுதான் விஷேஷம். அந்த மனநல மருத்துவர் குருஜியுடன் தொடர்புகொண்டு விஷயத்தைச் சொன்னதும், ''என்னிடம் இப்படித்தான் பலர் ஆத்மீகம் என்று சொல்லியபடி வருகிறார்கள். அவர்களின் பலர் மனநோய் கண்டவர்கள். ஆத்மீகம் வேண்டியவர்களுக்கு அதைக் கொடுக்கலாம். மற்றவர்களை உங்களைப் போன்றவர்களிடம் தான் அனுப்பி வைக்கிறேன்." என்று சொல்லி இருக்கிறார் அந்த நல்ல சாமியார்!



## அர்த்தம் தெரியுமா?

| | | |
|---|---|---|
| SIM | - | SUBSCRIBER IDENTITY MODUL |
| CNG | - | COMPRESSED NATURAL GAS |
| VCD | - | VIDEO COMPACT DISC |
| DVD | - | DIGITAL COMPAT DISC |
| GPRS | - | GENERAL PACKET RADIO SERVICE |
| LCD | - | LIQUID CRYSTEL DISPLAY |
| USB | - | UNIVERSAL SERIAL BUS |
| FM | - | FREQUENCY MODULATION |
| AM | - | ANTE MERIDIEM |
| PM | - | PAST MERIDIEM |
| GHQ | - | GENERAL HEAD QUERTER |
| CID | - | CRIMINAL INVESTIGATION DEPARTMENT |



## இலங்கைத் தமிழ் திரையுலகம்



தம்பி ஐயா தேவதாஸ்

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

# மலையாள கலைஞரான சந்திரவன்ச தயாரித்த 'சமுதாயம்'

**1950** ஆம் ஆண்டுக்கு முன்பே இலங்கையில் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கவேண்டும் என்ற எண்ணம் பல கலைஞர்களின் உள்ளங்களில் பிறந்து விட்டது. இந்த முயற்சி முதன் முதலில் மலையகத்திலேயே ஆரம்பமானது. இலங்கைக் கலைஞர்கள் சிலர் 1951 ஆம் ஆண்டு மலையகத்தில் கொஸ்லந்த என்ற ஊரில் ஒன்று கூடி இலங்கையில் தமிழ்த் திரைப்படம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று தீர்மானம் எடுத்தனர். அவர்கள் சாதாரண மனிதர்களல்ல...

எம்.வி. ராமன், ஏ. அருணன், வி. தங்கவேலு, ஹென்றி சந்திரவன்ச ஆகியோரே அந்த கலைஞர்கள். இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து முதலில் 'சினிமா கலா நிலையம்' என்ற மன்றத்தை உருவாக்கினார்கள். இந்த மன்றத்தின் சார்பில் 'சமுதாயம்' என்ற பெயரில் திரைப்படம் ஒன்றை தயாரிக்கும் முயற்சி ஆரம்பமாகியது. கதாநாகனாக வி. தங்கவேலுவும் கதாநாயகியாக தர்மதேசி என்ற பெண்ணும் தெரிவு செய்யப்பட்டனர். அத்திரைப்படம் 35 மி.மீட்டரில் சில ஆயிரம் அடிகள் வரை வளர்ந்திருந்தது. அப்போது தயாரிப்பு குழுவினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அத்திரைப்படம் அப்படியே நின்று விட்டது.



சமுதாயம் படப்பிடிப்பின்போது...

எல்லோரும் ஒரே விதத்தில் சிந்தித்திருப்பார்களா? சிலர் வித்தியாசமாகவும் சிந்தித்திருப்பார்கள். அப்படி சிந்தித்தவர்களில் சந்திரவன்ச முக்கிமானவர்.

சந்திரவன்ச அந்தக் குழுவிலிருந்து பிரிந்து சென்று நடிகர், நடிகர்களை மாற்றி 'சமுதாயம்' என்ற பெயரிலேயே 16 மில்லி மீட்டரில் வர்ணப் படமொன்றை தயாரிக்கத் தொடங்கிவிட்டார். கொஸ்லந்தவில் பிறந்து வளர்ந்த எஸ். என். தனபாலரத்தினம் கதாநாயகன்; ஜெயகௌரி கதாநாயகி; எஸ். ஏ. ராஜா வில்லன். மற்றும் ஆர். காசிநாதன், ஆர்.ரி. ராசையா, இரத்தினகுமாரி ஆகியோரும் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டனர். எம்.ஆர் ராதாவின் இலங்கை மனைவியும் நடிகை ராதிகாவின் தாயாருமான 'கீதா'வும் இப்படத்தில் சில காட்சிகளில் தோன்றினார்.

இவ்வாறு பல நடிகர்களும் நடிகைகளும் 'சமுதாயம்' படத்தில் நடித்தனர்.

அறிஞர் அண்ணாவின் நாவல் ஒன்றின் பெயர் 'வேலைக்காரி'. அந்த நாவலைத் தழுவி 'சமுதாயம்' படத்துக்கான கதை வசனங்களை ஜீவா நாவுக்கரசன் எழுதினார்.

ஹென்றி சந்திரவன்ச தன் படத்தை மிகவும் சிக்கனமான முறையில் தயாரித்தார். படத்தில் நடித்த சிலர் தயாரிப்புக்கு பணம் வழங்கினர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, கதிர்காமம், அனுராதபுரம் ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடைபெற்றது.

படப்பிடிப்பு நடைபெற்ற இடங்களில் எல்லாம் மக்கள் இப்படத்துக்கு ஆதரவு வழங்கினார்களாம். படப்பிடிப்பை மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்தார்களாம். படக்குழுவினரைப் பார்த்து ''எங்கள் வீட்டில் தங்குங்கள், எங்கள் கடையில் தங்குங்கள்'' என்று அன்புத் தொல்லைக் கொடுத்தனராம்.



வில்லனாகத் தோன்றிய ஏ.எஸ் ராஜா



'சமுதாயம்' படத்தயாரிப்பாளரான எச். சந்திரவன்சவுக்கு பாடல்களை ஸ்ருடியோவில் ஒலிப்பதிவு செய்யக் கூடிய வசதிகள் இருக்கவில்லை. 'அங்கொட' 'கொத்தட்டுவ' என்ற இடத்தில் அமைந்திருந்த தனியார் வீடொன்றிலேயே 'சமுதாயம்' படப்பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. திலக் கருணாரத்ன இப்படத்துக்கான இசையை அமைத்தார். பாடல்களை கவிஞர் ஜீவா நாவுக்கரசன் எழுதினார்.

அம்பிகா தாமோதரன், வினோதினி இந்திரன், எம். லாஹிர், எம்.பியாஸ் ஆகியோர் பின்னணி பாடினர். வினோதினி பாடிய 'இதுவா நீதி? இதுவா நேர்மை?' என்று ஆரம்பமாகும் சோகப்பாடல் சிறப்பாக அமைந்தது.

பாடலின் சரணம் பின்வருமாறு தொடங்குகிறது...

பிரியா வாழ்வு குறையா உலகம்
அறியா விதியா
அறியா இன்பம் துயராக வந்து
அடைந்தேன் இது விதியா?
அழிந்தேன் இது சதியா?
என்று அமைகிறது அப்பாடல்

இசைக்கு ஏற்ப சொற்களை தொகுத்து பாடல் எழுதியிருந்ததால் பாடல் இன்மையாக இருந்தது. எனினும் இசை அமைப்பதற்கு இலகுவாக பொருத்தமற்ற சில சொற்களைச் சேர்த்திருக்கிறார்கள் போல தெரிகிறது. ஆனால் இசை அமைப்பு அருமை. பாடகி வினோதினியின் குரலும் பாவமும் அருமையாக அமைந்திருந்தன.

அப்பொழுது சிறந்த கர்நாடக பாடகியாக விளங்கியவர் அம்பிகா தாமோதரன். இவரும் 'சமுதாயம்' படத்தில் ஒரு பாடலை பாடியிருக்கிறார்.

'விதியின் வேலை மனித வாழ்வில்
துயராகும் நிலையா
பெற்ற தாய் முதல் தந்தையும்
சாக வந்தது வாழ்வினையா?'
என்று பாடலின் பல்லவி ஆரம்பமாகிறது.

'வாழ்வினை' என்ற சொல்லை சினிமாப் பாடலில் பொதுவாக பயன்படுத்துவதில்லை என்று சொல்வார்கள்.

'சமுதாயம்' படத்தில் 'காதல்' பாடல் ஒன்றும் இடம்பெற்றது.

'கன்னி உந்தன் காதல் மொழி
கவலை போக்குதே
அன்பே நீங்கள் அருகில் வந்தால்
ஆசை பொங்குதே' என்று அந்த பாடல் ஆரம்பமாகிறது.

எம். லாஹிரும் இந்திராணியும் இந்தப்' பாடலைப் பாடியிருக்கிறார்கள்.

சமுதாயத்தில் மொத்தம் நான்கு பாடல்கள் இடம்பெற்றன. இப்பாடல் இசைத் தட்டுக்கள் இப்பொழுதும் இலங்கை வானொலியில் இருக்கின்றன.

சமுதாயம் திரைப்படம் 16 மி.மீட்டரில் கலரில் எடுக்கப்பட்டது. ஒன்றுக்கும் மேற்பட்ட பிரதிகளை எடுக்க முடியாத தொழில் நுட்ப அமைப்பைக் கொண்டது. இந்த ஒரு பிரதியைக் கூட திரையிடுவதற்கு தியேட்டர் கிடைக்காமல் தயாரிப்பாளர் கஷ்டப்பட்டுப் போனார். 1962 ஆம் ஆண்டு பொரளை வை.எம்.பி. ஏ மண்டபத்தில் இப்படம் திரையிடப்பட்டது.

ஹென்றி சந்திரவன்ச சமுதாயம் திரைப்படத்தின் சுருளை தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சென்றார். படசாலைகளில் படத்தைக் காட்டினார். அந்தக் காலத்தில் 'சமுதாயம்' படத்தை தான் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பார்த்ததாக என் நண்பன் ஒருவர் என்னிடம் கூறினார்.

சந்திரவன்சவின் தளராத முயற்சியினாலும் கடும் உழைப்பினாலும் 'சமுதாயம்' திரைப்படம் உருவானது. இலங்கையில் 'தமிழ்' சினிமாவின் உருவாக்கத்துக்கு அடி எடுத்துக் கொடுத்த பெருமை சந்திரவன்சவையே சாரும்.



ஹென்றி சந்திரவன்ச

1974 ஆம் ஆண்டு வெளிவந்த 'சுமதி எங்கே?' திரைப்படமும் இவர் தயாரித்ததே. அத்திரைப்படமும் கஷ்டப்பட்டே திரைக்கு வந்தது. அது 1979 ஆம் ஆண்டு சந்திரவன்ச தனது மூன்றாவது தமிழ் படமான 'கீதாஞ்சலி'யை தயாரித்துக் கொண்டிருந்தார். இத்திரைப்படத்திற்கான திரைக்கதை, வசனம், பாடல்களைத் தயாரித்து வெற்றிகொண்ட சந்திரவன்சவுக்கு யமதர்மனை வெற்றிக்கொள்ள முடியவில்லை. சந்திரவன்ச 1979-12-15 இல் மாரடைப்பினால் காலமானார்.

சந்திரவன்ச பல சிங்கள படங்களையும் இரண்டு தமிழ்ப் படங்களையும் உருவாக்கியிருக்கிறார். எவர் என்ன சொன்னாலும் எடுத்த காரியத்தை முடித்து வைக்கும் திறமை அவரிடமிருந்தது. இவர் திரைப்படங்களை மட்டும் தயாரிக்கவில்லை. சினிமா சம்பந்தமான சஞ்சிகைகளையும் தமிழிலும் சிங்களத்திலும் வெளியிட்டிருக்கிறார். இவ்வாறான முயற்சிகள் அந்தக் காலத்தில் வேறு எவராலும் மேற்கொள்ளப்பட முடியாத கலைப்பணிகளாகும். ஹென்றி சந்திரவன்சவின் உண்மையான பெயர் 'சந்திரசேகரன்' என்பதாகும். சிங்களச் சினிமா தயாரிப்பதற்காக தனது பெயரை 'சந்திரவன்ச' என்று மாற்றியிருந்தார். உண்மையில் இவர் ஒரு மலையாளி. மலையாள கலைஞர்களுக்கும் இலங்கையின் தமிழ் திரைப்பட தயாரிப்பு முயற்சிகளுக்கும் பல தொடர்புகள் இருக்கின்றன.

இலங்கைத் தமிழ்ப் படம் தயாரித்த இன்னுமொரு மலையாளியை அடுத்தவாரம் பார்ப்போம்.




சுமதி எங்கேயில் சுப்புலட்சுமியும் காசிநாதனும்





# மதராஸ மாகாணத்தை பிடித்தாட்டிய பயங்கர பஞ்சம்

பா. பிரதீப்



நடைப்பிணங்கள்

இலங்கையில் கோப்பிக் காலம் 1840களில் ஆரம்பமாகி அந்நூற்றாண்டின் இறுதியில் தேயிலை யுகம் மலர்ந்த காலப்பகுதியில் இலட்சக் கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக இலங்கை தோட்டங்களில் வேலை செய்வதற்காக வந்தனர். இதேபோல ஆபிரிக்கா, பிஜி தீவுகள், கரிபியன் தீவுகள், மலேசியா, பர்மா, மொரிஷியஸ் உட்பட பல உலக நாடுகளுக்கும் தமிழ்த் தொழிலாளர்கள் வேலைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இது அக்காலத்தில் இடம்பெற்ற மிகப்பெரும் மக்கள் வெளியேற்றம். அம்மக்கள் இதை பஞ்சம் பிழைக்கப்போகிறோம் என்றே அழைத்திருக்கிறார்கள். இது இன்றும் வழக்கில் உள்ள வார்த்தை. வறுமை, பஞ்சம் காரண-மாக ஊர்விட்டு ஊர் செல்லும் போது பஞ்சம் பிழைக்கப் போகிறோம் என்று கூறுவது தமிழக கிராமங்களில் இன்றும் வழக்கில் உள்ளது.

அதென்ன பஞ்சம் பிழைக்கப் போவது?

இந்தியாவும் இலங்கையும் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததால் இவ்விரு நாடுகளுக்கு இடையே பயணம் செய்வது சுலபமானது. ஊர்விட்டு ஊர் போகிற மாதிரித்தான். இலங்கைத் தோட்டங்களிலும் பிரிட்டிஷ் காலனி நாடுகளில் பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்ட போதும் தமிழகத்தில் இருந்து குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் அந் நாடுகளுக்கு கூட்டம் கூட்டமாகச் செல்வதற்கு சில சமூக மற்றும் பொருளாதாரக் காரணங்கள் இருந்தன.

முதல் காரணம் 1876 - 1978 காலப்பகுதியில் மெட்ராஸ், பிரிஸிடென்சி என அழைக்கப்பட்ட மதராஸ் மாகாணத்தில் நிலவிய கொடிய பஞ்சம். உயிர்வாழ வேறு வழியே இல்லை என்ற நிலையில் தேயிலைக் தூரில் தேங்காயும் மாசியும் விளைகிறது போன்ற உணவு தொடர்பான சுவர்க்க பரதேசம் பற்றிய கதைகளை நம்பி அவர்கள் ஆவலுடன் தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

அக்காலத்தில் மழையை நம்பியே விவசாயம் நடைபெற்றது. தவறாமல் வந்த மழை பொய்க்கும் போது பஞ்சம் வந்தது. 1876இல் தாராளமாகப் பெய்யும் தென்மேற்கு பருவமழை தூரலுடன் நின்று போனது. இது பொய்த்தாலும் வடகிழக்கு பருவமழை வந்து காப்பாற்றும். இரண்டுமே பொய்த்துப் போகவே அப் பயங்கர பஞ்சம் மக்களைக் கௌவத் தொடங்கியது. 27.6 அங்குலத்துக்குப் பதிலாக 6.3 அங்குல மழையே பெய்திருந்தது. அடுத்த ஆண்டும இதே நிலை தொடரவே மக்கள் வரலாறு காணாத பஞ்சத்தை எதிர்கொண்டாரகள்.

தானிய வருகை இல்லாமல் தானிய கடைகள் மூடப்பட்டன. ஆங்கிலேயரின் உதவியுடன் வட மாகாணங்களில் இருந்தும் பர்மாவில் இருந்தும் தானியங்களை



வர்த்தகர்கள் இறக்குமதி செய்த போதிலும் அவை கொள்ளை விலையில் விற்கப்பட்டதால் அவை ஏழைகளுக்கு எட்டாக் கனியானது.

அக்காலத்தில் ரூபாவுக்கு 15 கிலோ அரிசி வாங்கலாம். அரிசி இல்லாததால் ரூபாவுக்கு நான்கு கிலோ மட்டுமே வாங்க முடியும் என்ற நிலையில் ஏழைகள் வயிற்றில் ஈரத்துணியை போட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. சென்னை நகரின் குறுகிய சந்து ஒன்றில் பசியால் ஒருவர் விழுந்து இறந்து கிடந்தார் என்றும் அவரது சட்டைப் பையில் ரூபா நோட்டுகள் இருந்தன என்றும் ஒரு பஞ்சக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது காசு கையில் இருந்தாலும் வாங்குவதற்கு பொருட்கள் கிடைக்கவில்லை.

வயல்கள் வரண்டுபோக, கடைகள் இழுத்து மூடப்பட, தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்க, வேலை வாய்ப்பும் உணவும் இல்லாத நிலையில் தமது பாத்திர பண்டங்கள், கால்நடைகள், வீட்டுக் கதவு, ஜன்னல்கள் அனைத்தையும் விற்று நாடோடிகளாகத் திரிய ஆரம்பித்தனர். அவர்கள் நகரங்களை நாடிச் சென்றனர். நடப்பதற்கு சீவனின்றி பலர் வழியி-லேயே செத்து விழுந்தனர். வழியில் செல்வந்தர்கள் வீடுகளை, தானியக் கிடங்குகளை மற்றும் கடைகளை அவர்கள் பசி வெறியுடன் கொள்ளையிட்டனர். செத்து விழுந்தவர்கள் பட்டினி கிடக்கும் நாய்களுக்கும் நரிகளுக்கும் விருந்தாக அவர்களை புதைக்கவும் திராணியின்றி மக்கள் மேலே நடந்து சென்றனர்.

பஞ்ச நிலைமை கட்டுமீறிச் செல்வதை உணர்ந்த வெள்ளை அரசாங்கம் புதிய திட்டங்களை ஆரம்பித்து தண்டவாளம், சாலை அமைக்கும் வேலைத் திட்டங்களை கொண்டுவந்து தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தினர். எனினும் போதிய உடல் பலமின்றி பலர் சோர்ந்து போயினர். பலர் செத்து மடிந்தனர். சம்பளத்துக்குப் பதிலாக இவர்களுக்கு தானியம் வழங்கப்பட்து.

சாலை அமைக்கும் திட்டங்களை சுற்றிப்பார்த்த ஒல்ட்ஹேம் என்ற வெள்ளை அதிகாரி சாலைகள் போர்க்களம் போலக் காட்சியளிததததாகச் சொல்கிறார். வயநாடு மலைக்கணவாயைக் கடக்கும் போது 29 சடலங்களைத் தான் பார்த்ததாக இன்னொருவர் குறிப்பெழுதியிருந்தார். வீடுகள், சத்திரங்கள், கோவில்கள், வயல்கள், காடுகள் என எங்கும் சடலங்கள் சிதறிக் கிடந்ததாகவும் மூடிக் கிடந்த வீடுகளுக்குள் நடக்க முடியாத வயோதிபர்கள் உடல் அழுகிக் கிடந்ததாகவும் இங்கு குறிப்பிட்டுள்ளார். அப்படி ஒரு பயங்கர பஞ்சம் இது!

இப்பஞ்சம் 1878இல் பெய்த மழையோடு முடிவுக்கு வந்தது. இந்த பஞ்சத்தில் இந்தியாவெங்கும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் இறந்ததாக ஆங்கில அதிகாரி வில்லியம் திக்பி தன் கணக்கெடுபபில் தெரிவித்திருந்தார் இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சென்னை மாகாணத் தமிழர்கள் தான்.

இப்பஞ்சத்தில் இருந்து பல்லாயிரக் கணக்கானோரைக் காப்பாற்றும் ஒரு முயற்சியாக மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, மாவட்டங்களைச் சேர்ந்த வீவசாய குடும்பத்தினரை பஞ்சம் பிழைக்க இலங்கைக்கு வெள்ளையர்கள் அனுப்பி வைத்தனர். இவர்கள் இலங்கை வருதற்கு பஞ்சம் என்ற காரணத்தைத் தவிர, சாதிக்கொடுமை, காணிஇன்மை, கடன்சுமை போன்றவையும் முக்கிய நெம்புகோள்களாக இருந்தன.

## மிகச் சிறிய பூனை



உள்ளங்கை நீளத்திற்கு பூனை இருக்குமா? பிறந்து இரண்டு ஆண்டுகள் ஆன, இப்படிப்பட்ட அதிசய பூனை ஒன்று உள்ளது. அமெரிக்காவில் டிரமான்ட் நகரில் வசிக்கும் கால்நடை டாக்டர் டொன்னா சாஸ்மன் ஒரு நாள் ஒரு பண்ணைக்கு செல்லும் போது, இந்த அதிசய பூனையைப் பார்த்தார்; அவராலேயே நம்ப முடியவில்லை. அந்த பூனை, மிகவும் சிறியதாக இருந்தது. உள்ளங்கை அளவு கூட அது இல்லை. 'இந்த குட்டி பூனை பிறந்து எத்தனை நாள் ஆகிறது?' என, அதன் உரிமையாளரிடம் கேட்டார். 'இது குட்டி பூனை அல்ல; இரண்டு ஆண்டுகள் ஆன பூனை. ஆனால், இதன் வளர்ச்சி இவ்வளவுதான். இதற்கு மேல் வளரவே இல்லை...' என்றார் அதன் உரிமையாளர். அந்த பூனையை தன் குட்ஷெப்பர்ட் கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். இது, சிறிய கண்ணாடி டம்ளருக்குள் அடங்கி விடுகிறது. அதன் மொத்த உயரமே, 6.1 அங்குலம் தான்; எடை இரண்டு கிலோ. உள்ளங்கையில் பொம்மை போல் உட்கார்ந்து கொள்ளும் இந்த பூனை கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில், மிகச்சிறிய பூனை என்ற பெயரைப் பெற்று விட்டது. இப்போது, இந்த மருத்துவமனையில் எல்லோரது பார்வையும் இந்த பூனை மேல் தான் உள்ளது. எல்லா பூனைகளையும் போல நன்றாக ஓடியாடி விளையாடும் இந்த பூனை, நன்றாக சாப்பிடவும் செய்கிறது. ஏன் இந்த பூனை மட்டும் முழுமையாக வளர்ச்சியடையவில்லை என, ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.


வண்ண வானவில்

வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

சாதாரண விளம்பரங்கள்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செமீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செமீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செமீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செமீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.40 |
| 1 வருட சந்தா | ரூ.480.00 |
| 6 மாத சந்தா | ரூ.240.00 |
| 3 மாத சந்தா | ரூ.120.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

தபால் மூலம் பெறுவதற்கு:

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.672.00 |
| 6 மாத சந்தா | ரூ.336.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk



# மரண அடி மர்மங்கள்

பல்வேறு பாதுகாப்பு செயற்பாடுகளையும் மீறி அண்மைக் காலத்தில் குடும்ப வன்முறைச் சம்பவங்கள் திடீரென்று அதிகரித்து வந்துள்ளன. அத்துடன் அவ்வாறான சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் அநேகமாக அப்பாவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் ஓரிரு பகுதிக்கு என மட்டுப்படுத்தப்படவில்லை. நாடளாவிய ரீதியில் பல இடங்களில் நடைபெற்றுள்ளன.

இவ்வாறான ஒரு சம்பவம் இரண்டு மாதங்களுக்கு முன் கொழும்பில் வெள்ளவத்தைப் பிரதேசத்தில் நடைபெற்றது. தனது தாயும் தங்கையும் அணிந்திருந்த தங்க நகைகளை தனதாக்கிக் கொள்ளும் நோக்குடன் ஒரு இளைஞன் தனது தாய், தந்தை, மற்றும் தங்கைக்கு விஷமூட்டி கொலை செய்த சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்தது.

அந்த சம்பவம் நடந்த அடுத்த மாதம் அதாவது கடந்த மாதம் வட மத்திய மாகாணத்தில் தனது காதலியான மாணவியொருத்தியின் செயலால் விரக்தியுற்ற இராணுவ வீரர் தனது காதலியை கத்தியால் குத்திக் கொன்றார்.

அந்த சம்பவம் இடம்பெற்று இரண்டு வாரங்கள்தான் சென்றிருக்கும். அதற்குள் அத்துருகிரிய பிரதேசத்தில் ஒரு இளம் வைப்பாட்டி தனது வயதான காதலனை கொலை செய்த சம்பவம் தெரியவந்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் ஒரு சட்டத்தரணி. 60 வயதுக்கு மேற்பட்டவர். அவரை கொலை செய்த அவரது வைப்பாட்டியின் வயது 22 மட்டுமே.

இவர்கள் இருவருக்குமிடையே எப்படி பழக்கம் ஏற்பட்டது என்று பார்ப்போம்.

வில்சன் விஜயவர்தன ஒரு சட்டத்தரணி. அத்துடன் பிரபலமானவரும் கூட. எனவே அவரிடம் நிறைய பணம் புழங்கியது. ஜயவர்தன திருமணமானவர். 29, 27 வயதில் இரு வயது வந்த மகன்மாரும் இவருக்கு இருந்தனர். ஆனால் இவர் தனது குடும்பத்துடன் வசிக்கவில்லை. இவரது மனைவியும் இரு மகன்மாரும் தெஹிவலையில் வசித்தனர். இவரோ அத்துருகிரியவில் அனைத்து வசதிகளையும் கொண்ட வீட்டை அமைத்து அதில் வசித்து வந்தார்.



ஜயம்பதி ஜயசிங்க

சட்டச் சிக்கல்களில் அகப்பட்டு தன்னிடம் ஆலோசனை கேட்க வரும் இளம் பெண்களை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கி அவர்களை தனது வலையில் சிக்க வைத்தபின் சிக்கல்களை அவிழ்க்கும் பழக்கம் கொண்டவர் வில்சன். சட்டச் சிக்கல்களில் அகப்படும் பெண்களின் சிக்கல்களை நீக்கி அவர்களை தனது இச்சைக்கு பயன்படுத்திக்கொள்ளும் வித்தையில் கைதேர்ந்தவர். பல இளம் பெண்கள் இவரது வலையில் சிக்கியிருந்தனர்.

வழக்குகளில் தோற்றுவதற்காக காலிக்கு சென்றபோது அவருக்கு அறிமுகமானவள்தான் அந்த யுவதி. அவருக்கு 22 வயது. காதல் விவகாரமொன்றில் சிக்கியிருந்த அவருக்கு அதில் இருந்து மீள சட்ட உதவி தேவைப்பட்டது. சட்டத்தின் துணையுடன் அவளை அந்த சிக்கலில் இருந்து விடுவித்த சட்டத்தரணி வில்சன், தனது வலைக்குள் அவளை சிக்கவைத்தார்.

மனைவி தன்னுடன் சேர்ந்து வசிக்காததால் அவளை அத்துருகிரியவுக்கு அழைத்து வந்து தனது வைப்பாட்டியாக வைத்துக்கொண்டார் வில்சன்.

பெண்களை துன்புறுத்தி இன்பம் அனுபவிக்கும் பழக்கம் கொண்டவர் வில்சன். அதுவும் இளம் பெண்களாக இருந்து விட்டால் அவரது தொல்லை கட்டுக்கு அடங்காமல் இருக்கும்.

வைப்பாட்டியான இளம் பெண்ணை சங்கிலியால் கட்டி வைப்பதுடன் அடித்தும் கடித்தும் துன்புறுத்துவது அவரது பழக்கம். அவளுக்கு அது பிடிக்கவில்லை. ஆரம்பத்தில் அவள் இவ்வாறான செயல்களுக்கு எதிர்ப்பு காட்டாத போதிலும் நாள் செல்ல அப்பழக்கத்துக்கு அவள் மிகுந்த எதிர்ப்பு தெரிவித்தாள். ஆனால் வில்சன் அவளை விடுவதாக இல்லை. இதனால் வில்சன் மீது அவளுக்கு ஏற்பட்ட வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்தது.

சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்த அவள் சட்டத்தரணி வில்சன் ஒருநாள் இரவு பல்கனியில் நின்று கொண்டிருந்தபோது மெதுவாக சம்மட்டியை எடுத்து வந்தாள். அவர் யோசனையில் ஆழ்ந்திருந்தால் பின்னால் வந்த அவளை கவனிக்கவில்லை. சம்மட்டியை சுழற்றி தலையில் ஒரே போடாகப் போட்டாள். திரும்பிப் பார்க்காமலே சரிந்து விழுந்தார் சட்டத்தரணி. அது அதிகாலை நேரம். அப்போது வீட்டில் வேறு எவரும் இருக்கவில்லை. அந்த அறை முழுவதும் இரத்த மயமாகி இருந்தது. சுவர்களில் இரத்தம் தெறித்திருந்தது. அப்போதுதான் அடுத்து என்ன செய்வது என்ற யோசனை எழுந்தது. அவளும் ஒரு பிணமும். என்ன செய்யலாம்? ஏதாவது செய்தாக வேண்டும். சட்டத்தரணியின் உடலை மாடியில் இருந்து கீழே வீசிவிட்டு அவர் மாடியில் இருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் நிலையத்தில் கூறலாம் என்று தீர்மானித்தாள். மிகவும் சிரமப்பட்டு உடலை படிக்கட்டுகள் வழியே கீழே இழுத்துக்கொண்டு வந்தாள். ஆனால் உடலை கீழே போட்டு விட்டு மேலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறுவது சரியாக இருக்காது என்று அவளுக்கு அப்போதுதான் தோன்றியது. இப்போது வேறு உபாயம் தேடியாகவேண்டும்.

சட்டத்தரணிக்கு பிராடோ வாகனமொன்றும் டொயோட்டோ கார் ஒன்றும் இருந்தன. கராஜில் இருந்த அந்த கார்களுக்கு அருகில் உடலை இழுத்துக் கொண்டு வந்தாள். எப்படியாவது உடலை காரில் ஏற்றி எங்காவது சென்று அதனை வீசி விடுவதென திட்டமிட்டாள்.

சட்டத்தரணியின் உடலை காருக்குள் ஏற்றுவதற்கு அவள் மிகவும் சிரமப்பட்டாள். அவருடைய கனத்த உடலை தன்னந் தனியாக வாகனத்தில் ஏற்றுவது சாத்தியமாக இருக்கவில்லை.

வேறு என்ன செய்யலாம்?

பலமாக சிந்தித்தாள்.

ஒரு கும்பல் வீட்டுக்குள் நுழைந்து சட்டத்தரணியை கொலை செய்து விட்டு கீழே இழுத்துக் கொண்டு வந்ததாக பொலிஸில் கூறுவதற்கு அவள் தீர்மானித்தாள்.

அதுதான் சரி என நினைத்த அவள் உடனடியாக மேலே அறைக்குள் சென்று அங்கு சுவரிலும், தரையிலும் இருந்த இரத்த கறைகளை கழுவி சுத்தம் செய்தாள். இவ்வாறு முழு அறையையும் தனியே கழுவி சுத்தம் செய்த பிறகுதான் அவள் நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

காலை சரியாக 5.30 மணிக்கு அத்துருகிரிய பொலிஸுக்கு போன் செய்து தனது கணவனை ஒரு கும்பல் கொலை செய்து விட்டதாக தெரிவித்தாள்.

அத்துருகிரிய பொலிஸ்' நிலைய பொறுப்பதிகாரி ஆர். கே. புஷ்பகுமார உடனடியாக ஜீப்பில் குறிப்பிட்ட வீட்டுக்கு விரைந்தார். அவருடன் வந்த கான்ஸ்டபிள்கள் வீட்டை அலசினர். இன்ஸ்பெக்டர் புஷ்பகுமார சட்டத்தரணியின் வைப்பாட்டியான இளம் யுவதியை விசாரித்தார். பொலிஸ் சோதனையில் கொலையுண்ட சட்டத்தரணியின் போலி அடையாள அட்டையொன்றும் அவரது போலி தலைமுடி (விக்) ஒன்றும் கிடைத்தது.

சட்டத்தரணி மீது பெண்கள் தொடர்பான மூன்று வழக்குகள் விசாரணையில் இருந்ததும் தெரியவந்தது. இதேசமயம் அனுபவமற்ற அப்பெண் முன்னுக்கு பின்னாக தெரிவித்த தகவல்கள் அவள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தவே இளம் பெண்ணை பொலிஸார் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தனர்.

வழக்கு விசாரணை ஆரம்பமாகும்போது அப்பெண் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுவாரென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட இளம் பெண் தனது எஜமானரை அல்லது கள்ளக் கணவரை ஏன் கொலை செய்யவேண்டும்? அவரது செக்ஸ் தொல்லை தாங்க முடியாமல்தான் அவரை கொலை செய்தாரா? அல்லது அவரது சொத்தை அபகரிக்க திட்டமிட்டிருந்தாரா? என்பதை இனிமேல்தான் பொலிஸார் விசாரணையில் கண்டுபிடிப்பார்கள்.

கோப்பிக்காலத்தில்...

# எட்டும் தூரத்தில் இருந்த தமிழகம்

அரசர் காலத்தில் போர் வீரர்களாகவும் வர்த்தகர்களாகவும் கலைஞர்களாகவும் இலங்கைக்கு வந்த தென்னிந்தியர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தொழிலாளர்களாக இலங்கையின் மத்திய மலைப் பகுதிகளுக்கு வரத் தொடங்கினர். கோப்பிப் பயிர்ச் செய்கையின் போது கொழும்பிலும் வர்த்தக நோக்கங்களுடன் பெருந்தொகையான தென்னிந்தியர்கள் தங்கியிருந்தனர். கோப்பிக் காலத்தில் கோப்பிப் பழங்களைக் கொய்து வேலை முடித்ததும் நாடு திரும்பிவிடும் பழக்கத்தைக் கொண்டிருந்த இவர்கள், மன்னாரில் இருந்து படகுகளிலே தென்னிந்தியா திரும்பினர். தேயிலை யுகம் ஆரம்பமான பின்னரே தோட்டங்களிலேயே தொழிலாளர்கள் தங்கத் தொடங்கினர். அப்போதெல்லாம் ரயில் சேவை வந்துவிட்டது. இத்தோடு சிலோன் ரயில் சேவையில் டிக்கட் வாங்கினால் தென்னிந்தியாவில் சொந்த ஊருக்கே போய் சேர்ந்துவிடலாம். இலங்கையும் இந்தியாவும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்ததால் தினசரி படகு சேவையும் இருந்தது. குறைந்தபட்சம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவையேனும் ஒரு தென்னிந்திய தொழிலாளர் குடும்பம் தமிழகத்தில் தமது சொந்த ஊருக்குப் போய் திரும்புவது வழமை. குடியுரிமை சட்டம் வந்ததும் இந்தியா இலங்கை படகு போக்குவரத்தில் கட்டுப்பாடுகள் வந்தன. ரயில் சேவை நிறுத்தப்பட்டது. பெரும்பாலான தொழிலாளர்களுக்கு குடியுரிமை மறுக்கப் பட்டதால் இந்திய பயணம் கனவாகியது. இதன்பின்னர் ஸ்ரீமா-சாஸ்த்திரி உடன்படிக்கை கைச்சாத்தான பின்னரே இந்தியா திரும்பும் படலம் மீண்டும் ஆரம்பமானது. பல்லாயிரக்கணக்கானோர் நுவரெலியா, ஹட்டன், பதுளை போன்ற தூர இடங்களில் இருந்து ரயில் மூலம் மூட்டை முடிச்சுக்களுடன் மன்னார் சென்று தாயகம் திரும்பத் தொடங்கினர். இப்போது பாஸ்போர்ட் பெறுவது சிரமமானதொன்றல்ல என்றாலும் விமானக் கட்டணமாக பெருந் தொகைப் பணத்தை செலவு செய்ய வேண்டியிருப்பதால் தொழிலாளர் குடும்பங்கள் இந்திய பயணங்களை மேற்கொள்வது குறைவே.



இப்புகைப்படத்தில் மலையக ரயில நிலையமொன்றில் பெண்மணியொருவர் இந்தியா திரும்புவதற்காக ரயில் ஏறும் காட்சியைக் காணலாம். இன்றைய தலைமுறையினரால் பெரும்பாலானோர் பூர்வீக குடும்ப உறவுகளைத் தொலைத்து விட்டதால், ஊர் சுற்றிப் பார்க்கத்தான் தமிழகம் செல்கின்றனர். தமிழகத்தில் எங்கள் பாட்டனாரின் ஊர் இதுவென்று சொல்லிக் கொள்ளமட்டுமே இவர்களால் முடியும். தமது குடும்ப பூர்வீகத்தை நிரூபிக்க கூடியவர்களுக்கு பி.ஐ.ஓ குடியுரிமை பெறும் வாய்ப்புள்ளது.

# சிங்களம் மட்டும் மசோதா பாராளுமன்றம் வந்தபோது...



என்.எம்.பெரேரா | எஸ்.ஏ.விக்ரமசிங்க | எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க | கொல்வின் ஆர்.டி. சில்வா

1950 ஆம் தசாப்தத்தின் நடுப்பகுதியாகும் பொழுது இலங்கையின் சிங்கள பௌத்த மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. 1956 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த புத்த ஜயந்தி வைபங்கள் இப்புத்துணர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்ததுடன் சிங்கள பௌத்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி சமூகத்தில் பரவலாக பேசப்பட்டு வந்தது. சிலவேளைகளில் ஏனைய இனங்கள் சிங்கள பௌத்த மக்களின் வரப்பிரசாதங்களையும் உரிமைகளையும் சுவீகரித்துக்கொண்டதனால் இப்பிரச்சினை ஏற்பட்டதென்றும் சிங்கள சமூகம் சந்தேகம் கொண்டிருந்தது.

சிங்கள மக்கள் எதிர்கொள்ளும் இப்பிரச்சினைகள் அலசி ஆராயப்பட வேண்டும் என்று ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பயனாக 1953ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி கேகாலையில் அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் உச்சி மாநாடு நடைபெற்றது. பௌத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இந்நாட்டு சிங்கள பௌத்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளை விசாரிப்பதற்கு ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் ஜி.பி. மலலசேகர அங்கு தெரிவித்தார்.

இதற்கமைய 1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த தகவல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவில் பிரபல்யம் பெற்ற பௌத்த பிக்குகளும் ஜ.பி மலலசேகர, பி.டி.எஸ் குலரட்ன, டி. ஆர். விஜேவர்தன, தென்னகோன் விமலானந்த போன்ற கல்விமான்களும் அங்கம் வகித்தனர்.

இந்த ஆணைக்குழு தனக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக விசாரித்து தமது அறிக்கையை 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி வெளியிட்டது. இவ்வறிக்கை, நாட்டுக்குள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் இனம், மதம், மொழி மற்றும் கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த விதப்புரைகள் சிறுபான்மையினரின் உரிமைகளை அடிமைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டவை என தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் கருதின.

சோல்பரி அரசியல் யாப்பின் 29 (2) சரத்தின் 2ஆவது உப பிரிவை நீக்கிவிடவேண்டும் என்றும் தனியார் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென்றும் எவையேனும் ஒரு பாடசாலையில் ஓர் குறிப்பிட்ட அச் சமயத்தை பின்பற்றும் மாணவர்கள் தொகை 57 வீதத்தை தாண்டுமாயின் அப்பாடசாலையின் அதிபர் அச் சமயத்தை பேணும் ஒருவராக இருத்தல் வேண்டும் என அந்த விதப்புரைகளில் கூறப்பட்டிருந்தது.

1955ஆம் ஆண்டளவில் மொழிப் பிரச்சினை இந்நாட்டின் ஆழ்ந்த பரபரப்பை ஏற்படுத்திய பிரச்சினையாக உருப்பெற்றுக்கொண்டிருந்தது. 1955ஆம் ஆண்டு ஐ.தே.க சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாண கொக்குவில் நகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின்போது சேர் ஜோன் கொத்தலாவல சிங்கள மொழியும் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக்கப்படவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை வெளியிட்டார். இத்துடன் தெற்கே வாழ்ந்த சிங்கள மக்களிடையே இச்சம்பவம் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

1955ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இலங்கை சமசமாஜக்கட்சியின் தலைவரான என்.எம் பெரேரா சிங்கள மொழியும் தமிழ் மொழியும் அரச கரும மொழிகளாக்கப்படவேண்டும் என்ற ஒரு பிரேரணையை முன்மொழிந்தார். ஆயினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் புரட்சிவாத சமசமாஜ கட்சியும் சிங்கள மொழி மட்டும் அரச கரும மொழியாக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தது.

இவ்வாறு சிங்கள மொழி மட்டும் அரச கரும மொழியாக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு சிங்கள பௌத்த மக்களின் பரவலான செல்வாக்கு குறைவற்று கிடைத்தது.

பௌத்த ஆணைக்குழுவின் விதப்புரைகளையும் நாட்டின் மொழிப்பிரச்சினையையும் ஒன்றிணைத்து எஸ்.டப்ளியூ.ஆர்.டி பண்டாரநாயக்கா சிங்களத்தில் தமது அரசியல் உபாயமார்க்கங்களை தயார் செய்து கொண்டிருந்தார். குறிப்பாக மொழி, மதம், என்ற உணர்ச்சி பூர்வமான ஆயுதங்கள் இரண்டையும் தமது அரசியல் சதுரங்க விளையாட்டில் பிரதான அச்சாணிகளாக பயன்படுத்தினார். இது எமது நாட்டு அரசியல் வரலாற்றில் மிகவும் தீர்க்கமான ஒரு கட்டத்தை பிரதிபலிக்கிறது எனலாம்.

இதற்கிடையில் 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு நம்மை தயார் படுத்திக்கொண்டிருந்த ஐ.தே.க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தேர்தலில் சமாளிக்க வேண்டுமாயின் தமது மொழிக் கொள்கையையும் மாற்றியமைக்க வேண்டுமென்று கருதியது. இதன் பயனாக 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி கௌனியவில் நடைபெற்ற ஐ.தே.க பொதுக்கூட்டத்தில் சிங்கள மொழி மட்டும் அரச கரும மொழியாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வாறு ஐ.தே.க 1956 பொதுத்தேர்தலுக்காக மொழிக் கொள்கையை மாற்றியமைத்தமை, ஐ.தே.கவுடன் இணைந்திருந்த தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களை பெரிதும் புண்படுத்தியது. அவர்கள் எவ்வளவு தூரம் மனமுடைந்திருந்தார்கள் என்றால், அவர்கள் சேர் ஜோன் கொத்தலாவலவிடம் சென்று தமது நிருவாக பிரசேங்களுக்கு வேறாக ஒரு அரசு தேவை என்று கூறுமளவுக்கு நிலைமைகள் மாற்றமடைந்திருந்தன.

இது எமது அரசியிலில் ஒரு முக்கியமான சம்பவம். ஏனெனில் இந்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமது நிர்வாக பிரதேசங்களுக்கு ஒரு பிரத்தியேகமான அரசு தேவை என்ற யோசனையை முன்வைத்தபோது அதற்கு ஈழம் என்று பெயர் சூட்டப்படாவிட்டாலும் கூட தனியான அரசு என்ற எண்ணக்கரு 1956களிலேயே கருக்கட்டியிருந்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) வெற்றி பெற்று அரசாங்கத்தை எஸ்.டப்ளியு.ஆர்.டி பண்டாரநாயக்க தலைமையில் அமைத்தது.

பண்டாரநாயக்க சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவதாக அறிவித்த வாக்குறுதியை நிறைவேற்ற 1956ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதி அரச கரும மொழி சட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இம்மசோதா முன்வைக்கப்பட்டபொழுது பாராளுமன்றத்தில் காரசாரமான விவாதங்கள் ஏற்பட்டன. அந்த விவாதத்தை பற்றி சிறிது விபரமாக நாம் விடயங்களை ஆராய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இச்சட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் முன்வைத்த அதன் இரண்டாவது முறை வாசிப்பு நடைபெற்றது. அதன் விவாதம் 1956 ஜுன் மாதம் 14 ஆம் திகதிக்க நடைபெறுவதாக முடிவு செய்யப்பட்டது. மூன்றாவது விவாதத்துக்கு தயாராகும் சந்தர்ப்பத்தில் பருத்தித்துறை எம்.பி ஜி.ஜி.பொன்னம்பலம் ஓர் பிரேரணையை கொண்டு வந்தார். இம்மசோதாவின் மூன்றாவது வாசிப்பு இன்று தொடக்கம் ஆயிரம் வருடங்களுக்கு பின்னரே மேற்கொள்ளப்படவேண்டும் என்பது அவரது முன்மொழிவாக இருந்தது. எனினும் அப்பிரேரணை சபையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மூன்றாவது வாசிப்பின் மீது வாக்கெடுத்த பொழுது அரச கரும மொழி மசோதாவுக்கு ஐ.தே.கட்சியும் ஆதரவாக வாக்களித்ததை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ் பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்த மக்கள் பிரதிநிதிகளுக்கும் இதை எதிர்த்து வாக்களித்தனர். மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் 37 வாக்குகளால் இம்மசோதா அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்விவாதத்தின்போது ஜி.ஜி பொன்னம்பலம் மூன்று நாட்களாக சபையில் உரையாற்றி இம் மசோதாவினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைப் பற்றி சபையோருக்கு எடுத்துக் கூறினார்.

இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்கு புறம்பாக சி. சுந்தரலிங்கமும் கலாநிதி என்.எம் பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வாவும் உணர்ச்சிப்பூர்வமாக உரைகள் ஆற்றினர்.

இம்மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பாராளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. சபையை கட்டுப்படுத்துவதில் சபாநாயகர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்.

அது எவ்வாறு இருப்பினும் இம்மசோதா பற்றி மூன்றாவது வாக்கெடுப்பை முடித்துவிட்டு 1956 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14 ஆம் திகதி பண்டாரநாயக்க ஆற்றிய உரையின் ஒரு பகுதியை குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

''தமிழ் மக்களை கீழ்நிலைக்கு தள்ளவோ அல்லது அடிமைத் தனத்துக்கு இட்டுச்செல்லவோ நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்பதை என்னுடைய நண்பர்களுக்கு ஆணித்தரமாக கூற நான் விரும்புகிறேன். அவர்களை இந்நாட்டின் அடிமைகளாக ஒருபோதும் நாங்கள் கருதியதில்லை. சபாநாயகர் அவர்களே, சிங்கள மக்களிடையே அவ்வாறான ஒரு தீய எண்ணம் இருக்கிறது என நான் ஒருபோதும் நம்பமாட்டேன். சிங்கள மொழி மட்டும் இந்நாட்டின் அரச கரும மொழியாக்கப்படவேண்டும் என்ற கருத்து விழிப்பிற்கு முக்கியக் காரணம். சிங்கள மொழி முற்றாக அற்றுப்போய் சிங்கள இனமும் அழிந்து விடும் என்ற பீதியேயாகும். இப்பீதி அடிப்படையற்ற ஒன்றல்ல. சிலவேளைகளில் நீங்கள் என்னுடன் ஒருமைப்படாமல் போகலாம். ஆனால் இதை நம்புமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

நாம் அனைவரும் இச்சட்ட மசோதாவை நடைமுறைப்படுத்துவதில் எழும் பிரச்சினைகளை பற்றி மட்டும் அல்ல. அதன் பின்பு ஏற்படக்கூடிய பல இன்னல்களைப் பற்றியும் வேறு முறையில் கலந்துரையாட முயற்சிக்கவேண்டும். இம்மசோதா நிறைவேற்றப்பட்ட பின்பு மிகவும் அமைதியாக இவ்விடயங்களை பற்றி நாம் கலந்துரையாடவேண்டும்.

இச்சபையின் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் சட்டமாக்கப்படவிருக்கும் இம் மசோதாவின் பிரதான குறிக்கோளான சிங்கள மொழியை அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்படுவதை பாதிக்காத வண்ணம் வேறு எந்தவொரு முறையிலும் சட்டப்பிரச்சினைகளையும் குறைப்பாடுகளையும் அலசி ஆராய நாங்கள் கலந்துரையாட தயாராகவே இருக்கிறோம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்'' என்றார்.

1956ஆம் ஆண்டு சிங்கள மொழியை அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தி அச்செயற்பாட்டின் மீது லங்கா சமசமாச கட்சி, முற்போக்கு ரீதியாக கருத்து வெயிட்டதுடன் ஒரு நடுநிலைக் கொள்கையை கடை பிடித்தது.

இவ்விவாதத்தில் உரையாற்றிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, ஒரு மொழி என்றால் இரு நாடுகள், இரு மொழிகள் என்றால் ஒரு நாடு என்று குறிப்பிட்டார்.

என்.எம். பெரேரா உரையாற்றுகையில் நெருப்புடன் விளையாட வேண்டாம் என்று பண்டாரநாயக்காவை எச்சரித்தார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இச்சந்தர்ப்பத்தில் ஒரு நடுநிலைக் கொள்கையை கடைப்பிடித்தது. முற்போக்கு கருத்துக்களை வெளியிட்டது. இவ்விவாதத்தில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான எஸ்.ஏ விக்ரமசிங்க கூறிய இவ்வார்த்தைகள் அதற்கு சான்று பகர்கின்றது.

''இன்று மொழிப் பிரச்சினையினால் ஏற்பட்டுள்ள இப்போராட்டம், தேசிய அபிவிருத்திக்கு குந்தகமாக அமையும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழப்பதுடன் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு தடையாகவும் இருக்கும் என்பதால் அது பற்றி சில விடயங்களை முன்வைக்க நான் விரும்புகிறேன்.

கடந்த தேர்தலில் சிங்கள மொழி மட்டும் அரச கரும மொழியாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்த சந்தர்ப்பத்தில் தமிழ் மொழி பேசும் சிறுபான்மை மக்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றாது விடுவதன் பின்விளைவாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.''

இவை யாவும் இன்று எவ்வளவு தீவிரமாக இருந்தபோதிலும் சிங்கள மொழி மட்டும் அரசகரும மொழியாக்கப்படவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுவதற்கு முன்பு இலங்கையின் சகல கட்சிகளுக்கும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிக்கும் அரசகரும மொழியாக்கப்படவேண்டும் என்ற கருத்தையே கொண்டிருந்தன.

சிங்கள மொழி அரச கரும மொழியாக முழுமையாகச் செயற்படவேண்டுமெனின் அதற்கான செயற்பாடுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆனால் அக்கடமைப்பாங்கு இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அது தொடர்பான பல தடைகள் இருக்கின்றன. ஆயினும் அத்தடைகள் தமிழ் மொழிக்கு ஓரிடத்தை அளிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

(31ஆம் பக்கம் பார்க்க)


மாயர்களின் கிராம வாழ்க்கை

# அட, அடுத்த மாதம் உலகம் அழிந்துவிடுமாமே!

மனித இனத்தின் ஆயுளுக்கு கெடு வைத்திருக்கும் இந்த மாயன் இனம் பண்டைய கால மத்திய அமெரிக்க நாகரிகம் என்று குறிப்பிடப்படுகிறது. மாயா, மாயன் பெயர்களின் அடிப்படையை ஆராய்ந்தால் அது ஏதோ இந்திய நாகரிகம் போலத்தான் தோன்றுகிறது. அமெரிக்காவில் இந்த நாகரீகம் பிறந்திருந்தால் பெயரில் செவ்விந்திய வாடை அடித்திருக்க வேண்டும். ஆனால் எந்த சம்பந்தமும் இல்லாமல் அங்கே மாயன் என்ற பெயர் முக்கியமானதாக கருதப்படுகிறது. சான் (700 கி.பி) என்ற மன்னனின் ஆட்சிக் காலத்தில் மாயர்கள் இதைக் காட்டியதாக கூறப்படுகிறது. இங்கே 145 அடி உயரத்தில் மன்னர் அடக்கம் செய்யப்பட்ட ஒரு இடமும்


கட்டடக் கலையில் சிறந்து விளங்கினர்

இவர்களின் ஆட்சிமுறை, போர்களில் பெற்ற வெற்றி மற்றும் பல முக்கிய தகவல்கள் Heiroglyphik எழுத்து வடிவில் செதுக்கப்பட்டுள்ளது. மாயன்கள் தூர தேச வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை Bonamak என்ற இடத்தில் அமைந்த மாயன்களின் சிற்ப கலைகள் எவ்விதப் பாதிப்பும் இன்றி கிடைக்கப் பெற்றதால் ஆராய்ச்சியாளர்கள் இவற்றை முறையாகத் தங்களது ஆய்விற்குப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. இச்சிற்பங்கள் மாயன்களின் நாகரிக வளர்ச்சியைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. உயரமான

# சீரும் சிறப்புமாக வாழ்ந்த மாயர்கள்

எப்படி வந்தது என்பது ஒரு புதிராகவே உள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிடக்கலையில் கரைகண்டவர்களாக இந்தியர்கள் இருந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மருத்துவம், கலாசாரம், விவசாயம், கணிதம், எழுத்துமுறை, வானியல் என்று அனைத்து துறைகளிலும் இந்தியர்கள் சிறந்து விளங்கியிருப்பதை வரலாற்று தகவல்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்தக் காலக் கட்டத்தில் இலைதழைகளை ஆடையாக அணிந்துக் கொண்டு மேற்குலக மக்கள் காட்டுக்குள் வாழ்ந்தார்கள் என்பதுதான் வரலாறு. எனவே மாயன் என்ற இந்த இந்திய இனம் பிழைப்புக்காக மத்திய அமெரிக்காவிற்கு சென்றிருக்கவேண்டும் என்றும் பின்னர் அங்கேயே குடியேறி இருக்க வேண்டும் என்றும் ஒரு கோட்பாடு உண்டு. அதாவது,

தமிழகத்திலிருந்து பிழைப்புக்காக சென்று இலங்கை, மலேசியா, பர்மா, உள்ளிட்ட நாடுகளில் குடியேறியதுப்போல. அப்படிப்பார்த்தால் முதல் புலம்பெயர் தமிழர்கள் இவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்றும் கூட சொல்லாம்.

மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கு தேவதச்சன் ஒரு அரக்கு மாளிகை கட்டிக்கொடுத்தாக கூறப்படுகிறது. தேவதச்சனுக்கு மயன் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. எனவே மயன்தான் மருவி பிற்காலத்தில் மாயனாகி இருக்கலாம் என்கிறது இந்தக் கோட்பாடு. கி.மு 2600 ஆண்டுகளுக்கு முன்பே மாயன் நாகரிகம் இந்தியர்களுக்கு ஒத்த அனைத்து துறைக-ளிலும் வளர்ச்சி அடைந்திருந்தார்கள் என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியம்.

மத்திய அமெரிக்க பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட மாயன் கண்டுபிடிப்புக்களில் Tikal (டிக்கல்) என்று குறிப்பிடப்படும் ஒரு கோயில் கல்லறையும் இருக்கிறது.

COPAN (கொபன்) என்ற சிதைந்த சிலையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த சிலை பிற்காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் புனரமைக்கப்பட்டுள்ளதாக குறிப்புகள் உள்ளன.

மாயர்களின் சூரியனுக்கான கோவில் (Temple of the sun) தஞ்சை பெரிய கோயிலின் கட்டிட பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சூரியக் கோவில் பாம்பு ஜாகுவார் என்று அறியப்பட்ட ஒரு ராஜாவுக்காக கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இக்கோவில் ஒரு மேடையின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளமைப்புக்குள் பதிவுகள், குறிப்புகள், மற்றும் படங்கள் உள்ளன.

மாயன் இனத்தவர்கள், அவர்களின் பொற்காலத்தின் போது பல துறைகளில் நுணுக்கங்களை ஆராய்ந்திருக்கிறார்கள். கலைத்திறனும் புத்திக் கூர்மையும் பெற்று விளங்கினார்கள். 16ம் நூற்றாண்டின் போது தென் அமெரிக்கப் பகுதியை ஆட்சி செய்த ஸ்பெயின் நாட்டினரின் கடுமையான தாக்குதலால் இப்பகுதி அடியோடு அழிந்து போனது. அவர்களின் கண்டுபிடிப்பும் எழுதிய நூல்களும் அச்சமயம் அக்கினிபகவானுக்கு இரையாக்கப்பட்டன.

தஞ்சை பெரிய கோவிலின் மாதிரியை ஒத்திருக்கும் பிரமிட் போன்ற சூரியக் கோவிலை சுற்றிலும் 4 பெரிய படிகட்டுகளும் அவற்றுள் அடங்கிய 365 படிக்கட்டுகளும் காணப்படுகின்றன. இவை யாவும் ஒரு ஆண்டிற்கான 4 காலங்களையும் 365 நாட்களையும் குறிப்பதாக கூறப்படுகிறது. அவர்கள் சூரியன், சந்திரன்,புதன்,சுக்கிரன் போன்றவற்றின் சுழற்சி முறைகளை வெகுவாக அவதானித்து ஆவணப்படுத்தியிருந்தனர். சந்திர மற்றும் சூரிய கிரகணங்களை முன்கூட்டியே கணக்கிட்டுத் தீர்மானிக்கும் அளவிற்கு திறன் பெற்றிருந்தனர். சடங்குகளில் அதீத நம்பிக்கை பெற்றிருந்த மாயன்கள் வானியல் நிகழ்வுகளை அடியோட்டியே சடங்குகளை நடத்தினர். ட்ரெடெக்ஸ் எனப்படும் மாயன் பஞ்சாங்கக் குறிப்பேட்டிலிருந்து இதற்கான ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன. மாயன் நகர பகுதியில் காணப்படும் Stelae எனப்படும் கல் வகையில் மலைப்பாங்கான இடத்தில் அமைந்திருக்கும் பிரமிடுகளின் மேல் கோவிலை அமைப்பதால் இறைவன் இருக்கும் சொர்க்க வாசலை அவர்கள் சுலபமாக நெருங்க முடிவதாக நம்பிக்கை கொண்டிருந்தனர்.

19ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மாயன் நாகரிக எழுத்துக்களை கண்டுபிடித்து அவற்றை ஆராய்ந்ததில் ஸ்பெயின் நாட்டினரின் படையெடுப்பும், பல்லாயிர கணக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டதும் வருத்தத்துடன் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர்களின் நான்கு புனித நூல்களில் மூன்றும் நான்காம் நூலின் சில பக்கங்களும் மட்டுமே கிடைத்துள்ளது.

மாயர்கள் 20 அடிமான (bass 20) எண் முறையை மாயன்கள் பயன்படுத்தினர். மாயன்களின் கணிதத் திறமைக்கு சான்று அவர்களின் பூஜ்ஜிய பயன்பாட்டு முறையாகும். மாயன்கள் எண்களை குறிப்பிட மிக எளிமையான அதே சமத்தில் மிகப் பெரிய எண்களைக் கூட எழுதவல்ல ஒரு குறியீட்டு முறையைக் கையாண்டார்கள். இக்குறியீட்டு முறை ஒரு "-" மாதிரியான கோடு ஒரு புள்ளி ஒரு நீள்வட்டக் குறி ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்கியது.

மாயர்கள் வாழ்ந்தாக கூறப்படும் மத்திய அமெரிக்காவின் (Guatemmala) குவதிமாலா என்ற பெயரே மருவி கௌதமாலவாகி போனதாகவும் அந்தப் பகுதியில் உள்ள சில இடங்கள் இன்னும் இந்திய சாயல் கொண்ட பெயர்களாலேயே அழைக்கப்படுவதாகவும் சொல்கிறார்கள்.

மணி ஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com



# "மத்துகமையிலேயே என் வசந்தகால காதலிகளைச் சந்தித்தேன்"

இ ஆடுகளத்தில் என்னோடு "பேட்டைக்காரன்" பாத்திரத்தில் நடித்த ஜெயபாலன் தமிழகத்திற்கு கிடைத்த ஆச்சரியம். அவரது தோற்றத்திற்கு படத்தில் நடிக்கவே தேவையில்லை. சும்மா கெமராவுக்கு முன்னாடி வந்தாலே போதும் என்று ஜெயபாலனுக்கு நற்சான்றிதழ் வழங்குகிறார் தனுஷ்.

நம் நாட்டு நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளரே ஜெயபாலன். தற்போது தமிழ் சினிமாவில் மிகவும் பிஸியாக இருக்கிறார்.



"வனயுத்தம்" சூட்டிங் முடிந்து வடபழனியில் உள்ள அவரது இல்லத்தில் ஓய்வாக இருந்தபோது அவரை சந்தித்தோம்.

என்னுடைய மூச்சு எழுத்துதான். சினிமாவுக்கு வந்தது ஒரு விபத்து என்றுதான் சொல்லவேண்டும். பாலுமகேந்திரா எனது நெருங்கிய நண்பர். எனது படைப்புகளை பார்த்து ரசித்து பாராட்டுவார். ஒரு முறை பாலுமகேந்திராவை சந்தித்தபோது அங்கே பாலுமகேந்திராவிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய வெற்றிமாறன் இருந்தார்.

என்னை கண்ட அவர், நான் அடுத்து செய்யபோகும் படத்தில் ஒரு பாத்திரம் இருக்கிறது. அது உங்களுக்கு பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன் என்றார்.

நான் பள்ளிக்கூட நாடகத்தில் கூட நடித்தது கிடையாது. நான் நடித்தது எல்லாம் என் மனைவியின் முன்னாடிதான் என்றேன். அதோடு நான் ஒரு வனங்காமுடி. என்னை மனேஜ் பன்றது உங்களுக்கு கஷ்டம் என்றும் வெற்றியிடம் சொன்னேன். ஆனால் வெற்றிமாறன் விடவில்லை. என்னை நடிக்க வைத்தார். சினிமா சம்பந்தமான சில நுணுக்கங்களை எனக்கு கற்றுக்கொடுத்தார்.

நேர்கண்டவர்:- மணிஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com

படத்தில் எனக்காக ராதாரவி டப்பிங் கொடுத்தார். இந்திய தேசய விருது பெற சில நிபந்தனைகள் உள்ளன. அதில் ஒன்றுதான் சொந்தக் குரலில் பேச வேண்டும் என்பது.

அதனால் எனக்கு தேசிய விருது கிடைக்கும் என்று நினைக்கவில்லை. ஆனால் என் நேரம். எனது சிறப்பான நடிப்பை பார்த்த தேர்வுக்குழு நிபந்தனைகளை தளர்த்தி எனக்கு விருதை அறிவித்தது. என்னால் தமிழ் திரையுலகத்திற்கு விருது விசயத்தில் ஒரு நல்லது நடந்ததாக பலர் பாராட்டினார்கள்.

தற்போது அர்ஜுனுடன் "வனயுத்தம்" படத்தில் நடித்திருக்கிறேன். தொடர்ந்து வாய்ப்புகள் வந்துக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் சின்னப் பாத்திரங்களை தவிர்த்து, பெரிய பாத்திரங்களில் மட்டுமே நடிக்கிறேன் என்று சொல்லும் ஜெயபாலன் நெடுந்தீவில் பிறந்து ஆரம்பகல்வியை உடுவில் ஆரம்ப பாடசாலையில் கற்றவர். இவரது அம்மா ராசம்மா உடுவில் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றியிருக்கிறார். அப்பா சண்முகம்பிள்ளை ஒரு வர்த்தகர். களுத்துறை மாவட்டத்தில் உள்ள மத்துகமை நகரில் கடை நடத்திவந்திருக்கிறார்.



எனது ஆரம்பக்கல்வியை தொடர்ந்து நான் மத்துகமை சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். மத்துகமை வாழ்க்கை எனக்கு ஒரு சுகமான அனுபவம். "அவளது கூரையின் மீது நிலா ஒளிர்கிறது" என்ற உயிர்மை பதிப்பகத்தின் வெளியீடான எனது குறுநாவல் தொகுதியின் முதல் கதை மத்துகமை கதைத்தான். நான் சென்மேரிஸ்சில் படித்தபோது அங்கே இருந்த நண்பர்களை மறக்க முடியாது. அதைபோல் என் வசந்தகால காதலிகள் அங்கேதான் இருக்கிறார்கள். அவர்கள் இப்போ எங்கே இருக்கிறார்களோ தெரியாது. ஒரு காதலி தோட்ட கணக்குபிள்ளையின் மகள். மற்றவர் ஒரு சிங்களப் பெண். அந்த இனிமையான நாட்களை நினைத்தாலே சிந்தையெல்லாம் இனிக்கிறது.

மத்துகமை நகரில் "பாய் சண்முகம்பிள்ளை அன் சன்ஸ்" என்பதுதான் எங்கள் கடையின் பெயர். எங்கள் கடையை இரண்டாக பிரித்து ஒரு பகுதியை புத்தகக் கடை செய்யும் வினாசித்தம்பிக்கு கொடுத்திருந்தோம். அந்த கடைக்கு வரும் வினாசித்தம்பியின் மகன் கிருபாகரன் எனக்கு புத்தகங்களை வாசிக்க கொடுத்து எனக்குள் எழுதும் ஆர்வத்தை விதைத்தார். அத்தோடு அவரே சில கவிதைகளை எனது பெயரில் எழுதி சுதந்திரன் சஞ்சிகைக்கு அனுப்பி வைப்பார். அவற்றில் சில எனது பெயரில் சுதந்திரனில் வெளியாகி இருக்கிறது. அப்போது எனக்கு பத்து, பதினைந்து வயதிருக்கும். கிருபாகரன் புங்குடுத்தீவைச் சேர்ந்தவர்.

மத்துகமையில் நான் படித்தபோது மயில்வாகனம் வீட்டில் தங்கியிருந்துதான் ஸ்கூலுக்கு போவேன். அவரது வீடு கலேவத்தையில் இருந்தது. அது ஒரு இறப்பர் தோட்டம். ரொம்பவும் இருள் நிறைந்து பசுமையாக இருக்கும். மயில்வாகனம் மாஸ்டரும் நன்றாக கவிதை எழுதுவார் என தனது மத்துகமை வாழ்க்கையின் சில பக்கங்களை புரட்டும் ஜெயபாலனின் படைப்புகள் நம் நாட்டின் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியாகி இருக்கின்றன.

பாடசாலை நாட்களில் என்னோடு படித்த முத்து சிவலிங்கம் என்பவரும் நானும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்து கவிதை எழுதிக்கொள்வோம். அப்போ ஒருநாள் ஆங்கில, தமிழ் இலக்கியத்தில் புலமை பெற்ற வன்னி தமிழ் மகா வித்தியாலத்தில் தலைமை ஆசிரியராக பணியாற்றிய காசிநாதன் ஆசிரியரை சந்தித்தேன். அவர் என்னிடம் பாடசாலை ஆண்டு மலருக்கு ஒரு கவிதை எழுதி தரும்படி கேட்டார். அப்போது நான் எழுதிய "பாரியாறு நகர்கிறது" என்ற கவிதை முதல் முறையாக அச்சேறியது. அதற்கு பிறகு எனது படைப்புகளுக்கு மல்லிகை ஜீவா களம் தந்தார். (31ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயபாலன் ஒரு கெட்டிக்கார மாணவன்

### மத்துகமைவாசி சிவபாலன் சொல்கிறார்...



அந்த காலத்தில் மத்துகமையில் இருபதிற்கும் மேற்பட்ட தமிழ்க்கடைகள் இருந்தன. கலாமதி ஸ்டோர்ஸ், சரஸ்வதி ஸ்டோர்ஸ், சண்முகம்பிள்ளை அன்ட் சன்ஸ், ராஜா ஸ்டோர்ஸ், வினாசித்தம்பி கடை, மணிக்கடை, ரோயல் சலூன்,எட்டியப்பன் கடை என்பவற்றை குறிப்பிடலாம். இதில் ஜெயபாலனின் கடை ரோயல் சலூனுக்கு பக்கத்தில்தான் இருந்தது. ஒரு கடையை இரண்டாகப் பிரித்து, ஒருபக்கம் புத்தகமும், மறுபக்கம் வெற்றிலை, பாக்கு புகையிலையும் விற்பனைக்கு இருந்தது. சண்முகம்பிள்ளை கடையில் யாழ்ப்பாண புகையிலைக்கு மத்துகமை பகுதியில் ஒரு தனி மவுசு இருந்தது.

நான் சிறுவனாக இருந்தபோது அந்தக் கடையில் அம்புலிமாமா, விகடன், வாங்கியிருக்கிறேன். இப்போ மத்துகமையில் பழையக் கடைகள் எதுவும் இல்லை. அந்த காலத்தில் இருந்த இந்திரா சலூன் இப்போ ஒரு புத்தகக்கடையாக மாறியிருக்கிறது. அது மட்டும்தான் இன்று தமிழ்க்கடை. ஜெயபாலனின் கடை இருந்த இடத்தில் மத்துகமை சந்தியின் சுற்றுவட்டம் இருக்கிறது.

நான் இரண்டாம் வகுப்பு படிக்கும்போது சென் மேரிஸ்சில் ஜெயபாலன் உயர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அவர் ஒரு கெட்டிக்கார மாணவன். ஜெயபாலனின் நண்பர் கிருபாகரனிடம் நான் படித்திருக்கிறேன் என்கிறார் மத்துகமை வாசியான நடேசன் சிவபாலன்.



தமிழ் சினமாவை கட்டியெழுப்பிய மகா நடிகர்களில் டி.எஸ்.பாலையாவின் பங்கு குறிப்பிடத்தக்கது. கதாநாயகனாகவும் வில்லனாகவும் நகைச்சுவை நடிகனாகவும் எடுத்துக் கொண்ட வேடங்களில் எல்லாம் வெளுத்து வாங்கியவர். தில்லானா மோகனாம்பாள், காதலிக்க நேரமில்லை படங்களில் அவரது நடிப்பை மறக்க முடியுமா?







குருவும் சிஷ்யனும்



இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.




சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் லேக்ஹவுஸ் இப்படித்தான் காட்சியளித்தது. இரண்டாவது படத்தில் அதன் இன்றைய தோற்றம்.

**மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்**

# எம்டனுக்கு எமனாக வந்த மனைவி



*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

அமரதாஸ ஒரு கடையை நடத்தி வந்தார். அதில் கிடைக்கும் வருமானம் அவருக்கும் மனைவிக்கும் தாராளம்.

அமரேவுக்கு அவரது கடை நன்றாக நடந்தால் போதும். வேறு என்ன நடந்தாலும் அவர் கவலைப்படமாட்டார். கடையை காலை சரியாக ஆறு மணிக்கு திறந்து விடுவார். இரவு 7 மணிக்கு மூடுவார். அவரது கடையில் இல்லாத பொருளே இல்லை. எதைக் கேட்டாலும் அது அங்கு நிச்சயம் இருக்கும். விலைதான் கொஞ்சம் அதிகமாக இருக்கும். என்ன விலையென்றாலும் பரவாயில்லை, பொருள் கிடைத்தால் போதும் என்ற நோக்கத்துடன் வருபவர்களுக்கு அமரே-யின் கடைதான் எல்லைக்கோடு. பத்துப் பதினைந்து ரூபா அதிகமாக கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். எனவே அமரே-யின் கடையில் கூட்டம் குறைந்திருந்தாலும் லாபம் அதிகமாகவே இருந்தது.

அமரேயின் வீட்டை அடுத்துத்தான் கடை இருந்தது. எனவே 6 மணிக்கு திறப்பதில் எந்த பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் கடையில் வேல செய்யும் சிப்பந்திகள் மூவரும் சரியாக ஆறு மணிக்கு கடை திறக்கும்போது அங்கு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அமரேவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வரும். இதனால அதே தெருவிலும் அடுத்த தெருவிலும் வசிக்கும் மூவரையே அமரே கடையில் வேலைக்கு அமர்த்தியிருந்தார்.

அமரேவுக்கு இருந்த 'கறார்' பழக்கம், கடையில் மட்டும் இருக்கவில்லை. வீட்டிலும் இருந்தது. காலை 6 மணிக்கு கடைக்கு செல்லும் அமரே, இரவு 8 மணிக்குத்தான் வீடு வருவார். பகலுணவைக் கூட ஒரு ஆள் அனுப்பி வீட்டில் இருந்து எடுத்துக்கொள்வார். அத்தனை கடைப்பைத்தியமாக இருந்தார். கடை முப்பது நாளும் திறந்திருக்கும்.

அமரேயின் இந்த பழக்கத்தால் மிகவும் கஷ்டப்பட்டவர் அமரேயின் மனைவி மாலினிதான். நாள் முழுவதும் வீட்டில் வேலைக்காரியாக, சமையல், துவைத்தல், மற்றும் வீட்டை நிர்வகித்தல் எல்லாவற்றையும் அவள்தான் செய்தாகவேண்டும். ஒரு வேலைக்காரி இருந்தாள். ஆனால் அத்தனை வேலைக்கும் ஒரு வேலைக்காரி எப்படிப்போதும்? எனவே அமரேயின் மனைவி மிகவும் விரக்தியுற்றிருந்தாள். அவருக்கு ஆறுதல் கூற எவரும் இருக்கவில்லை.

அமரேயின் கடைப் பைத்தியம் காரணமாக உற்றார் உறவினர் வீடுகளுக்கு போவது எப்போதோ ஒரு முறைத்தான். உறவினர்கள் எவரும் மரணமடைந்தால் மட்டும் அமரேயும் மனைவியும் போய் தலையை காட்டிவிட்டு வருவார்கள்.

மனைவியை தனியாக உறவினர் வீடுகளுக்கு சென்று வரவும் அமரே விடமாட்டார். அவ்வாறு போய்விட்டால் வீட்டில் எப்படி வேலை நடக்கும்? கடையை எப்படி நடத்துவது? என்று ஆயிரம் கேள்விகள் எழுப்புவார் அமரே.

அமரேயின் மனைவி கொஞ்சம் அடங்கி போகும் சுபாவம் கொண்டவரானாலும் விரக்தி காரணமாக அமரேயுடன் தர்க்கம் செய்வதற்கும் சரிசமமாக பேசுவதற்கும் பழக்கமாயிருந்தாள்.

மனைவி என்பவள் வேலைக்காரிதான். கணவனுக்கு சமைத்துப்போட்டு வீட்டைப்பார்த்துக்கொள்வதுதான் அவளது வேலை என்பது அமரேயின் கருத்து. அப்படித்தான் அவர் மனைவியை நடத்தி வந்தார்.

ஒருநாள் அமரேயின் மனைவியின் தங்கையின் கடைசி மகள் லதா பூப்பெய்தி விட்டதாக செய்தி வந்தது. மாலினி மிகவும் சந்தோஷப்பட்டாள். லதா மீது மாலினிக்கு ரொம்பவே பிரியம். அவளது பூப்புனித நீராட்டு விழாவுக்கு செல்ல வேண்டும் என்று தீர்மானித்தாள். அதைப்பற்றி கணவரிடம் கூறியபோது இந்த சின்ன சின்ன விடயத்துக்கெல்லாம் போய் பணத்தையும் நேரத்தையும் வீணாக்க வேண்டாம் என்று அமரே அடித்து சொல்லிவிட்டார்.

அந்த சம்பவம் நடந்து இரண்டாவது நாள் அமரேயின் அடுத்த கடைக்காரர் வீட்டில் ஒரு சின்ன விருந்து. அதற்குக் சென்று கொஞ்சம் மது அருந்திய நிலையில் வீட்டுக்கு வந்த அமரே, இரவுச் சாப்பாடு வேண்டாம் என்று கூறிவிட்டு நேரே படுக்கைக்கு சென்று விட்டார். விருந்துக்கு அமரே சென்றதும் அங்கு மது அருந்தியதும் கடைச் சிப்பந்தியின் மூலம் அமரேயின் மனைவிக்கு தெரிந்திருந்தது.

படுக்கையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அமரேயியைப் பார்க்கப்பார்க்க மாலினிக்கு ஏதோ விஷ ஜந்துவை பார்ப்பது போல் இருந்தது. முதல் நாள் அமரே சொன்ன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவள் காதில் ஒலித்தன.

தன்னை மட்டும் தங்கை வீட்டுக்கு போகவேண்டாமென கூறியவர் இன்று மூக்குமுட்ட அடுத்த கடைக்காரன் வீட்டு விருந்தில் குடித்துவிட்டு வந்து தூங்குவதைப் பார் என்று அவளது மனது கைக்கொட்டிச் சிரித்தது.

ஏமாற்றமும் ஆத்திரமும் ஒன்று சேரவே அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமற் போனது. நேராக குசினிக்கு சென்று அம்மிக்கல்லை தூக்கிக்கொண்டு வந்து நடு மண்டையில் ஒரேபோடாக போட்டு விட்டாள். அந்த அடியில் அமரே உடனடியாக பரலோகம் சென்றடைந்தார்.

பொலிஸ் விசாரணையில் அமரேயின் மனைவி மாலினி தனது கணவனை கொன்ற குற்றத்தை ஏற்றுக்கொண்டார்.

அமரேயின் மரணம் கொலை என தீர்மானித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. பாவம் அமரே. அனைவரையும் அடக்கியாண்ட அமரேவை அவரது மனைவி மொத்தமாக அடக்கிவிட்டாள்.

ஏ. மதுரை வீரன்



பேரன்: பாட்டி என் மேல் இவ்வளவு பாசமா இருக்கீங்களே!

பாட்டி: நீ தானடா நாளைக்கு எனக்கு கொள்ளி வைக்கணும்.

பேரன்: நாளைக்கு ஸ்கூல் போகணும். நான் இன்னைக்கே வைக்கிறேன்.



# பிரட்டுத் தப்பு





பன். பாலா

தெப்பக்குளத்து லயம் பிரசித்தமானது. காரணம் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் லயம் இருப்பதுதான்.

முன்பு அது சின்னக்கோவில். இப்பொழுது இலட்சங்களை உள்வாங்கி பிரமாண்டமாகி நிற்கிறது. தெப்பக்குளத்து லயம் அருகே முன்னர் தெப்பக்குளம் இருந்ததாம். தற்போது தூர்ந்து போய் ஒரு நான்கு அடி ஆழத்தில் சிறு பள்ளமாகத் தெரிகிறது. புதராக 'கெரா' புற்கள் மண்டி கால் வைக்கவே அச்சத்தைத் தரும் தோற்றம்.

உள்ளே பாம்பு புற்றொன்று இருப்பதாகவும் அதனுள் கருநாகம் குடியிருப்பதாகவும் சொல்கிறார்கள். மாடுகள் மட்டும் பயமின்றி மேய்கின்றன. தீனித் தேவை.

தெப்பக்குளத்து லயத்தில் நீள்வாக்கில் பதினொரு அறைகள். இதில் தற்போது ஏழு அறைகள் 'லய அறைகள் என்ற லேபிளைக் கழற்றிவிட்டு வீடுகளாக பரிணாமம் பெற்றிருந்தன.

முன்னால் இழுத்துக்கட்டி, வாசல் யன்னல்களை மாற்றி, பின்னால் சமையல் அறையைத் தனியாக்கி குளியலறைகள் கூட முளைத்திருந்தன.

திருத்தம் காணாத எஞ்சிய நான்கு அறைகளில் இருப்பவர்கள் ''முயற்சியற்றவர்கள்... அதனால் தான் வீட்டைக்கூட திருத்தாமல் வைத்திருக்கிறார்கள்' என்பது பக்கத்து வீட்டுக்காரர்களின் விமர்சனம்.

'பிள்ளைக்குட்டிகளை வளர்ப்பதே பெரும்பாடு. இதில் வீட்டைத் திருத்துவது எங்கே...? அவர்கள் பெரியவர்களாகி எதையாவது செய்யட்டும்'' என்பது பதில் வாதம்.

ஆக அந்த நாலு காம்பிராக் குடித்தனங்களில் வரம்புக்கு மீறிய வாரிசுகள்.

இடமிருந்து வலமாக ஐந்தாவதாக இருக்கும் வீடு முனியாண்டி தலைவர் வீடு. இது பரம்பரையாக வந்த பெயர் விலாசம். அந்த முனியாண்டி தலைவர் இப்பொழுது வீட்டுக்குப் 'பெரிசு' மட்டுமே. தலைமைத்துவம் எல்லாம் பறிபோய் கௌரவம் மட்டுமே எஞ்சி நிற்கிறது. பெயரைச் சொல்வதை விட 'பெரிசு' என்று சொன்னால் எல்லாருக்கும் புரியும். நாமும் அப்படியே சொல்வோம்.

அந்த வீட்டுக்கு முன்னால் பெரிய மாமரம். பெரிசு இன்றும் பெருமையாகப் பீற்றிக் கொள்ளும். ''நாவலப்பிட்டி காங்கிரஸ் மாநாட்டுக்குப் போறப்ப வாங்கியாந்த மாங்கன்று'' என்று. சும்மா சொல்லக்கூடாது. அந்த மாமரம் விசாலித்துத்தான் வளர்ந்திருந்தது. நூற்றுக் கணக்கில் காய்கள் காய்ச்சு அந்த டிவிஷனே சாப்பிடும்.

ஒரு முறை இந்த மாமரத்தால் பெரிய போராட்டமே நடந்தது.

மூத்த பேரப்பிள்ளை 'டிஷ் அண்டெனா' வாங்கி வந்தான். அலைவரிசை தெளிவாக தெரிய வேண்டுமானால் வீட்டு வாசல் வரை வளர்ந்து வளைந்து கவிழ்ந்து நிற்கும் மாமரக் கிளைகளை வெட்ட வேண்டும் என்றார்கள்.

பெரிசு ஒத்துக் கொள்ளவே இல்லை. ''மரத்துல கைய வைக்காதே'' என்று போர்க் கொடி தூக்கியது. ''பெரிசு ரொம்பவும் தான் துள்ளுது'' என்று குடும்பத்துக்குள் குசுகுசுப்புகள். முடிவில் வென்றது என்னவோ பெரிசுதான்.

பக்கத்து வீட்டுக் கூரையில் அண்டெனா தொற்றிக் கொண்டது. ''விடுவேனா வெட்ட'' என்ற வெற்றிப் பெருமிதம் பெரிசுக்கு.

பெரிசுவின் சரியான வயது பற்றி விவாதங்கள் ஆரம்பித்து பல வருடங்களாகியும் இன்னும் அனுமானங்களோடுதான் நிற்கிறது. தொண்ணூறுக்கும் நூறுக்குமிடையில் ஊசலாடும் வயசு. இந்த வயசிலும் அந்த மாமரத்து நிழலில் படங்குக் கட்டிலில் சாய்ந்து கொண்டு வெற்றிலை உரலில் வெற்றிலை இடித்து வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டே கதை பேசுவது எவ்வளது சுகமான அநுபவம்!

வளர்ந்த பேரப்பிள்ளைகள் படங்குக் கட்டிலை மாற்றச் சொல்லி எவ்வளவோ வற்புறுத்தியும் பெரிசு இணங்கவில்லை. ''டேய்...! மட்டிப்பயலுகளா... எங்கப்பன் உசர உட்ட கட்டுலு'' என்று அடம் பிடிக்கும். சாக்கைப் பிரித்து இணைக்கப்பட்ட ரீப்பைகளின் இருபக்கமும் நீள்வாக்கில் ஆணி வைத்து அடித்துவிட்டால் சரி. கட்டில் தயார். எழும்பியவுடன் ரீப்பைகளில் இணைக்கப்பட்ட படங்கை மடிக்க கீழே பெருக்கல் அடையாளம் கொண்ட கால்கள் மடங்கி கட்டில் சுருங்கிவிடும். சுவர் ஓரமாகச் சாத்தி வைத்து விடலாம்.

ஆறடி நீளமும் மூன்றடி அகலமும் இடமிருந்தால் போதும். எங்கு வேண்டுமானாலும் விரித்து ஜம்மென்று சுருண்டுக் கொள்ளலாம்.

''பெரிசு செத்தா இந்தப் படங்குக் கட்டில்ல வச்சு தூக்கிக்கிட்டுப் போய் பொதைங்கடான்னு சொன்னாலும் சொல்லும்'' என்பது இப்பொழுதெல்லாம் அடிக்கடி பேசப்படும் எதிர்வுகூறலாகிப் போய்விட்டது!

பெரிசு கதைச் சொல்வதில் சமர்த்து. தோட்டத் தலைவர் என்ற ரீதியில் அதன் போராட்டங்கள், சண்டித்தனங்கள், ஐயாமார்களோடு மோதிய அநுபவங்கள், எம்.ஜி.ஆர். படங்கள் என்று நிறைய சமாச்சாரங்கள் கதைகளாக வரும்.

அதனிடம் கதைக் கேட்பதற்கு ஆறேழு சிறுவர்கள் தயாராகவே இருந்தார்கள். தமாஷ் என்று எண்ணிக் கொண்டு ஏடாகூடமான கதைகளையும் சொல்வதுண்டு. அப்படிப்பட்டக் கதைகளில் ஒன்றை வகுப்பில் ஸ்டெல்லா டீச்சரிடம் கதை சொல்கிறேன் பேர்வழி என்று சிறுவன் ஒருவன் அவிழ்த்துவிட வெட்கக் கேடாகி போனதாம்.

'ஸ்டெல்லா டீச்சர் இப்பொழுதெல்லாம் அவனை கதைச் சொல்ல அனுமதிப்பதே இல்லையாம்.

வெற்றிலைக் குதப்பிக் கொண்டு பெரிசு கதைச் சொல்ல ஆரம்பித்ததால் சிறுவர்கள் தூரமாகி நின்றே கேட்பார்கள். பெரிசு பேசும்போது வெற்றிலைச் சாறு எகிறித் தெறிக்கும். நச்சென்று தும்மினால் எதிரில் இருப்பவர் மேல் வெற்றிலைக் கூட்டு அபிஷேகம் தான்.

'இந்தப் பெருசு கதச் சொல்லி புள்ளங்கள ஸ்கூலு போக விடாம பண்ணுது' என்பது சில தாய்மார்களது புலம்பல்.

''சிறுக்கிங்க... வெள்ளனா எந்திரிச்சி புள்ளைங்களுக்கு ஆக்கிக் குடுத்து ஸ்கூலு அனுப்ப மாட்டாளுங்க... எம்மேல பழியப் போடுறாளுக... கம்மணாட்டிக...'' பெரிசும் பதிலுக்குப் புறுபுறுக்கும்.

இப்பொழுது காலை நேரம். இரண்டு நாட்களாக தொடர்ந்து விளாசிய மழை இன்று ஓய்வெடுத்துக் கொள்ளும் அறிகுறி. சூரியனுக்குச் சுதந்திரம் கிடைத்ததன் வெளிப்பாடாக வெய்யில் வெதுப்பு. நேற்று மாலையே வானவில் தோன்றியிருந்தது.

மாமரத்து நிழலில் படங்குக் கட்டில் போட்டு குறுநில மன்னர் போல குந்தியிருக்கிறது பெரிசு. கட்டிலைச் சுற்றி பள்ளிக் கூடத்துக்கு மட்டம் போட்டுவிட்டுக் கதைக் கேட்க ஆர்வத்துடன் கூடி நிற்கும் ஆறு பேர் கொண்ட சிறுவர் கிரிக்கெட் அணி. டெண்டுல்கார், செவாக், டோனி, சங்கக்கார, லசித் மாலிங்க, சந்ரபோல் என்று பட்டப் பெயர்களும் அந்த அணிக்குள் அடக்கம்.

பெரிசு வெற்றிலைக் குதப்பி, கட்டிலுக்கு அடியில் தலைமாட்டுப் பக்கம் வைத்திருந்த வெண்கல பணிக்கத்தை எடுக்கச் சொல்லி 'புச்சக்' என்று துப்பிவிட்டு ஆரம்பித்தது.

''ஏய்! பயலுகளா... ஒங்களுக்கு இன்னைக்கி ஒரு நெசக் கத சொல்ல போவுறேன்...''

பீடிகையோடு துவங்கியது.

''அப்ப இவ்ள நாளும் பாட்டன் சொன்னதெல்லாம் பொய் கதயா...?

துடுக்குக்கார சிறுவன் கேட்டான்

''அடி நாதாரிக் கழுதப்பய... மொத கதயக் கேளுடா...!

பெரிசுக்கு பொசுக்கென்று கோபம் வரும். 'அண்டப்புளுகன்' என்ற பெயரும் பெரிசுக்கு இருப்பது அதுக்கும் தெரியும். பொய் இல்லாத கதையா?

''பெரட்டுத் தப்பு அடிக்கிற பொருமாளுனு ஒரு ஆளு இருந்தான். மேல காளி கோயில் லயத்துல ஆறாம் நம்பரு காம்புரா...''

''பெரட்டுத் தப்புன்னா...!''

நியாயமான ஒரு சந்தேகம் வந்தது ஒருத்தனுக்கு.

''தப்புங்கிறது ஒரு வாத்தியம். அப்பெல்லாம் வேலைக்குப் போவ ஆளுங்கள எழுப்பாட்றதுக்காக தப்படிப்பாங்க. இப்ப சங்கு ஊதுறானுங்களே அது மாதிரிதான்... காலங்காத்தால அஞ்சு மணிக்கெல்லாம் 'டெண்டணுக்கு... டெண்டணுக்கு'னு தப்புச் சத்தம் கேட்டுட்டா போதும்... தோட்டத்துச் சனமே வாரிச் சுருட்டிக்கிட்டு எந்திரிச்சி பெரட்டுக் களம் போறதுக்கு பறக்கும்... நீ முந்தி நான் முந்தின்னு ஓடுனாத்தான் லேசு வேல லூசு வேலன்னு புடிச்சிக்கலாம். ம்... இப்ப ஒங்க காதுல லவுட்ஸ் பீக்கரு வச்சி கத்துனா கூட எந்திரிக்க மாட்டீங்க...''

ஆனா இந்த பெரட்டுத்துத் தப்பு அடிக்கிற பெருமாளுக்கு காலங்காத்தாலேயே சாபங் குடுக்காத ஆளு இருக்காது. இந்த பெருமாளு அஞ்சி நிமிஷம் கூடப் பிந்தாம தப்படிச்சி தூக்கத்தக் கெடுக்கிறானேன்னு ஏசுவானுங்க. பெருமாளு இதுக்கெல்லாம் கவலப்படமாட்டான். ஆளும் பெரிய ராங்கிகாரன் தான். ரெக்ளாஸ் பேசுவான்.

''பெரட்டுத் தப்பு அடிக்கிற அழிச்சாட்டியம். சேவலு கூவிதான் பொழுது விடிதுன்னு சேவலு நினைக்குமாம் அதுமாதிரிதான் தப்படிக்கிறதுனாலத்தான் ஆளு வேலக்கிக்கி போவுதுன்னு அவன் நெனைப்பு...'' என்பார்கள்.

''தப்பு தப்புங்கிறியே அது எப்டி இருக்கும்..?''

வரவேண்டிய சந்தேகம் ஒரு பையனுக்கு வந்தது.

''கிழிஞ்சிச்சு போ!'' அட ராசுக்கோலு! கிட்டத்துல டி.வி பெட்டியில காமங்கூத்துனு காட்டுனாங்க இல்ல... அதுல ரவுண்ட கட்டி அடிச்சானுங்க பாத்தியா.. அதான்டா தப்பு. மாட்டுத் தோலு இல்லாட்டி ஆட்டுத் தோலு கொண்டாந்து பதம் பண்ணி ஒரு வளையத்துல எணைச்சி சடம்புல பின்னி எடுப்பானுங்க... மெனக்கட்டு செய்ற வேல... அப்ப எல்லாம் வாசிக்கிற வாத்தியங்களயும் செய்யுற வேலய வச்சுமே சாதிய சொல்லிடுவானுங்க... தப்படிச்சா பறயன், உறுமியடிச்சா மதுர பள்ளன், நாயணம் வாசிச்சா வள்ளுவன், கக்கூசு கழுவுனா சக்கிலியன்னு... இப்பத்தான் எல்லாம் மாறிப்போச்சே...!

தப்படிக்கிறதுக்குன்னு தோட்டத்துல ஒரு செட்டு இருந்திச்சி. பெருமாளு தான் அதுக்கு தலவரு. நல்லு, வீரன், சின்னமுத்து, குள்ளன், பெரியண்ணன்னு ஒரு குருப்பு. இவங்க எல்லாம் சாமிக் கும்புடு, கலியாணம், சாவு வீடுன்னு ரவுண்டு கட்டி தப்ப கையில எடுத்தாங்கன்னா வர்ற சனமெல்லாம் மொச்சிக்கிட்டு நிக்கும்.

தப்பு அடிக்கிறப்ப அந்தச் சிம்புக்குச்சி சத்தம் தனியா 'செஞ்சணக்கு செஞ்சணக்குனு' தேக்கும் பாரு... பாத்துக்கிட்டு நிக்கிறவனுக்கும் ஆட்டம் வரும். கால முன்னுக்கும் பின்னுக்கும் எடுத்து வச்சி தலய சாச்சி, நெருப்புல காச்சின தப்ப வெளாசறப்ப அவனுங்களோட ராங்கிய பாக்கனுமே... சும்மா சொல்லக்கூடாது.

(31ஆம் பக்கம் பார்க்க)

என்னைத் தெரிகிறதா?



கண்டுபிடிக்க முடியாவிட்டால் புரட்டுங்கள் 28ஆம் பக்கத்தை...

# பி.எச் : எடுத்துக் கொள்ளுங்களேன்!



கமல்ஹாசனை உலக நாயகன் என்று அவரது விசிறிகள் அழைத்து மகிழ்வதைப்போல பி.எச் அப்துல் ஹமீதை, ஆலையில்லா ஊரில் வேப்பம் பூவும் சர்க்கரையாம் என்பதாக நாமும் உலக அறிவிப்பாளர் என்றெல்லாம் புகழ்ந்து பூரிப்படைகிறோம்.

பிஎச்சுக்கு வெண்கல குரல்தான். தமிழ்ப் பாடல்களில் அவரது அறிவும் ஆளுமையும் நினைவாற்றலும் அபாரம்தான். தமிழ்ப்படத்துறை பற்றி ஏராளமான தகவல்களை விரல் நுனியல் வைத்துமிருக்கிறார். நல்ல தமிழ் பேசுகிறார். இந்த விஷயங்களால்தான் தமிழகம் அவரைத் தலையில் வைத்திருக்கிறது. ஏனெனில் அங்கே நல்ல தமிழில் ஆங்கிலம் கலக்காமல் பேசுபவர்கள் ரொம்பவே குறைவு. இன்று தமிழக தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகள் பழைய பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதற்கும் அன்றைய படங்களைப் பற்றி தகவல்களைத் திரட்டித் தருவதற்கும் கூட, ஏதோ ஒரு வகையில் பிஎச்சின் பங்களிப்பு காரணமாக இருந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. உலக அறிவிப்பாளர் என்றெல்லாம் அழைப்பது கொஞ்சம் டூமச்சாக இருந்தாலும் அவரை நினைத்து நாம் பெருமைபடுவதற்கு விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இது ஒருபக்கம். இரண்டாவது பக்கத்தில் அவர் தொடர்ந்தும் தமிழகத்தில் பல்வகையான அரசியல்களைக் கையாண்டு சம்பாதிக்க வழி பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதற்கு அப்பால், நாம் கொண்டிருக்கும் இந்த உயர்ந்த அபிப்ராயங்களுக்கு ஈடாக அவர் என்ன செய்திருக்கிறார் என்று பார்தால், ஒன்றுமில்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

குறைந்தபட்சம் அவர் அறிவிப்புத்துறை, பயனுள்ள அனுபவங்கள் உட்பட பல தலைப்புக்களில் நூல் வெளியிட்டிருக்கலாம். அறிவிப்புத்துறை பயிற்சிப்பள்ளி ஒன்றை ஆரம்பிப்பது குறித்து சிந்தித்திருக்கலாம். ஏழை மாணவர்களை தத்தெடுத்திருக்கலாம். நாம் அவரை கௌரவப்படுத்துவதற்கு பதிலீடாக எத்தனையோ காரியங்களை அவர் இலங்கையில் நிகழ்த்தியிருக்கலாம்.

இந்த கிரிக்கெட்காரர்களை எடுத்துக் கொள்ளுங்கள். ரசிகர்களை மையப்படுத்தி கோடி கோடியாக குவிக்கிறார்கள். இந்த ரசிகர்களுக்கு அவர்கள் திருப்பிச் செய்வது பெரும்பாலும் ஒன்றுமில்லை. கோடிகளைக் குவித்த பின்னரும் அரசாங்கம் இலவசமாக இன்னும் வீடு, காணி மற்றும் பட்டம் பதவி தருமா என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். முரளீதரன் தான் பிறந்து வளர்ந்த மலையக பகுதிக்கு அல்லது தமிழ் பாடசாலைகளுக்கு ஏதேனும் செய்திருக்கிறாரா? அறிந்தவரை இலலை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அப்பாவி ரசிகர்கள், நேயர்கள், விசிறிகள் தரும் பாராட்டு, புகழ், பணம் என்பவற்றை எவ்வளவு கொடுத்தாலும் சளைக்காமல் ஏற்றுக்கொள்வது மட்டும் புகழ் பெற்றவர்களுக்கு கௌரவமாகாது. ஜோன் கென்னடி சொன்னது போல, நீங்கள் இந்த வெகு சாதாரண மக்களுக்கு என்னத்தை செய்திருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

எல்லோரும் சேர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கையில் இப்படி ஒரு பார்வையா என்று முகம் சுளிக்க வேண்டாம். ஆக்கப்பூர்வமாக இருப்பதை எடுத்துக்கொள்ளுங்கள். உச்சத்துக்கு கொண்டுபோகும்!

- பார்த்தசாரதி

## புதிய பாதைக்கு வாருங்களேன்!

ஊடக கலாசாரம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகிறது. அதற்கேற்ப பத்திரிகைகளும் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டும். குறிப்பாக விரைவாகவும் புதுப்புது கோணங்களிலும் இயங்கும் இலந்திரன் ஊடகங்கள் தம்மை அவ்வப்போது சுயபரிசோனை செய்து புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அவசியம். அன்னை வானொலி தன் மவுசை இழக்கக் காரணம் காலத்துக்கு ஏற்ற மாதிரித் தன்னைப் புதுப்பிக்கத் தவறியமையே என்பது ஒன்றும் புதிய தகவல் அல்ல.

நேத்ரா டீவியில் சில அறிவிப்பாளர்கள் தமிழ் மொழி உச்சிரிப்பில் கோட்டை விடுவதைப் பார்த்திருக்கிறேன். நிகழ்ச்சியிலும் புதுமை தேவை. இதேசமயம் முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகள் பாராட்டும்படி உள்ளன. கடந்த நோன்புப் பெருநாள் நாடகமும், நடிப்பு, கதை அம்சம், நெறியாள்கை என்பனவும் பாராட்டும்படி அமைந்திருந்தன. இவ்வாறான படைப்புகள் அடிக்கடி வரவேண்டும்.

வசந்தம் டிவி, சக்தி டிவி டான் டிவி, ஆகியனவும் வசந்தம் அலை, வெற்றி, சூரியன், சக்தி ஆகிய எப்.எம் களும் பல ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளை தந்து கொண்டிருக்கின்றன. இவை மாற்றங்களை ஏற்று நேயர்களுக்கு விருந்து படைக்க, தென்றல் எப்.எம், நேத்ரா டிவி என்பன பழைய பாதையிலேயே போய்க் கொண்டிருந்தால் எப்படி?

ஸைனஸ் கதீஜா
சாய்ந்தமருது-02

## ஆஹா, அலை எப்.எம்!

அலை எப்.எம் வானொலி வரலாற்றில் புதியதொரு பரிமாணமாக வந்திருக்கிறது. வானொலி ரசிகர்களுக்கு தெவிட்டாத தேன் கிண்ணமாக திகழ்கிறது. எந்த வேகத்திலே விறுவிறுப்பாகவும் பல புதிய நிகழ்ச்சிகளை தரமாகவும் சுவையாகவும் வழங்கி வருகிறது. அலை தான் புறப்பட்ட பயணத்தை சரியாகத் தொடரும் என்று நம்புகிறோம். இதேசமயம் ஒரு சில அறிவிப்பாளர்கள் ஆர்வக்கோளாறினால் கொஞ்சம் கூடுதலாகவே அறுத்துக் கொட்டுவதாக நாங்கள் நினைக்கிறோம். இது நிகழ்ச்சிகளின் தரத்தை குறைத்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. செய்திப் பிரிவு, மக்களுக்கான செய்திகளை அதன் தேவை உணர்ந்து வழங்கவேண்டும். செய்திப்பாணி மாற்றப்படவேண்டும். செய்திக் கண்ணோட்டத்தை ஒரு நாளைக்கு ஒரு தரம் காலையில் அல்லது மாலையில் வழங்கலாம். பத்திரிகை கண்ணோட்ட பாணியில் செய்திகள் அனைத்தையும் தருவது பொருத்தமற்றதாகவே படுகிறது. இரவு நேரங்களில் நள்ளிரவு 12 மணிவரை மனதுக்கு இதமான இடைக்கால சோகப்பாடல்களை ஒலிபரப்பினால் நேயர்கள் வட்டம் மேலும் அதிகரிக்கலாம். இன்னும் சாதனைகள் படைக்க மனமுவந்த வாழ்த்துக்கள்.

ஏ. சப்னா அன்ஸார்
சாய்ந்தமருது

## புதிய அலைவரிசையில் சூரியன் FM

தனியார் எப்.எம். வானொலிகளில் முதன்மையானதும் புரட்சிகள் பல செய்ததுமான சூரியன் எப்.எம். இந்த நவம்பர் மாதத்தில் இருந்து புது அலைவரிசைக்கு மாறுகிறது. 103.4 அல்லது 103.6 அலைவரிசைகளில் உங்கள் சூரியன் மிகத் தெளிவாக நாடெங்கும் ஒலிக்கும்.

TRC என அழைக்கப்படும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி இந்த அலைவரிசை மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இது தொடர்பாக சூரியனிடம் விசாரித்தபோது. அலைவரிசைகள் மாத்திரமே மாறியிருக்கின்றன. மற்றபடி அதே நிகழ்ச்சிகள். அதே அறிவிப்பாளர்கள், அதே 'கெத்து' அப்புறம் அதே அதே அதே என்கிறார்கள் புன்சிரிப்புடன்.

சூரியன் வானொலி 1998ம் ஆண்டு இலங்கை தமிழ் வானொலித்துறையில் புதிய கதிர்பாய்ச்சி உதயமானது. நடராஜசிவமும் அவரது ஆரம்பகால இளம் அறிவிப்பாளர் குழுவும் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்கள். அதுவரை அன்னை வானொலி அறிவிப்பாளர்கள் மேடைத் தமிழில்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். வானொலி அறிவிப்பு என்றால் அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த நேயர்களுக்கு, ஒரு நண்பனைப்போல, பக்கத்து வீட்டுக்காரன்போல, ஒரு சகோதரனைப்போல உரையாடும் புதிய பாணி பிடித்திருந்தது. வேறு சிலர், ஈயத்தை காய்ச்சி காதில் ஊற்றியதுபோல பதறிப்போனார்கள். ''தமிழ் கொலை செய்யும் வானொலி... கொச்சைத் தமிழில் பேசுவது அனாச்சாரம்'' என்று கத்தியைத் தீட்டினார்கள்.

ஆனால் இப்போது கொச்சைத் தமிழ் அல்லது வழங்கு தமிழில் பேசுவது ஒன்றும் அனாச்சாரம் இல்ல; அதுதான் சாமானியனைச் சென்றடையும் என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

இந்த புதிய உத்தியை பிரயோகித்தமைக்காக சூரியனை பாராட்ட வேண்டும். நடராஜசிவத்தையும் தான்!

சூரியனுக்குப் பின் பல எப்.எம்கள் வந்துவிட்டன. தரமான நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. எனினும் சூரியன் வகுத்த பாதையில்தான் அவையும் பயணித்து கிளை விரிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தனித்துவத்தால் சூரியன் நேயர்களின் மனதில் பரவலாக இடம் படிக்க முடிந்தது. உச்சத்துக்கு சென்றது. இதனால் விளம்பரதாரர்களின் ஆதரவும் தொடர்கிறது.

எப்.எம் சேவையை கிராமங்களுக்கு, நம்முடைய வானொலி என்ற அபிப்ராயத்துடன், எடுத்துச் சென்ற வானொலி இது.

இதற்காக இதன் அறிவிப்பாளர்களும் ஏனையோரும் ரொம்பவே மெனக்கெடுகிறார்கள். கோவில் திருவிழா, வைபவங்கள் எங்கு நடந்தாலும் அவற்றுக்கு அனுசரணை வழங்குவது சூரியனின் விஷேம். வாழ்த்துகிறோம் சூரியனை.



## குட்பை இராஜமோகன்

கடந்த மூன்றரை வருடங்களாக சக்தி பண்பலையில் பணியாற்றி நேயர்களின் மத்தியில் தனக்கென ஒரு இடம் பிடித்தவர்தான் இராஜ்மோகன் அண்ணா. இவரது நகைச்சுவை கலந்த கலகலப்பான பேச்சில் மயங்காதவர்கள் எவருமே இருக்க முடியாது இவர் டப்பிங் செய்வதில் படு கில்லாடி. இந்திய திரை நட்சத்திரங்களான ரஜனி, கமல், மற்றும் அவருடன் சேர்ந்து நிகழ்ச்சி செய்பவர்களின் குரல்களிலேயே அச்சொட்டாக பேசும் திறமை கொண்டவர் இவர்.

ஹலோ சக்தி நிகழ்ச்சியில் முதலில் டயானா அக்காவுடன் இணைந்து நிகழ்ச்சி செய்தார். பின்பு இறுதி வரை கவிதர அக்காவுடன் இணைந்து இந்நிகழ்ச்சியை வழங்கினார். மேலும் விக்கி அண்ணாவுடன் ரெட்டை வால்ஸ், வரம் தரும் குபேரன், தக்காளி தியேட்டர் மற்றும் வெள்ளி இரவுகளில் வலம் வரும் சரித்திர தொடர்களிலே இவரது பங்கு மிகப் பெரும் இடத்தை வகித்தது. இவற்றிற்கு எலலாம் மேலாக ஞாயிறு இரவுகளில் இவர் தொகுத்து வழங்கிய 'சரியா? தவறா? நிகழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை.

தமிழில் உச்சரிப்பு சுத்தத்துடன் சரளமாக பேசக்கூடிய இவர், சக்தி எப்.எம் இலிருந்து விடை பெற்று செல்வது சக்தி எப்.எம்க்கு ஒரு பெரிய இழப்புதான்.

தன்னுடைய சொந்த நாடான தமிழகத்துக்கு விடை பெற்றுச் செல்லும் அவர் அங்கும் தனது ஊடக சேவையை ஆற்றி தனது ஊடக பயணத்தைத் தொடர வாழ்த்துக்கள்.

- சாந்தரூபன்
நல்லூர்

# களவுபோன சிறுநீர் போத்தல்



அருணா பொன்னம்பலம்

எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் ஒரு நடுத்தர வயதுக்காரர். கொஞ்சம் சோம்பேறித்தனம், கொஞ்சம் கஞ்சத்தனம், கொஞ்சம் பிடிவாத குணம், கொஞ்சம் அதிமேதாவித்தனம் அத்தனையும் சேர்ந்த கலவை அவர். அவரது பெயர் பாலசுப்ரமணியமாம். ஆனால் எங்களுக்கு அவர் எப்போதுமே பாலு மாமாதான். அக்கம்பக்கத்தினரும் அவரை அதே பெயரில்தான் அழைத்து வந்தனர்.

கடந்த சில நாட்களாகவே பாலு மாமாவுக்கு உடம்பு சரியில்லை. என்ன நோயென்று அவருக்கே தெரிவில்லை. அவரது உடம்பு அவர் நினைத்த படி அவருடன் ஒத்துழைக்கவில்லை. அவரது விருப்பங்களுக்கு மாறாக அது செயற்பட்டுக்கொண்டிருந்தது. அதுதான் அவருக்கிருந்த நோய்.

இரவு சாப்பிட்டால் சரியான ஜீரணமாகவில்லை. படுத்தவுடன் தூக்கம் வருவதில்லை. படுக்கையில் புரண்டுக்கொண்டே இருக்கவேண்டும். ஆனால் காலையில் விடிவது கூடத் தெரியவில்லை. அப்படித் தூக்கம் போகிறது. இதனால் காலை நேரக் கோயில் பஜனைக்கு கூட போக முடியவில்லை. இவை எலலாம் சேர்ந்து அவருக்கு ஒரு நோயாக மாறியிருந்தது.

இப்படியே போனால் நிலைமை மோசமாகிவிடும். உடனடியாக ஒரு டாக்டரை பார்த்து மருந்து எடுக்கவேண்டுமென பாலு மாமா தீர்மானித்தார்.

அந்த ஊரில் இரு டொக்டர்கள் இருந்தனர். ஒருவர் ஆங்கில மருந்து கொடுப்பவர். அவர் பெயர் மாயழகு. மற்றவர் ஒரு ஆயுர்வேத பரிகாரி. இலை, தழை, கசாயம், பூச்சு இவைதான் அவரது மருத்துவ முறை. உடம்பெல்லாம் எண்ணெய் பூசிக்கொண்டிருப்பது பாலு மாமாவுக்கு பிடிக்காத விடயம். எனவே டாக்டர் மாயழகுவிடம் செல்ல தீர்மானித்தார். இத்தனைக்கும் மாயழகு அவரது நண்பரும் கூட. ஆனால் கடந்த சில மாதங்களாக பாலு மாமா டாக்டர் மாயழகுவை ஒதுக்கி வைத்திருந்தார்.

ஏன் ஒதுக்கி வைத்திருந்தார்?

அது ஒரு தனிக்கதை.

அந்த ஊர் சௌக்கியமாக இருந்தது என்றால் அதற்கு டொக்டர் மாயழகுவும் அந்த ஆயுர்வேத பரிகாரியும்தான் காரணம். அவர்களது கைராசி அப்படி. ஊருக்கு வரும் எந்த நோயும் அவர்களிடம் தாக்குப் பிடிக்க முடியாமல் ஓரிரு வாரங்களில் ஓடிவிடும்.

டொக்டர் மாயழகு நல்ல கைராசிக்காரர்தான். ஆனால் பேசிப் பேசியே ஆளைக் கொன்று விடுவார். ஆனால் அவரது இந்த பேச்சு நடுத்தர வயதைக் கடந்த ஆண்களுடன் மட்டும்தான். இளைஞர்களிடமும் பெண்களிடமும் நோயை பற்றி மட்டுமே பேசும் அவர், நடுத்தர வயதைக் கடந்த ஆண்களிடம் ஊர்வம்பு முதல் அந்த காலத்து அம்பிகாவதி அமராவதி கதைகள் வரை பேசிப் பேசி அறுப்பார். டொக்டரின் பேச்சுத் துணை சகாக்கள் குழுவில் பாலு மாமாவும் ஒருவர். டொக்டரின் அறுவைப் பேச்சுக்கு பயந்துதான் பாலு மாமா அவரைத் தவிர்த்து வந்தார். ஆனால் அவரது நோய்க்கான மருந்து டொக்டரிடம் இருந்ததால் மாமாவுக்கு மாயழகு இப்போது தேவைப்பட்டார்.

மாமாவை கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார் டொக்டர் மாயழகு. டொக்டர் பேச்சை ஆரம்பிக்குமுன் பாலு மாமா தனது வருத்தங்களைப்பற்றி சிறு குறிப்பொன்றை டொக்டரிடம் எடுத்துக் கூறினார்.

அவற்றையெல்லாம் கவனித்துக் கேட்ட டொக்டர் மாயழகு, மாமாவின் உடம்பில் பல இடங்களில் தன்னிடம் இருந்த சின்ன சுத்தியலால் தட்டிப்பார்த்தார். தட்டினால் வரும் ஒலியை நன்கு கவனித்தார். கண்களின் இமைகள் விரியச் செய்து பார்த்தார். வாயைத் திறக்கச் சொல்லி பார்த்தார். நாக்கைத் நீட்டச் சொல்லி பார்த்தார். நெஞ்சிலும் தட்டினார். வயிற்றில் தட்டினார். என்ன நினைத்தாரோ தலையையை மட்டும் விட்டு வைத்தார்.

''வெளியால எல்லாம் சரியாத்தான் கிடக்குது பாலு. உள்ளாளதான் சிக்கல். எதுக்கும் URINE, BLOOD டெஸ்ட் செய்து பார்ப்போம்'' என்றார் மாயழகு. சரி சரியென தலையை ஆட்டினார்.

''டெஸ்ட்டுகளை இங்கேயே செய்யலாம்.'' என்று கூறி அங்கிருந்த நர்ஸிடம் பாலு மாமாவை அனுப்பினார் டொக்டர் மாயழகு.

மாமாவின் இரத்தத்தை சிரிஞ்சில் உறிஞ்சி எடுத்துக்கொண்ட நர்ஸ் சிறிய போத்தலொன்றை மாமாவிடம் நீட்டி டாய்லெட்டை காட்டினாள்.

10 நிமிடங்களின் பின் மீண்டும் டொக்டர் எதிரில் நின்றார் பாலு மாமா. டொக்டரிடம் நர்ஸ் விடயத்தை கூறினாள்.

''நமக்கு தேவையான நேரம் வரலைன்னா என்ன பண்றது. வீட்டுக்கு போயி நாளைக்கி எடுத்துட்டு வாங்க'' என்றார் டொக்டர் மாயழகு.

சரி என்று சிறிய போத்தலுடன் வீடு சென்றார் பாலு மாமா.

அடுத்த நாள்,

தேவைப்பட்டதை எடுத்துக் கொண்டு டொக்டரிடம் செல்ல தயாரானார்.

பாட்டிலை அப்படியே கொண்டு போனால் வெளியே தெரிந்து விடுமே என்று நினைத்த பாலு மாமா அதனை ஒரு சிறிய பெட்டியில் போட்டு வெள்ளைத் தாளில் சுற்றி எடுத்து சேர்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

பஸ்ஸில் அன்று ஏகப்பட்ட கூட்டம். அந்த ஊரில் அன்று சந்தை நடைபெறும் தினம் என்பதால்தான் இந்த கூட்டம். பஸ்ஸில் இருந்தவர்களில் முக்கால்வாசி பெண்கள் அதில் அரைவாசி இளம் பெண்கள்.

மாமாவுக்கு பக்கத்திலும் ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். பார்ப்பதற்கு அம்சமாக இருந்தாள். திரண்ட மார்பும் உருண்ட உடம்பும்... மாமாவுக்கு 20 வயது கால ஞாபத்தை ஏற்படுத்தியது.

''என்ன பாலு URINE SAMPLE சரியா?'' என்று கேட்டார் டொக்டர் மாயழகு.

''எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று பாக்கெட்டில் கையைப் போட்டார் பாலு மாமா.

திடுக்கென்றது. அங்கே அந்த சிறிய பாட்டில் இருக்கவில்லை.

''என்ன?'' என்று கேட்டார் டொக்டர்.

பஸ்ஸின் அருகில் இருந்த இளம் பெண். தன்னிடம் மிகவும் நெருக்கமான தூரத்தில் இருந்ததையும், ஏதோ அசம்பாவிதம் நடக்கப்போவதை தனது உள்ளுணர்வு கூறியதையும் டொக்டரிடம் கூறினார் பாலு மாமா.

''எதையெதை பிக்பாக்கெட் அடிக்கிறது என்று விவஸ்தையே இல்லாமற் போய்விட்டதே. போயும் போயும் ஒரு மூத்திரப் போத்தலையா?'' என்று கூறியவாறே உரக்கச் சிரித்தார் டொக்டர்.

நர்ஸிடம் மற்றொரு போத்தலை வாங்கி சிறிது நேரம் முக்கி முக்கி தேவைப்பட்டதை நிரப்பிக் கொடுத்த பின்தான் பாலு மாமாவுக்கு நிம்மதி பிறந்தது.

பாக்கெட்டில் பணம் இருப்பதாக நினைத்து போத்தல் பார்சலை பிக்பாக்கெட் அடித்துச் சென்ற பெண் பார்சலை திறந்ததும் என்ன நினைத்திருப்பார்?

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

# மிருகங்கள் உப்பு சாப்பிடுமா?



நாம் உப்பில்லா பண்டம் குப்பையிலே என்போம். மிருகங்கள் உப்புபோட்டுச் சாப்பிடுமா என்று என்றைக்காவது யோசித்திருப்பீர்களா? அவற்றுக்கு உப்பு அவசியமில்லையா? அவசியம்தான். ஆனால், நம்மைப் போல் அவை ருசிக்காக உப்பை உட்கொள்வதில்லை. உடலின் தேவைக்காக உட்கொள்கின்றன என்கிறார்கள் விலங்கியல் அறிஞர்கள். தாவரங்களை மட்டுமே உண்ணும் பெரும்பாலான சைவ விலங்குகள் உப்புக்கு ஏங்கித் தவிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

தரை ஆமைகள், பாலை நிலங்களில் வளரும் 'தாமரிஸ்க்' செடிகளின் மேல் படிந்துள்ள உவர்ப்பான பனி நீரை நக்கிக் குடிப்பதையும் உவர் நிலத்தை நக்குவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனவாம். பசுக்களும், செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும், குதிரைகளும் கூட சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் உப்பை ஆர்வத்துடன் தின்னுமாம். அணில்களும், முயல்களும், வயல் எலிகளும், வேறு பல பிராணிகளும் கூட தங்களின் உப்புத் தேவையை அறிந்திருக்கின்றன. தங்கள் இரத்ததிற்கு தேவைப்படும் உப்பை அளிப்பதற்காக அவை அடிக்கடி ஓரிடம் விட்டு இன்னோர் இடம் போக நேரிடுகிறது. எருமைகளும், பனிமான்களும் அப்படி நெடுந்தூரம் நடந்து கடலை அடைந்து கரையில் படிந்திருக்கும் உப்பு நுரையை நக்குகின்றன.

புலி, சிங்கம் போன்ற ஊனுண்ணி விலங்குகள் தாங்கள் விழுங்கும் பிராணிகளின் சதை, எலும்பு, இரத்தம் ஆகியவற்றிலிருந்து தேவையான உப்பு முழுவதையும் பெற்று விடுகின்றன. ஆனால் சைவ பார்ட்டிகள் தாங்கள் தின்னும் தாவரங்களில் உள்ள மிகச் சிறிய அளவு உப்பையே சார்ந்திருக்கின்றன. இந்தத் தாவரங்கள் உப்பு மண்ணில் வளர்ந்தாலும், அதன் வேர்கள் மண்ணிலிருந்து பொட்டாசியம் குளோரைடை மட்டுமே உறிஞ்சுகின்றன. சோடியம் குளோரைட்டு எனப்படும் உப்பை எடுத்துக்கொள்வதில்லை. அவற்றை உண்ணும் தாவர உண்ணிகளின் உடலில் உப்புக் குறைப்பாடு ஏற்பட்டு, அவை பலம் குன்றுகின்றன. அவற்றின் பசி மந்தநிலையை அடைகின்றது. இதனால்தான் விலங்குகள் சரணாலயங்களில் கூட, தனியே உப்புத் தொட்டிகள் வைக்கப்படுகின்றன. எருமைகள் மற்றும் குறுமான்கள் மட்டுமன்றி முயல்களும், அணில்களும் சுண்டெலிகளும் இந்தத் தொட்டியைத் தேடி வருகின்றன.

இவை எல்லாவற்றுக்குமே உப்பு தேவைப்படுகிறது. உப்பு இல்லாவிட்டால் இவற்றின் உடலில் ஓடும் இரத்தத்தின் உள்ளடக்கம் முறையற்றதாக ஆகிவிடுகிறது. இதனால் அவை பலமிழந்து பல வகை நோய்களுக்கு எளிதில் உள்ளாகிவிடுகின்றன.



டாக்டர்: உங்க பல் எப்படி விழுந்தது?

நோயாளி: அத சொன்னா மீதி பல்லும் கொட்டிடும்னு என் மனைவி சொல்லிட்டா டாக்டர்.

ஐ.எம்.பஸ்லீம், நாச்சியாத்தீவு

# ரயான்ஸ் டோட்டர் (Ryan's Doughter)




ஜுனைதா ஷெரீப்

எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எழுபதுகளின் முற்பகுதியாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். ஊரில் இருந்து வந்து கொழும்பில் தங்கியிருந்த ஒரு மாலை பம்பலபிட்டிக்கு வந்தேன். பழைய மெஜஸ்டிக் தியேட்டரில் ஒரு ஆங்கிலப் படம் திரையிடப்பட்டிருந்தது. ரயான்ஸ் டோட்டர் என்பது படத்தின் பெயர். வேறொன்றும் தெரியாது. டிக்கட் வாங்கி உள்ளே போய் அமர்ந்தேன். 70 எம்.எம் படமாக இருந்திருக்க வேண்டும். 70 எம்.எம் சிக்ஸ் டிரக் ஸ்டீரியோ போனிக் சவுண்ட் என்பது அப்போது புதிய விஷயம். அந்தப் படம் என்னை தூக்கிவாரிப்போட்டது. வெளியே வந்தபோத அருமையான ஒரு படத்தைப் பார்த்தேனே! என்று உள்ளம் பூரித்துப் போனது. அந்தப் படத்தைப் பார்த்ததை ஒரு பேறாகவே நான் கருதுகிறேன்.

பிரபல ஆங்கிப் பட இயக்குநர் டேவிட் லீனின் படம் அது. அவர் இயக்கிய படம் என்றைக்குமே சோடை போனதில்லை. ரயான்ஸ் டோட்டரும் சர்வ-தேச விருதுகள் பெற்ற ஒரு படம்தான். பசுமை மிகுந்த அயர்லாந்து கடற்கரை கிராமமொன்றில் படமாக்கப்பட்டிருந்தது. இதன் காட்சிகள் கண்ணுக்குள்ளே இப்போதும் நிலலாடுகின்றன. அருமையான ஒளிப்பதிவு.

கொஞ்சம் வயதான புரொபஸர் ஒருவர் இளம் பெண்ணைத் திருமணம் செய்கிறார். அந்த கிராமத்துக்கு வந்து வாழ்கிறார். அவர் எப்போதும் படிப்பதும் வேலைக்குச் செல்வதும், சிந்திப்பதுமாகவே வாழ்க்கையை செலவிடுகிறார். அவர் தன் மனைவியை அன்பாக நடத்தினாலும் தாம்பத்திய உறவில் ஆர்வம் காட்டாதவராகவே இருக்கிறார். இதனால் மனைவி தனிமையில் காலத்தை செலவிட நேர்கிறது. இதேசமயம் பேராசிரியருக்கும் அவர் மனைவிக்கும் ஊரில் நல்ல மரியாதை.

காலம் நகர்கிறது. இச்சந்தர்ப்பத்தில் அந்த




ஊருக்கு இராணுவ அதிகாரி ஒருவன் வருகி-றான். ஒருமுறை கடற்கரையில் பேராசிரியரின் அழகிய மனைவியை அவன் சந்திக்கிறான். தனிமையில் வாடும் அவளுக்கு அவனது நட்பு பெரிய மாற்றத்தைத் தருகிறது. நட்பு பின்னர் காதலாக மாறுகிறது. திருட்டுத்தனமாக இருவரும் சந்தித்துக் கொள்கின்றனர். இவ்விடயம் பேராசிரியருக்கு தெரிய வருகிறது. ஒருநாள் ஜோடி பேராசிரியரிடம் கையும் களவுமாக சிக்கிக்கொள்கிறது. இனிமேலும் அந்த ஊரில் வாழ முடியாது என்ற நிலையில் மூட்டை முடிச்சுக்களோடு குதிரை வண்டியில் அவர்கள் புறப்படுகின்றனர்.

அப்போது அவர்களை யார் யாரெல்லாம் உயர்வாக கருதி மரியாதை செய்தார்களோ அவர்களே காறித்துப்பி ஏசுகிறார்கள். அவமானத்துடன் அவர்கள் ஊரை விட்டு வெளியேறிச் செல்கின்றனர்.

இதுதான் கதை. இயக்குநர் டேவிட்லீன் இக்கதையைத் தனக்கே உரிய பாணியில் பல சம்பவங்களையும் திருப்பங்களையும் உள்ளடக்கி அற்புதமான திரைக்கதை மற்றும் கமிரா கோணங்களுடன் வெகு லாவகமாக படத்தை நகர்த்திச் சென்றிருக்கிறார்.

இதுபோன்ற கணவனுக்குத் துரோ-கம் செய்யும் மனைவி பற்றி பல திரைப்படங்கள் அதன் பின்னர் பல மொழிகளில் வந்து விட்டன. 'சட்டர்லீஸ் லவ்வர்' என்ற புகழ்பெற்ற மற்றும் இங்கிலாந்தில் தடைசெய்யப்பட்டிருந்த ஒரு நாவலும் கூட எழுபதுகளில் திரைப்படமாக வெளிவந்தது. எழுபதுகளில் இலங்கையில் அத்திரைப்படம் திரையிடப்பட்டபோது பாராளுமன்றத்திலும் அது குறித்து பேசப்பட்டது. அத்திரைப்படம் இலங்கையில் ஏன் தடை செய்யப்படக்கூடாது என்பது பற்றி மறைந்த காமினி திஸாநாயக்க பேசியிருந்ததாகவும் ஞாபகம். எனினும் அதற்கு முன்பே ரயான்ஸ் டோட்டர் வெளியாகி கொழும்பு ரசிகர்களை புரட்டிப் போட்டிருந்தது.

இத்திரைப்படத்தில் இருந்து நான் ஒரு விடயத்தை ஆணித்தரமாக தெரிந்து கொண்டேன். இன்னொருவர் விவகாரத்தில் அவ்விடயத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் நாம் அதில் தலையிடவும் கூடாது. கருத்துச் சொல்லவும் கூடாது என்பதே நான் இப்படத்தில் இருந்து கற்றுக் கொண்ட பாடம். அன்றில் இருந்து, நான் சம்பந்தப்படாத அலலது எனக்கு சரியாகத் தெரியாத எந்த விடயம் பற்றியும் குறிப்பாக பிறரைப் பற்றி நான் கருத்துச் சொல்வதே இல்லை. இன்றுவரை நான் அப்படித்தான் இருந்து வருகி-றேன். எவரேனும் இன்னொரு நபரின் வாழ்க்கை விவகாரங்கள் பற்றி என்னிடம் சொல்ல வந்தால் அதை அப்போதே கேட்க மறுத்து விடுவேன். எவரேனும் 'ஊர் பலாய்' பேசிக் கொண்டிருப்பதை நான் செவிமடுக்கும் போதெல்லாம் ரயான்ஸ் டோட்டர்தான் என் ஞாபகத்துக்கு வரும்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பிரச்சினை ஏற்படுகிறது. அதைக் கண்டுகொள் ளாத ஊரார் இருவரையும் போற்றுகின்றனர். இப்பிரச்சினையின் விளைவாக மூன்றாம் நபர் அவர்கள் வாழ்வில் குறுக்கிடுகிறார். பிரச்சினை வெடித்ததும், அதே ஊரார் அவர்களை எள்ளி நகையாடுகின்றனர். இதுதான் உலகம்! எல்லா குடும்பங்களிலும் ஏதேனும் ஒரு வகையில் இருக்கக்கூடிய பிரச்சினைகள்தான் இவை. நமது அழுக்குகளை மூடி வைத்து விட்டு பிறரை நிய-ாயம் தீர்க்க முற்படுவது எந்த வகையிலும் நிய-ாயமானதல்ல. எனவே பிறரைப் பற்றி நாம் நிய-ாயம் கதைக்கத் தேவையில்லை.

என் சிந்தனையில் பெரிய மாற்றத்தை உறுதியான வகையில் ஏற்படுத்திய திரைப்படம் இது. பின்னர் பலரிடமும் இப்படத்தை நான் சிபாரிசு செய்திருக்கிறேன். டிவிடீ வடிவில் இப்படம் கிடைப்பதாகக் கேள்வி. தேடிக் கொண்டிருக்கின்றேன்.

## நவம்பர் மாத பலாபலன்கள்

01-11-2012 தொடக்கம் 30-11-2012 வரை

சோதிடமாமணி நவா

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனக்கஷ்டங்கள் படிப்படியாக குறைவடையும். தொழில் நிலைகள் சீராக அமையும். பணத்தட்டுப்பாடு நிலவினாலும் சமாளிக்கும் தன்மையுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியேற்படும். உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள் கருமங்களில் சில கஷ்ட நிலையுண்டு. முதலீட்டாளர்கள் முதலீடுகளில் மனக்கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடும். மேட இராசியினருக்கு பெரிதாக துயர் தராத மாதமாக அமையும். அதிர்ஷ்ட திகதிகள் 09,27 ஆகும்.

### இடபம்

கார்த்திகையின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனதிற்கு நிம்மதி தரும் மாதம். செய்தொழில்களில் முன்னேற்றம், எதிர்பார்த்த பணவரவு, காரியங்களில் அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் இருந்து வந்த மகிழ்ச்சியற்ற தன்மை விலகும். உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள் நன்மைகளைப் பெற்றிடுவர். முதலீட்டாளர்கள், முதலீடுகளால் நன்மைகளைப் பெறுவர். இடப இராசியினருக்கு பெரிதாக தீமை தராத மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 05, 23 ஆகும்.

### மிதுனம்

மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முயற்சிகளில் மேன்மை தரும் மாதம். தொழில்நிலையில் சிறிது கஷ்டங்கள் தோன்றி மறையும். புதிய முயற்சிகள் பலிதமா கும். பணவரவு தாமதமாகி கிடைத்திடும் குடும்ப நிலையில் பொறுமையுடன் நடந்து கொள்வது நன்மைதரும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கருமங்களில் தடைகள் ஏற்பட்டு மறையும். முதலீட்டா ளர்கள் முதலீடுகளால் சிறிது தளம்பலடைவர். மிதுன இராசியினருக்கு மிகத் தொல்லைதராத மாதமாகும். அதிர்ஷ்ட திகதிகள் 2, 16 ஆகும்.

### கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில் நிலையில் கஷ்டம். பணவரவு தாமதம், மறைமுக எதிர்ப்புக்கள் குறையும். குடும்பத்தில் திட்டமிட்ட கருமங்கள் தாமதமாகும். உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்களின் கருமங்களில் முன்னேற்றமுண்டாகும். முதலீட்டாளர்கள் முதலீடுகளால் சிறிது மனக்குழப்பமடைய நேரிடும். கர்க்கடக இராசியினருக்கு சிறிது மனக்கஷ்டங்கள் தந்திடும் மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 10, 19 ஆகும்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்களில் அனுகூலம், தாமதமாகி பணவரவு கிடைத்தல், புதிய முயற்சிகள் தொடங்குதல், குடும்பத்தில் வீண் மனச்சச்சரவுகள் மறையும். உத்தியோகஸ்த்தர்கள் மாணவர்கள், கருமங்களில முன்னேற்றம், முதலீட்டாளர்களின் முதலீடுகளில் வீண் பிரச்சினைகள் தோன்றி மறையும். சிங்க இராசியினருக்கு சிக்கல்கள் பெரிதாக தென்படாத மாதம் அதிர்ஷ்ட திகதிகள் 6, 24 ஆகும்.

### கன்னி

உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்கள் சீராகும். பணவரவுகள் திருப்தி தரும். புதிய முயற்சிகள் தாமதமாகும். குடும்பத்தில் எதிர்பார்த்த பல விடயங்கள் நிறைவேறும். உத்தியோகஸ்த்தர்கள் மாணவர்களின் செயற்பாடுகள் வெற்றியளிக்கும். முதலீட்டாளர்களின் முதலீடுகளில் இருந்து வந்த மந்த நிலை மறையும். கன்னி இராசியினருக்கு பெரிய கஷ்டங்கள் ஏற்படாத மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 07, 25 ஆகும்.

### துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில் நிலையில் சாதகமான நிலை தோன்றும். பண வரவுகள் சீராகி திருப்தி தரும். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். குடும்பத்தில் சிறிது மனக்கஷ்டங்களுக்கு இடமுண்டு. உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள் கருமங்களில் மன நிறைவு பெறுவர். முதலீட்டாளர்கள் எதிலும் கவனமுடன் நடந்து கொள்வது நன்மை தரும். துலாம் இராசியினருக்கு மனக்கஷ்டங்களை பெரிதாக தந்திடாத மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 04, 22 ஆகும்.

### விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்களில் சிறிது பிரச்சினைகள் தோன்றி மறையும். எதிர்கொண்ட பணவரவு கஷ்டங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் சிக்கல்கள் உண்டு. குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்கள் உருவாகும். உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள், தமது கருமங்களில் வீண் தொல்லைகளை எதிர்கொள்வர். முதலீட்டாளர்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் நீங்கும். விருட்சிக இராசியினருக்கு கவலைகள் சிறிது குறையும் மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 10, 19 ஆகும்.

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்கள் சீராக நடைபெறும். பணவரவு கஷ்டங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் சிறிது தடைகள் உண்டாகும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சில கஷ்டங்கள் நீங்கும். உத்தியோகஸ்த்தர்கள் மாணவர்களின் கருமங்களில் முன்னேற்றம் ஏற்படும். முதலீட்டாளர்கள் திட்டமிட்ட கருமங்களால் நன்மையடைவர். தனு இராசியினருக்கு சிறிது மனக்குழப்பங்கள் தந்திடும் மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 07, 25 ஆகும்.

### மகரம்

உத்தராடத்து பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்த்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்களில் சிறிது கஷ்டங்கள் உருவாகும். புதிய முயற்சிகளில் தாமதம். பணவரவுகளில் தடைகள். குடும்பத்தில் வீண் மனக் கசப்புக்கள் உருவாகும். உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள் மிகவும் பொறுமையுடன் நடத்தல் நன்மை தரும். முதலீட்டாளர்கள் முதலீடுகளில் மனக்கவலை கொள்வர். மகர இராசியினர் மிகவும் பொ-றுமையுடன் நடக்கவேண்டிய மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 05, 23 ஆகும்.

### கும்பம்

அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்களில் முன்னேற்றம், எதிர்பார்த்த பணவரவு கிடைத்தல், பெரியோர்களால் உதவி, குடும்பத்தில் திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறுதல் உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், கருமங்களில் முன்னேற்றம். முதலீட்டாளர்கள் முதலீடுகளால் சிறிது கவலையடைவர். கும்ப இராசியினருக்கு மனக்குழப்பம் பெரிதாக தராத மாதம். அதிர்ஷ்ட திகதிகள் 09, 30 ஆகும்.

### மீனம்

புரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செய்தொழில்கள் சீராக நடைபெறும். பணவரவு கஷ்டங்கள் தொடரும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. குடும்பத்தில் மனக் கசப்புக்கள் உருவாகும். பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள் கருமங்களில் மந்த நிலை உருவாகும். முதலீட்டாளர்களின் முதலீடுகளில் மனக் குழப்பங்கள் ஏற்பட்டு தொல்லை தரும். மீன இராசியினருக்கு மனச்சுமைகள் கூடிய மாதமாக அமையும். அதிர்ஷ்ட திகதிகள் 10, 23 ஆகும்.

## வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK) மகற்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்*

# கோழி இறைச்சிக்கும் விரைவாக பூப்படைவதற்கும் இடையே தொடர்புள்ளதா?

**ஒன்று முதல் எட்டு வயதுவரை பெண் குழந்தைகளுக்கு 'புறொய்லர்ஸ்' கோழி இறைச்சி கொடுக்கக்கூடாது என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டா?**

**- எஸ்.எம். சீனன்கோட்டை**

உண்மை இருக்கிறது. கடந்த நூறு ஆண்டுகாலத்தை எடுத்துக் கொண்டால் மாதவிடாய் நிற்கும் காலம் 50-52 வயதாகவே இருப்பதைக் காணலாம். சுமார் 15 வயதில் ஆரம்பமாகும் மாத விடாய் 50,52 வயதில் முற்றுப் பெறுகிறது. ஆனால் இதே காலப் பகுதியில் பெண்கள் பூப்படையும் பருவம் 16 வயதிலிருந்து 13 ஆகவும் 10 ஆகவும் கிழே இறங்கி இன்று ஒன்பது வயதிலும் பூப்பெய்துகிறார்கள். ஏன் இப்படி கவர்ச்சியும் மிக்க கோழி இறைச்சி உணவுகளுக்காகப் பயன்படுத்தப்படும் புறொய்லர் கோழிகள் இத்தேவைகளுக்கு ஏற்ப வளர்க்கப்படுபவை. இத்தகைய உணவகங்களுக்குச் சென்று உணவருந்தி வருவது இன்று நாகரிமாகக் கருதப்படுகிறது. மேலைநாடுகளில் இவ்வாறான உணவகங்கள் மலிந்து கிடக்கின்றனவே. அங்கேயும் இதே பிரச்சினை இருக்கும்தானே என்று நீங்கள் கேட்கலாம்.

மேல்நாடுகளில் உணவகங்களுக்குச் செல்வதை பெஷன் என்று யாரும் கருதுவதில்லை.

நுகர்வோரும் தான் என்ன செய்கிறோம். எதை எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். தமக்கு பாதிப்பு ஏற்பட்டால் நீதிமன்றம் செல்லவும்

ஒன்று முதல் எட்டு வரையிலான பெண் குழந்தைகளுக்கு கொழுப்புச் சத்து அதிகம் கொண்ட கவர்ச்சியான உணவுகளை கொடுக்காதிருந்தாலும் புறொய்லர் கோழி இறைச்சியையும் அளவாகக் கொடுப்பதுமே சரி. இயற்கையாக வளரும் நாட்டுக் கோழி இறைச்சியைக் கொடுங்கள். பரவாயில்லை.

பொதுவாகவே சிறுவர் சிறுமியர்களுக்கு அதிகம் கொடுப்பது நல்லது அல்ல. பற்களுக்கு இடையே இடைவெளி ஏற்படுவதும், உண்மையான பசி குறைவதும், உடல் வளர்ச்சிக்கான உண்மையான போஷாக்கு உணவு கிடைக்காமல் போவதும் பெற்றோர்கள் அவர்களுக்கு 'கவர்ச்சி'கரமான உணவுகளில் கட்டுப்பாடு விதிக்காமல் இருப்பதால் தான் என்றும் சொல்ல முடியும்.

இதை ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் பார்த்தாலும் ஒன்பது, பத்து வயதில் பருவம் அடையும் ஒரு சிறுமி தனக்குரிய சிறுமிப் பருவத்தை இழக்கிறாள். அவளது வளர்ச்சி துரிதமடைந்து பருவப் பெண்ணுக்குரிய அங்கங்களைப் பெறுகிறாள். இதனால் ஏனைய தன் வயது சிறுவர் சிறுமியரோடு சேர்ந்து

இப்பருவம் கீழ் நோக்கி இறங்கி இருக்கிறது என்பதையும் இதற்கான காரணங்களையும் மட்டுமன்றி ஒரு பெண் குழந்தை மிக இளைமையிலேயே பூப்படைவதால் அக்குழந்தை எதிர்நோக்கும் மனோவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளையும் ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பெண் பிள்ளைகள் சீக்கிரமே வயதுக்கு வருவதற்கு தற்போது மாற்றம் அடைந்துவரும் உணவு மற்றும் போஷாக்குப் பழக்கமே காரணம். சமைக்கப்பட்ட அல்லது சமைப்பதற்குத் தயாரான நிலையில் அதிக விளைச்சலைத் தரும் விதைகள், சீக்கிரம் பலன்தரக் கூடிய பயிர்கள் உருவாக்கப்படுவதைப் போல இந்நிறுவனங்களும் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை குறிப்பாக மாமிச வகைகளை செயற்கையாக அதாவது இரசாயன பிரயோகத்தடன் உற்பத்தி செய்கின்றன.

இன்று கொழும்பிலும் முக்கிய நகரங்களிலும் உள்ள பிரபலமான Fast Food உணவகங்களிலும் மணமும், ருசியும்,



பிச்சைக்காரன்: சாமீ... ஏதாச்சும் இருந்தா போடுங்க...

வீட்டுக்காரர்: பழைய சோறு இருக்கு சாப்பிடுறியா?

பிச்சைக்காரன்: அத நீங்க சாப்பிடுங்க, நமக்கு வயித்துக்கு ஆகாதுங்க...!

**- கே.ஜீவா, மத்துகமை**

அவர்கள் தயங்குவதில்லை.

அதற்கான சட்டங்கள் அங்கே உள்ளன. தமது பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை பயன்படுத்தவும் அவர்களுக்கும் தெரியும்.

இங்கே கதை முற்றிலும் வேறு.

ஒரு கோழி குறிப்பிட்ட கால எல்லைக்குள் போதிய நிறையையும் மிருதுவான மாமிசத்தையும் கொண்டதாக மாறுவதற்கு இரசாயன உணவுகள் மற்றும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. உணவின் மூலம் இவை பெண் பிள்ளைகளில் உடலுக்குள் சென்றடைகின்றன. இவற்றில் சில இரசாயன பதார்த்தங்கள் பெண்களின் ஈஸ்ட்ரஜன் என்ற ஹோர்மோனின் தொழில்பாட்டை விரைவுபடுத்த முடியும். பெண் பிள்ளைகள் கொழுக்மொழுக் என குண்டாவதற்கும் வயதுக்கு மீறிய வளர்ச்சியைக் காட்டுவதற்கும் செயற் கையான தூண்டலே காரணமாகிறது. இதே போல ஒன்பது அல்லது பத்து வயதில் பருவம் அடைவதற்கும் காரணமாகிறது.

இது ஒரு புறமிருக்க இந்நிறுவனங்கள் ஊடகங்களைப் பயன்படுத்தி தமது விற்பனையை அதிகரித்துக் கொள்கின்றன. இவ்விபரங்களைப் பார்க்கும் சிறுபராயத்தினர் பாலியல் கவர்ச்சி சார்ந்த பல தகவல்களை சுலபமாக பெற்றுக்கொள்கிறார்கள். கிளர்ச்சியை ஏற்படுத்தும் திரைப்படங்கள், பாடல் காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். இந்த உளக்கிளர்சியும் கிளர்ச்சியான உணவுகளும் சேர்ந்து பெண்பிள்ளைகளை வயதுக்கு முன்னரேயே பருவமடையச் செய்வதற்கு உறுதுணையாகி விடுகின்றன எனலாம்.

ஒன்பதில் அல்லது அதற்கு முன் சிறுமி ஒருத்தி பருவமடைந்தால் அது பிஞ்சில் பழுத்தமாதிரிதான். அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்று ஆலோசனை பெற்றுக்கொள்வது நல்லது. மேலைநாட்டுக் கலாசாரத்துக்கும் நமக்கும் இடையே நிறைய வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே சுதந்திரமாக விளையாடுவதில் இருந்து தடுக்கப்படுகிறாள். மனதளவில் சிறுமியாகவும் உடலளவில் குமரியாகவும் பொருத்தமற்ற இரட்டை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.


தன்னால் விளங்கிக்கொள்ள முடியாத விஷயங்களுக்கு அவள் முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிறரின் காமம் நிறைந்த அணுகுமுறைகளை சமாளிக்க வேண்டிய அல்லது அவற்றுக்கு இரையாக வேண்டிய சூழல் ஏற்படுகிறது. குறைந்த வயதில் பூப்படைவதால் மனச் சமநிலை பாதிப்பு ஏற்படவும் மனோவியல் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கவும் வேண்டியிருக்கும்.

ஆகவே, சிறுமிகள் இயற்கையாகவே பூப்படையட்டும். செயற்கை தூண்டுதல்களுக்கு இடமளிக்க வேண்டாம்!

*கர்ப்பம் தொடர்பான நோய்கள், வருத்தங்கள், பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்*
***எஸ். எப். எல். அக்பர்***
*பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். உங்கள் கேள்விகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் நெடுநாள் நோயானால் ஏற்கனவே எடுத்துக் கொண்ட சிகிச்சைகளின் போட்டோ பிரதிகளையும் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். வயதை குறிப்பிட மறக்க வேண்டாம். பெயர் குறிப்பிட விரும்பாதவர்கள் அதை தனிக் கடிதத்தில் தெரிவிக்கலாம். எனினும் பெயர் முகவரி குறிப்பிட மறக்க வேண்டாம். இது எமது தேவைக்காக.*

வானவில் மருத்துவம்,
த.பெ. எண். 1218
கொழும்பு.
e-mail: vannavaanavil@gmail.com

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 24



### இடமிருந்து வலம்

1 இலங்கையின் வடமுனை (7)
5 நீரில் மிதக்கும் (3)
8 சமாதானம் (2)
10 தமிழில் முதலெழுத்து (1)
11 இதில் மின்சாரம் செல்லும் (3)
12 உறைக்கும் (3)
13 கேரள நடனம்(4)
15 பூசும் களி மருந்து (4)
16 மலையக நகரம் (3)
18 விஷமுள்ள பாம்பு (4)
20 உலகில் உயர்ந்த மலை (5)
21 சுவர்க்கோழி (3)
22 இடியுடன் வரும் (4)
23 உயர்திரு (3)
24 மன்னன் (4)
27 கவிஞர்கள் மட்டுமல்ல சாதாரணமானவர்களும் இதை எழுதலாம் (3)
28 இதுதான் விருட்சமாகும் (2)
29 பூவை கோர்த்தால் இதுவாகும் (3)
30 வான் (2)
31 ஆற்றுக்கு மேல் வரும் இணைப்பு

### மேலிருந்து கீழ்

1 நல்ல நேரத்தை இதிலிருந்து கணிக்கலாம் (6)
2 கிருஷ்ணனின் இரு மனைவியரில் ஒருவர் (4)
3. நாட்களில் ஒன்று (4)
4 சிறு வயதில் பிடித்து விளையாடும் ஒரு பூச்சி (3)
5 சொத்துக்கு உரித்துடைய மற்றவர் (4)
6. அடித்தால் சத்தம் வரும் (4)
7 இது நிறைந்திருந்தால் தளம்பாது (3)
9 நேரம் (2)
11 திருடன்(4)
13 விழி (2)
14 கம்பு (2)
16 மலையக நகரம் (4)
17 இந்தியாவின் முக்கிய நகரம் (3)
18 'வாகை சூடவா' நாயகன் (3)
19 காலன் (3)
20 சாதி (3)
22 அதிகம் (4)
24 பாதுகாப்புக்கு அமைக்கப்படுவது
25 தொடையழகி
26 இசைக் கச்சேரியைக் கேட்கும் ரசிகர் கூட்டம்(2)
27 பாடல் எழுதுபவர் (2)
28 வான் (2)

*சரியான விடைகளை எழுதி*
*25. 11. 2011க்கு முன்*

குறுக்கெழுத்துப் போட்டி - 24
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

*என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல 22க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....**

குறுக்கெழுத்துப் போட்டி இல 22க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....






# சாத்தியம்தான்...

## "என் அப்பா ஒரு பெண்"

உண்மையில் மனித மனம் எதைச் சிந்திக்கிறது; என்னத்தை அவாவி நிற்கிறது என்பதெல்லாம் கண்டுபிடிக்க முடியாத மர்மமாகவே இருக்கிறது. ஏன் என்ற கேள்விக்கு மேற்குலக நாடுகளில் இருந்து பார்த்தால்தான் தெரியும். அவ்வளவு சிக்கல்!

நான் ஜரிவி தொலைக்காட்சியின் விவரண நிகழ்ச்சி ஒன்றை எதேச்சையாகப் பார்த்தேன். அதில் எனது தந்தை பெண்ணாகிறார் என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சயை காண்பித்தார்கள்.

நான் இலங்கையில் பிறந்ததாலே என்னவோ இது என்னை பெரிதும் பாதித்து விட்டது. ஆனால் இங்கு எல்லா வெள்ளைக்காரரும் அதனை எளிதாக எடுத்துக் கொள்வார்கள் என்றே எண்ணினேன்.



அந்த ஆணுக்கு ஐம்பத்து மூன்று வயது. அவர் தன்னுடலிலுள்ள ஆண் உறுப்பை அறுவை சிகிச்சை மூலமாக மாற்றி பெண்ணுடலில் உள்ள உறுப்புக்களை அறுவைச்சிகிச்கை மூலமாக பெற்றுக் கொண்டிருக்கிறார்.

அவருக்கு மனைவியும் ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். அந்த மனைவியும் மகளும் அப்பா பெண்ணாவதை வெறுக்கவில்லை. விரும்புகிறார்கள். அந்த தந்தையின் தலைமாட்டில் நின்ற வண்ணம் தனது தந்தை பெண்ணாவதை எந்த மன சஞ்சலமும் இல்லாமல் ஏற்றுக்கொள்கிறார் அந்த மகள். இலங்கையில் பிறந்த ஒரு ஆணினால் இப்படியொன்றை யோசித்துத்தான் பார்க்க முடியுமா?

ஆனால் தன்னில் கொஞ்சம் கொஞ்மாக பெண் தன்மை மேலோங்கி வந்ததாகவும் அதனால் ஆணாக இருக்க விரும்பவில்லை என்றும் அவர் சொல்கிறார். அந்த அறுவை சிகிச்சை சாதாரணமானது அல்ல. அது பெரும் செலவிலும் பல நிபுணர்கள் இணைந்து செய்கின்ற அறுவை சிகிச்சையாகவும் உள்ளது. அதற்கு குடும்பம் முழு ஒத்துழைப்பை வழங்குகிறது என்பதுதான் விசேஷம்.

ஆண் உடலில் பெண்ணுக்கான மாற்றங்கள் நிகழும்போது ஒரு ஆண் தன்னை பெண்ணாகவே நினைத்துக்கொள்கிறார். அதன் பிறகு அவரால் ஆணாக வாழ முடியாத பெரும் மனச்சிக்கலுக்கு உள்ளாகிறார்.

இங்கு பிரிட்டனில் மாத்திரம் ஆறாயிரம் பேர் ஆண்களாக இருந்து தங்களை அறுவைச்சிகிச்சைக்கு பிறகு பெண்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்று ஜரிவி தொலைக்காட்சி சொல்கிறது. இந்த வருடம் மாத்திரம் 150 பேர் அறுவை சிகிச்சை செய்ய காத்திருக்கின்றனராம். பெரும்பாலும் ஆண்கள்தான் தங்களை அறுவைச்சிகிச்சை செய்து பெண்களாக மாற்றிக்கொண்டு வாழ்கின்றனர்.

இயுறோலொஜிகல் சேர்ஜன் பில் தோம்ஸ் இப்படிச் சொல்கிறார்: ஒரு ஆண் தான் தவறான உடம்போடு வாழுகிறார் என்று நினைத்தால் அதில் இருந்து விடுபடவேண்டியதுதான். அதற்குள் கிடந்தது ஏன் உழல வேண்டும்? இந்த பால்மாற்று சிகிச்சை அதற்கு வழி வகுக்கும் என்பது அவர் வாதம்.

தொடர்ந்து பெண் நினைவுகளோடு ஆண் உடம்பில் வாழுவது மன உளைச்சலை ஏற்படுத்தும். அது மன நோயில் கொண்டுவந்து விட்டு விடும் என்று உளவியல் மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

''ஆண் உடலோடு ஒரு பெண்ணாக வாழ்வது கொடுமையானது. ஏனெனில் இது உணர்வு சம்பந்தபட்ட விடயம். நுண்ணிய மன உணர்வுகளை யாரோடு பகிர்ந்து கொள்வது? ஒரு பெண் மனநிலையில் இருந்து நான்பட்ட அவஸ்த்தைகளுக்கு தீர்வு கிடைத்து விட்டது என்கிறார் ஜேன். ஒரு வருடத்துக்கு முன் பால் மாற்று சிகிச்சை செய்தவர் அவர். அவருக்கு மனைவி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். தாங்கள் மகிழ்ச்சியாக வாழ்வதாக அவர் மனைவி சொல்கிறார்.

ஆனால் கல்யாணம் முடித்து இரண்டு பிள்ளைகள் பெற்ற பிறகு தான் ஒரு ஆணல்ல, பெண் என்று ஒரு தந்தை நினைக்கும்போது அல்லது உடல் மாற்றம் வரும்போதுதான் பல சமூக பிரச்சினைகள் வருவதாக ஜேன் சொல்கிறார். பல நண்பர்கள் தன்னை விட்டு போய் விட்டதாக சொல்லி வருந்துகிறார் அவர்.

அவரின் டீன் ஏஜ் மகள் அவர் தலையை வாரிவிடும்போதும் பிறந்த நாள் கார்ட் கொடுக்கும்போதும் அவரை தந்தை என்றுதான் காட்டிக் கொள்கிறார். ஜேன் ஒரு பெண்ணாக இருந்தாலும் அவர் தனது தந்தைதான் என்று சொல்கிறாள் மகள்.

இங்கு பிரபல சட்டதரணியாக இருந்தவர் டேவிட் போர்ஜஸ். ஆனால் அவர் சோனியா என்ற பெயரில்தான் இங்கு பிரபலமானார். அவர் ஒரு ஆண். மூன்று பிள்ளைகள். ஆனால் அவர் தன்னை ஒரு ஆணாக அல்லாமல் பெண்ணாகவே நினைத்துக்கொண்டிருந்தார்.

அவர் அனேகமாக பெண்கள் அணியும் ஆடைகளையே அணிவது வழக்கம். அவரது மனைவியும் ஏன் அவரிடம் வழக்கு விஷயமாக


பெண்ணாக மாறிய ஆண்கள்

போகும் தமிழர்கள் எல்லோரும் அவரை மிகவும் சிறந்த ஒரு மனிதர் என்றே கூறி வந்தனர்.

அவர் எத்தனையோ தமிழர்களுக்காக வாதாடி அகதி அந்தஸ்த்தை எடுத்து கொடுத்திருக்கிறார். மனித உரிமைகள் தொடர்பான சிறந்த சட்டத்தரணி அவர். பின்னாளில் அவர் முழுமையாக தன்னை பெண்ணாக மாற்றிக்கொண்டார். அவருக்கு இந்தப் பால் மாற்றம் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. தொடர்ந்தும் தன் வேலைகளை அவர் மிகவும் மும்முரமாகவே செய்து கொண்டிருக்கிறார்.

2010 ஒக்டோபர் 25 ஆம் திகதி அவரை நீனா கனகசிங்கம் என்ற தமிழ் பெண்ணொருவர் சுரங்க ரயில் நிலையத்தில் வைத்து ரயில் பாதையினுள் தள்ளி விழுத்த அவர் இறந்தார். பின்னர் நீதிமன்றம் நீனாவுக்கு தண்டனை வழங்கியது. ஆனால் அவரை நீனா ஏன் தள்ளி விழுத்திக் கொன்றார் என்பது இன்னும் வெளி உலகத்துக்கு தெரியவில்லை. ஆனால் நீனாவுக்கு மனநோய் இருந்ததாகவும் அதனால் சோனியாவை அவர் வேண்டுமென்றே கொல்லவில்லை என்றும் நீனாவின் உறவினர்கள் சொல்கிறார்கள்.

இவ்வாறான உடல் மாற்றத்தின் மூலம் பாலின மாறுதல் திடீரென்றும் சிலருக்கு வருகிறது. இதனால் அவர்கள் குழம்பிப்போய் விடுகிறார்கள். இறுதியாக பால்மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். இந்தியா போன்ற நாடுகளில் இவ்வாறான பால் மாற்ற உணர்வுகளுக்கு ஆளாகிறவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்தியாவில் பால் மாற்று அறுவை சிகிச்சைகள் பாதுகாப்பில்லாமல் செய்யப்படுகின்றன. அதனால் பல அநியாய மரணங்களும் சம்பவிக்கின்றன.

பால் மாற்று அறுவைச்சிகிச்சை என்பது சமூகத்தில் குறிப்பாக இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. காரணம் அதை ஏற்கின்ற பக்குவம் நம் சமூகத்தில் இல்லை.

சீனாவில் பால் மாற்று தொடர்பான விடயம் கிறிஸ்துவுக்கு முன் 8ஆம் நூற்றாண்டுக்கும் முன்பு கூட இருந்ததாக கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனால் இது கட்டாய மாற்று நடவடிக்கை என்றே வரலாற்றாசிரியர்கள் சொல்கிறார்கள்.

இவர்கள் அலிகள் என்றழைக்கப்பட்டனர். ஆண்பால் அழித்தல் அறுவைச்சிகிச்சை மூலம் ஆண்பால் உறுப்புக்களை அகற்றியவர்களைத்தான் நபுன்சகர்கள் அல்லது அலிகள் என அழைக்கபடுகின்றனர்.

தாய்மையடையக்கூடிய பெண்கள் இருக்கும் அரசனின் அரண்மனையில் வேறு எந்த ஆணுடைய விந்தும் விழுந்து எந்த பெண்ணின் கருமுட்டையிலும் கலந்து துளிர்விடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே அலிகள் உருவாக்கப்பட்டார்கள். இதன் மூலம் அரசனின் வாரிசு தூய்மை பேணப்பட்டது எனலாம்.

சீனாவில் மிங்க் முடியாட்சியில் மட்டும் 70,000 ஆண் குழந்தைகளுக்கு பால் அழிப்பை அறுவைச் சிகிச்சை மூலம் செய்திருக்கிறார்கள். இந்த 'அறுவை நிபுணர்கள்' அறுவைச்சிகிச்சையை பரம்பரை பரம்பரையாக குடும்பத்தொழிலாகவே செய்த வந்திருக்கிறார்கள்.

நரம்புகளை விறைக்க வைக்கும் மூலிகைக் கஷாயங்கள் கொடுத்து உறுப்புக்களை மிளகு கலந்த சுடு நீரால் கழுவுவார்களாம். ஆணுறுப்பை முழுக்க அறுத்தெறிவது ஒரு வகை, விதையை மட்டும் அகற்றுவது இன்னொரு வகை என்று இரண்டு வகையான அறுவைச்சிகிச்சை முறைகள் நடைமுறையில் இருந்திருக்கின்றன.

இந்த அறுவையின் போது அநேகமானவர்கள் மரணித்தும் போயிருக்கிறார்கள். இதெல்லாம் ஆண் தன் சொத்துடமைக்கு வாரிசாக தன் இரத்த சொந்த வழி வாரிசு மட்டுமே இருந்தாக வேண்டும் என்ற எண்ணத்தின் உச்சக்கட்டம். அரண்மனையில் மற்ற வேலைகள் செய்ய ஆண்களும் வேண்டும். அதே நேரத்தில் எங்காவது அந்த இருட்டில் ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத்தின் விளைவுதான் ஆண்கள் மலடாக்கப்பட்டனர். மிருகங்களுக்கு விதையடிப்பது போலத்தான் இதுவும்.

19ஆம் நூற்றாண்டில் சீனத்தில் வசித்த ஆங்கிலேயர் மூலமே வெளியுலகுக்கு சீனாவின் இந்த வழக்கம் தெரியவந்தது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் தனி மனித சுதந்திரம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக மதிக்கிறது.

எங்கள் மகன் படிக்கும் பாடசாலையில் மூன்றாம் பாலின டீச்சா ஒருவர் இருக்கிறா. அவவுக்கு முழு அங்கீகாரத்தை லண்டன் அரசு வழங்கியிருக்கிறது.

இந்தியா, இலங்கை போன்ற நமது நாடுகளில் அவர்கள் எப்பொழுதும் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். கேலிப்பொருளாகவும் பாலியல் பண்டமாகவும் மட்டுமே அரவாணிகள் பார்க்கப்படுகிறார்கள். அது மாற்றப்படவேண்டும். அவர்களுக்கான அங்கீகாரம் முழுமையாக கிடைக்க வேண்டும். இலங்கை நிலையோடு ஒப்பிடும்போது இந்திய அரவாணிகள் எவ்வளவோ மேல் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த உலகத்தில் சும்மா வாழ்ந்தோம் இறந்தோம் என்பதற்கு அப்பால் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. இதைத்தான் ஜரிவி ஆவணச்சித்திரம் எனக்குச் சொன்னது.

**Star Baby**



எம்.ரிஷ்விதன்
மோதரா வீதி,
கொழும்பு - 15

# தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப ஆரம்பத்தை விளக்கும்

# பரதேசி





நாம் அருந்தும் ஒவ்வொரு கோப்பைத் தேநீருக்காக, தேயிலைத் தோட்டங்களில் காலம் காலமாக ரத்தம் சிந்திய கொத்தடிமை உயிர்களின் உலகத்தை படம் பிடித்து 'பரதேசி' என்றப் பெயரில் திரைக்காவியமாக உருவாக்கியுள்ளார் பாலா.

தமிழ் சினிமா ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகளை கடந்து விட்டிருந்தாலும், இதுவரை யாரும் தோட்டத் தமிழர்களின் வாழ்க்கையை படமாக்கவில்லை. அதுப்பற்றி யாரும் சிந்திக்கவும் இல்லை. பஞ்சத்தில் தவித்த தமிழக மக்களை கடல் கடந்து ஆப்பிரிக்கா, மலேசியா, பர்மா, இலங்கை, சிங்கப்பூர் என உலகம் முழுவதும் அழைத்துச் சென்று கொத்தடிமைகளாக வைத்திருந்த அந்த பெரும் சோகத்தை பாலா படமாக்க துணிந்தது பாராட்டத்தக்கது. சேது, நந்தா, பிதாமகன், நான் கடவுள், அவன் இவன், உள்ளிட்ட மிகச் சிறிய எண்ணிக்கையிலான படங்களை மட்டுமே பாலா படமாக்கியிருந்தாலும் அவை வெறும் வியாபார சினிமாக்கள் அல்ல. காவியங்கள் என்றே சொல்ல வேண்டும். ஒவ்வொரு கதையிலும் ஒரு வலி, ஒரு பகை, ஒரு துரோகம், என்றும் மனசை பிழிகிற விசயம் இருக்கும். இதை பாலா எங்கிருந்து உறிஞ்சி எடுக்கிறாரோ தெரியவில்லை.

''ரெட் டீ' என்கிற ஆங்கில நாவலின் பாதிப்புதான் இந்த 'பரதேசி'. அந்த கதை கருத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த பரதேசியை அங்கே இறக்கி விட்டிருக்கிறேன்.

நான் ஒரு தறிகெட்ட வாழ்க்கை வாழ்ந்து இருக்கேன். அவ்வளவும் அனுபவங்கள். நான் சந்தித்த மனிதர்கள். தரிசனங்கள் என மனசுக்குள் நிறைய இருக்கு. அந்த உள்ளுணர்வுதான் என்னை நகர்த்துது. என்னைப் பொறுத்தவரை கதை என்று ஒன்று கிடையாது. எல்லாம் பாத்திரங்கள்தான். இருட்டின்ட ஆத்மானு ஒரு மலையாளச் சிறுகதை தந்த பாதிப்புதான் சேது. ராமநாதபுரத்தில் நான் பார்த்த இலங்கை அகதி முகாம்தான் நந்தா. ஜெயகாந்தனோட 'நந்தவனத்தில் ஒரு ஆண்டி'தான் பிதாமகன். காசியில் பார்த்த அகோரிகளின் அனுமாஷ்யம் எல்லாம் சேர்ந்ததுதான் நான் கடவுள். இப்படித்தான் நான் கதையை தேடுகிறேன். இங்கே யாரும் சுயம்பு இல்லை'' என்கிறார் இயக்குனர் பாலா.

படத்தில் பாலாவை தவிர எல்லோரும் புதுசுதான். ஒலிப்பதிவாளர் செழியன் முதல் எடிட்டர் கிஷோர் வரைக்கும் புதுமுகங்கள். நூறாவது படத்தில தொடும் அந்த வெற்றியை மூன்றாவது படத்திலேயே நாயகன் அதர்வா தொட்டுவிடுவார் போல் தெரிகிறது. 1940களில் தோட்டங்களுக்கு வேலைக்கு போகும் பாத்திரத்தில் அதர்வா நடிக்கிறாராம். அவருக்கு ஜோடி தன்ஷிகா.

பாலாவின் படத்தில் முதல் முறையாக வைரமுத்து பாடல் எழுதியிருக்கிறார். ஜி.வி பிரகாஸ்குமார் இசையமைக்கிறார். தோட்டத் தமிழர்களின் வலிகளை வரிகளாக்கி 'நெஞ்சுக்குள்ள முள்ளு குத்துற' வலியை ஏற்படுத்தியிருக்கிறாராம் வைரமுத்து.

கூலித்தொழிலாளர்களாக இலங்கை வந்த தென்னிந்திய உறவுகள் இன்னும் இலங்கையில் தினசரி சம்பளம் பெற்று வருவது பாலாவிற்கு தெரியுமா?



## பருத்தி வீரனுக்கு அலர்ஜி, அரசியல்

பருத்தி வீரன் கார்த்தி நடித்த படங்கள் வெற்றி பெற்று வருவதால், சகுனி படத்தில் அவரை பெரிய அரசியல் ஹீரோவாக்க திட்டமிட்டனர். ஆனால் பெரிய பில்டப் கொடுத்து நடித்த அந்த படம் வெற்றி பெறவில்லை. இதனால் பலத்த அதிர்ச்சி அடைந்தார் கார்த்தி. அதோடு இப்போதைக்கு அரசியல் கதைகளில் நடிக்க வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிறார். தற்போது நடித்து வரும் படங்களில் சின்னதாக அரசியல் நெடி இருந்தால்கூட அது வேண்டாம் எடுத்து விடுங்கள் என்கிறாராம்.

காதல் மோதல் போன்ற பிரச்சினைகளை நகைச்சுவையுடன் படமாக்குங்கள்.

இப்போதைக்கு சந்தானம் போன்ற நடிகர்களை உடன் வைத்துக்கொண்டு ஜமாய்த்தால் போதும் என்பது அவர் முடிவு. அவர் எடுத்த முடிவு சரிதான். இனி அரசியல் பேசி குப்பை கொட்டுவது கஷ்டம்.



## பரத்: "அடுத்த வருஷம் எனக்கு டும்... டும்... டும்..."

அடுத்த வருடம் நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன் என்று சத்தியம் செய்கிறார் பரத். கிசுகிசுவில் அடிபட்டுக் கொண்டிருக்கும் நடிகர்களின் முக்கியமானவர் நடிகர் பரத். திருத்தணிக்குப் பிறகு இவர் பெரிதாக நம்புவது சசி இயக்கிய வரும் 555 படத்தைத்தான். கடந்த சில நாட்களாக கோடம்பாக்கத்தை சுற்றி பரத் பற்றிக் கிளம்பியுள்ள லேட்டஸ்ட் கிசுகிசு நடிகை சஞ்சனாவுக்கும் இருவருக்கும் காதல் என்பதுதான்.

இந்த கிசுகிசுக்களை மறுத்துள்ள பரத் இந்த கிசுகிசுவில் உண்மை எதுவும் இல்லை என்கிறார். உண்மையில் நான் நிறைய பெண்களுடன் பழகுகிறேன். ஆனால் யாருடனும் காதல் இல்லை. இவர்கள் மட்டுமல்ல, தமிழ் சினிமாவில் என்னுடன் நடித்த சீனியர் நடிகை ஒருவருனுடன் என்னை இணைத்து பேசுகிறார்கள். இதற்கெல்லாம் மறுப்பு சொல்வது வீண்வேலை. எனக்கு வீட்டில் பெண் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அடுத்த வருடம் நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன். சினிமாவில் எந்த பின்புலமும் இல்லாமல் நடிக்க வந்தேன். இன்னும் எனக்கான இடத்துக்காக போராடிக்கொண்டிருக்கிறேன் என்கிறார் பரத்.



ஹிம்மத்வாலா என்ற படம் மூலம் பாலிவுட்டில் பிரவேசித்துள்ள தமன்னா, அடுத்து ''ரமணா' இந்தி ரீமேக் படத்திலும் நடிக்கிறார். இப்படத்தை அசினிடமிருந்து கஷ்டப்பட்டு கைப்பற்றியுள்ளாராம் தமன்னா.

## அசினுக்கு போட்டியாக தமன்னா

## காஜலுக்கு வந்த கோபம்!



காஜல் அகர்வால் தென்னிந்திய மீடியாக்களுக்கு பேட்டி கொடுப்பது ரொம்ப அபூர்வம். அவர் கவனம் எல்லாம் இந்தி மீடியாக்கள் மீதுதான் அதையும் மீறி ஒரு தமிழ் வார இதழ் நிருபர் எப்படியோ காஜலை நெருங்கி பேட்டி எடுத்தார். நல்லபடியாக பேட்டி போய்கொண்டிருந்தபோதே காஜலிடம் அந்த நிருபர் ''நீங்கள் எதற்கும் தயாரான பெண்ணாமே?'' என்று கேட்டுவிட செம கடுப்பானார் காஜல்.

''நான் என்ன அப்படிப்பட்ட பெண்ணா? அதெப்படி எதற்கும் கவலைப்படாமல் இருக்க முடியும்? ஏன் இப்படி குப்பையான கேள்விகள் கேட்கிறீர்கள்? அதற்கென தனி நடிகைகள் இருக்கிறார்கள். அவர்களிடம் போய் இப்படி கேளுங்கள். இதற்குத்தான் நான் சவுத் மீடியாக்கிட்ட பேசுறதில்லை. பேட்டி போதும் எழுந்து வெளியில் போங்க'' என்ற கத்த தொடங்கிவிட்டார். பயந்து போன நிருபர், ''நான் அந்த அர்த்தத்தில கேக்கல மேடம் நீங்க எந்த வேடத்திலும் நடிக்க தயாரான பொண்ணுங்ற மாதிரிதான் கேட்டேன்'' என்று மழுப்ப ஒருவழியாக சமா தான காஜல் பேட்டியை தொடர்தாராம்!



## சிவாஜியாக வை.ஜி மகேந்திரன்

''கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தில் வரும் சந்தானம் அடுத்து, சிவாஜி வை.ஜி மகேந்திரன் நடித்த 'பரீட்சைக்கு நேரமாச்சு' ரீமேக்கில் நடிக்கிறார். இதில் வை.ஜி மகேந்திரன், சிவாஜி வேடத்திலும், சந்தானம் வை.ஜி வேடத்திலும் நடிக்கின்றனர்.



## வேல் முருகன் போர்வெல்

பாலா இயக்கத்தில் வெளிவந்த 'பிதாமகன்' படத்தின் மூலம் அறிமுகமானவர் கஞ்சா கறுப்பு அமீரின் 'ராம்' படத்தில் நடித்ததன் மூலம் மிகவும் பிரபலமானவர். தொடர்ந்து 'சுப்பிரமணியபுரம்', 'பருத்திவீரன்', 'சண்டைக்கோழி' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். நகைச்சுவையில் கலக்கி வந்த கஞ்சா கருப்பு தற்போது கே.கே.பிலிம் இண்டர்நேஷனல் என்ற பெயரில் பட கம்பெனி தொடங்கி தயாரிப்பில் குதித்துள்ளார். அவர் எடுக்கும் முதல் படத்துக்கு 'வேல்முருகன் போர்வெல்ஸ்' என பெயரிடப்பட்டுள்ளது. கரணை வைத்து 'மலையன்' என்ற படத்தை இயக்கிய எம்.பி.கோபி இப்படத்தை இயக்குகிறார். போர்வெல் என்ற ஆங்கிலச் சொல்லை தலைப்பாக வைத்தால் வரி விலக்கு கிடைக்காதே! இல்லையேல் போர்வெல் என்பது தமிழ்தான் என்று நினைத்துவிட்டார்களோ?



## மொடல் அழகியாக ஆன்டரியா

ஆன்டரியா எந்தப் படத்தில் நடித்தாலும் அதில் தனது வேடம் பரப்பரப்பாக பேசப்படவேண்டும் என்று ஆசைப்படுகிறவர் ஆன்ட்ரியா. அந்த வகையில், விஸ்வரூபம் படத்தில் முத்தக்காட்சி, கவர்ச்சி என்று அமர்க்களப்படுத்தியிருக்கி றாராம். அதையடுத்து இப்போது என்றென்றும் புன்னகை படத்தில் மொடல் அழகியாக நடிக்கிறார். மொடல் என்றால் சாதாரண மொடல் இல்லையாம். நிர்வாணமாக போஸ் கொடுக்கும் அதிரடி மொடல் அழகியாம்! ஆனால் இதுபற்றி அவரிடம் கேட்டால் அப்படியெல்லாம் எதுவும் இல்லை என்று மறைக்கிறார். மேலும் எனது கேரக்டர் பற்றி இப்போதே நான் சொல்லிவிட்டால் அதன் மீதுள்ள சுவாரஸ்யமும் எதிர்பார்ப்பும் குறைந்து விடும். அதனால் படம் வந்த பிறகு அதைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லி எஸ்கேப்பாகிறார் ஆன்ட்ரியா.



## ...ரூபம் தரும் ஆரோ3டி அனுபவம்

படம் என்றாலே எப்பவும் ஒரு வித எதிர்பார்ப்பு இருக்கும். அதிலும் தற்போது கமல் இயக்கி நடித்து தயாரித்த அவரை ஹொலிவுட்டிற்கு அழைத்துப்போய் உள்ள விஸ்வரூபம் படம் வழக்கத்துக்கும் அதிகமான எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. காரணம் இந்தப்படத்தில் பல புதுமைகளை புகுத்தியுள்ளார் கமல். ஒளிப்பதிவு, சவுண்ட் என எல்லாவற்றிலும் புதிய தொழில்நுட்பத்தை புகுத்தியுள்ளார்.

விஸ்வருபத்தில் 'ஆரோ 3 டி' எனும் புதிய தொழில் நுட்பத்தை புகுத்தியுள்ளார் கமல்.

இதுகுறித்து கமல் கூறியுள்ளதாவது: ஆரோ 3டி தொழில்நுட்பம், படம் பார்க்கும் அனுவத்தை மேலும் பல படிநிலைகளுக்கு உயர்த்தி பெரும் கிளர்ச்சியை நமக்களிக்கும். இந்த ஆரோ 3டி தொழில்நுட்பத்தை விஸ்வரூபம் திரைப்படம் மூலமாக நம் பார்வையாளர்களுக்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இந்த ஆரே 3டி தொழில்நுட்பத்தை இந்திய ரசிகர்களுக்கு முழுமையாக எடுத்துச் செல்ல நல்ல திரையரங்குகள் அவசியம். இதற்கான மாற்றங்களைச் செய்வதற்கு பல திரையரங்கு உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

## தீபாவளி சரவெடி








தீபாவளி சரவெடியாக களமிறங்க தயாராகிவிட்டது 'துப்பாக்கி'. தமிழகத்தில் மொத்தமாக உள்ள 600 தியேட்டர்களில் 500 தியேட்டர்களில் துப்பாக்கி வெளியாக உள்ளதாம். மிச்சமாக உள்ள நூறு தியேட்டர்கள்தான் மற்ற படங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் குறைந்த பட்ஜெட்டில் படம் எடுக்கும் தயாரிப்பாளர்களின் நிலை பரிதாபகரமாக உள்ளது என்கிறார்கள்.

பண்டிகை நாட்கள் தவிர மற்ற நாட்களிலும் மாஸ் ஹீரோக்களின் திரைப்படங்கள் வெளியாவதால் வட்டிக்கு வாங்கின காசு இப்படி பலனில்லாமல் போய் கடைசியில் துண்டை தலையில் போட்டுக்கொண்டு சொந்த ஊருக்கு கிளம்பும் நிலை ஏற்பட்டு இருக்கிறதாம். புலம்புகிறார்கள் சின்னத் தயாரிப்பாளர்கள். இப்படி பல வழிகளில் மாஸ் ஹீரோக்களின் படங்கள் சின்னப் படங்களுக்கு தலையிடியாக இருந்தாலும் சில நேரங்களில் சின்னப் படங்கள் பெரிய படங்களை ஏறி மிதித்தும் இருக்கிறது. அதாவது பில்லா 2 வை நான் ஈ வீழ்த்தியது போல.

ஆரம்பத்தில் துப்பாக்கி தனிக்காட்டு ராஜாவாகக் களமிறங்கும் என்றார்கள். அப்படி நடந்திருந்தால் நிச்சயம் வசூல் ராஜா துப்பாக்கியாகத்தான் இருந்திருக்கும். எனினும் வேறு சில படங்களும் தீபாவளிக்குக் களம் இறங்கும் என்று தெரிகிறது.

இதில் முக்கியமானது தங்கர்பச்சனின் அம்மாவின் கைபேசி.

''பண்டிகை காலத்தில் பெரிய படங்கள் வெளியாவதில் சில கட்டுப்பாடுகளை தயாரிப்பாளர் சங்கம் விதித்திருந்தது. எனினும் இதை எவரும் லட்சியம் செய்வதாகத் தெரியவில்லை. பெரிய படங்கள் நினைத்த மாத்திரத்தில் வெயிடுவது என்பதில் உறுதியாக இருக்கிறேன். என் அழகி படத்தை பொங்கலுக்கு வெளிட்டபோது 13 படங்கள் வெளியாகி இருந்தன. இறுதியில் அழகியே போட்டியில் ஜெயித்தது. எனது படங்களுக்கென்று ஒரு ரசிகர் கூட்டம் இருக்கிறது. எனவே தீபாவளிக்கு கைபேசி வரும்'' என்று கொக்கரிக்கிறார் தங்கர்.

இந்த இரண்டு படங்களைத்தவிர போடா போடி, சமர், கும்கி, அஜந்தா, லொள்ளு தாத்தா பராக் பராக் ஆகிய திரைப்படங்கள் தீபாவளிக்கு வெளிவரவிருப்பதாக தெரிகிறது. இவற்றில் எத்தனை உண்மையாகக் களமிறங்கும் என்பது தெரியவில்லை. அப்படியே வெளிவந்தாலும் போட்டியில் எத்தனை ஜெயிக்கும் என்று மற்றொரு கேள்வி.

இந்தப் போட்டி எல்லாம் முதல் இரண்டு வார வசூல் எப்படி இருக்கும் என்பதில்தான் உள்ளது. ''அழகியும் 113 தியட்டர்களில் 100 நாட்களைத்தாண்டி ஓடியது'' என்று மார்தட்டும் தங்கர், நம்பிக்கையோடு காத்திருக்கிறார்.

துப்பாக்கியை எடுத்துக்கொண்டால் விஜய்க்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்கிறார். கலைப்புலி தாணு தயாரித்திருக்கும் இப்படத்தை ஏ.ஆர் முருகதாஸ் இயக்குகிறார். சந்தோஷ் சிவனின் ஒளிப்பதில் ஹரீஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். இப்படி ஒரு மெகா கூட்டனியில் மகா ஹிட் படமொன்றை விஜய் ரசிகர்களுக்கு அளிக்கப்போவதால் ரசிகர்களுக்கு இது ஸ்பெஷல் தீபாவளியாகத்தான் அமையப்போகிறது.

கூகுள்... கூகுள் என்ற பாடலை தனது சொந்தக் குரலில் விஜய் பாடியிருக்கிறார். ''காஜல் அகர்வால் பெயரிலேயே இனிப்பை வைத்திருக்கிறார். அகர்வால் ஸ்வீட் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும். எனக்கு பிடித்த கேர்ள் ப்ரெண்ட் காஜல் அகர்வால்தான்'' என்று விஜய் பேட்டி அளித்து தன் ரசிகர்களுக்கு கிக் ஏற்றியிருக்கிறார்.

# கவி முற்றம்



## என் சந்தோசம்

காரணம் இன்றி நீ
கொடுக்கும் வலிகளைக் கூட
எதிர்பின்றி ஏற்றுக் கொள்வேன்
மரணம் தாண்டியும் உன்
சந்தோசத்தை வாழ வைப்பதற்காக
இன்று என் மரணமே
உன் சந்தோசமாகிவிட்டது.
இன்னொரு ஜென்மம்
எனக்கு வேண்டாம்
மறுபடியும் உனக்கு பிடிக்காத
ஜீவனாக உயிர் கொள்வதைவிட
அழகான உன் நினைவுகளோடே
முடங்கிப் போகிறேன்
இறப்பின் பின்னராவது என்
சந்தோசத்தை வாழவைப்பதற்காக...

- நி.நிஷா,
கிளிநொச்சி.

## தொட்டில் பழக்கம்

பொய் சொல்லாதே
உறுக்கி அடித்து
அதட்டினேன் மகனை
தானாக விழுந்துகொண்டு
தங்கைமேல் பழிபோட்டதற்காக

சத்தியம் செய்தான்
அரிச்சந்திரனாக
நீண்டநாள் நிம்மதி

கல்வியை முடித்துவிட்டுத்
தொழில் தேடியவன்
அரசியலில் இறங்கினான்

இப்போதெல்லாம்
மேடைக்கு மேடை
பொய்யையே முழக்குகிறான்
அதுவும் பச்சைப்பொய்யை!

முட்டாள் சனங்களும்
கைதட்டி ஊக்குவதால்
பொய்யை முழக்குகிறான்
அதுவும் பச்சைப்பொய்யை!

முட்டாள் சனங்களும்
கைதட்டி ஊக்குவால்
பொய்யை மட்டுமல்ல
புளுகவும் தொடங்கிவிட்டான்
நெஞ்சம் வெடிக்கிறது
நான் என்ன செய்ய....?

- எம்.எஸ்.எம். ஹமீது,
காத்தான்குடி 02.



## நட்பு

பூமிக்கு ஆயுளுண்டு
எம் நட்பிற்கு ஆயுளில்லை
கல்லாக நாமிருந்தாலும்
நான் நட்பை மறப்பதில்லை
என் நட்பு கல் மேல் எழுத்து
எம் பிரிவு நீர் மேல் எழுத்து
நீ என்னை மறந்தாலும்
நான் உன்னை மறவேன்

- யோ. ரூபனா
சுதுமலை



## காலம்

வயதை மறைக்க
வர்ணம் தீட்டுகிறாய்
உன் கூந்தலுக்கு
கொஞ்சம் காலம்தான்
கூன் விழுந்தால்
என்ன செய்வாய்
அதை மறைக்க

- என். பிரியங்கா
தெமோதரை

## என் உயிர் நீதானே...

எத்தனை உறவுகள்
இந்த பூமியில் பிறந்தாலும்
அத்தனையும் தாண்டி எனக்குள்
தெரிவது நீதானடா...!
நீ என் நிலைக்கண்ணாடி
உன்னை பிரதிபலிப்பதில்
எனக்கு சொல்லிமாளாத பெருமை
என்னில் இருக்கும் உன்னை
நம்புகிறேன்
நீ தலை அசைத்தால்
உன் உள்ளங்கையில் என்
உயிரையும் கிள்ளி வைப்பேன்

- எம்.எஸ்.எப்.சுக்னா,
காத்தான்குடி




## கண்ணகிகள்

விண்ணிலுள்ள
தேவரெல்லாம்
மண்ணிலே கூடினால்
கண்ணகிகள் எல்லாம்
கற்பிழந்து
போவார்களோ?

- மருதங்கேணியூர்
வே.வே. அகிலேஸ்வரன்

## கோடிச்சரணம்



கொடியில் பூத்த பூ-கோடி
அழுகென்றேன்- அம்மா
உன் கர்ப்பக்கொடியில் நான் பூக்க
கோடி வரம் கேட்பேன்
மீண்டும் வரம் கொடுத்தால்
என் தாய் கோவிலுக்கு
கோடிச்சரணம்
தினம் நான் சொல்வேன்
நிலவும் சூரியனுமே இவ்வுலகிற்கு
வெளிச்சம்
நான் இவ்வுலகை காண்பதற்கு
என் தாய் நீயே வெளிச்சம்
என்றும் சொல்வேன் உனக்கு
கோடிச்சரணம்.

- க.சத்தியராஜ்,
டிக்கோயா



## ஏக்கம்

தினமும் பார்த்து
தினமும் பேசி
பழகிப் பிணைந்தால்
ஒரு முறையேனும்
உன்னைப் பார்க்காமல்
உன்னுடன் பேசாமல்
இருக்க முடிந்ததா என்னால்...

இன்றோ உன்னை
ஒரு முறையேனும்
பார்க்க மாட்டேனா
ஒரு முறையேனும்- நீ
என்னுடன் பேச மாட்டாயா?
ஏக்கத்துடன் காத்திருக்கிறேன்
உனக்காக

நா. கவின் வினோத்
மன்னம்பிட்டிய



## சிரிப்பு

உன் புன்னகைக்குள்
நான் புதைந்து போனேன்
உன் பொன் சிரிப்பில்
நான் மரித்து போனேன்

- எப்.எஸ். பாஹிரா
ஹாலி-எல



## பிரியா நட்பு

நாட்கள் பல கடந்தும்
கலையா நம் நட்பு
நந்தவனமாய்
நறுமணம் பரவி நிற்கிறது.

பிரிவென்ற சொல்
இல்லை எமக்கு- ஆனால்
நட்பென்ற சொல் ஒன்றே
தெரியும் எமக்கு

கண் இல்லை என்றால்
அந்தனாவோம்- அப்படியே
உனக்கும் எனக்கும் நட்பு
இல்லை என்றால்
மூழ்கிடுவேன் இருள் பாதாளத்தில்

- குணபாலசிங்கம் சுதர்சினி,
இலுப்படிச்சேனை

## அறியாமலே...

நீ அறியாமல் - உன்
இதயத்தை
திருடினேன்
கள்வனாக அல்ல
காதலனாக
நீ அறியாமல்- உன்
இதழில்
முத்தமிட நினைத்தேன்
காதலனாக அல்ல
கணவனாக
நான் அறியாமல்- உன்
இதயத்தை
தந்துவிட்டாய்
எனக்கல்ல
வேறொருவனுக்கு...

- த.சபிதா
வவுனியா





## சுமையல்ல நட்பு

தாய் பத்து மாதம்
வயிற்றில் சுமக்கின்றாள்
தந்தை வளரும் வரை
தோளில் சுமக்கின்றார்
காதலி வாழ்நாள்
முழுவதும்
காதலை சுமக்கின்றாள்
ஆனால் நான் உன்னை
சுமக்கவில்லை
ஏனெனில்
நம் நட்பு சுமையல்ல
நண்பா!


- த.சசி,
திருவாவர்குளம்,
வவுனியா.

### வாசக கவிஞர்களுக்கு...


பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com



பாம்பினால் வீரியம் பெற்ற மதுபோத்தல்கள்



# "மீன் என நினைத்து நாகபாம்பு கறியை சாப்பிடப் போனேன்"




பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. ஆனால் சீன மக்கள் பாம்புகளை நன்மைகள் செய்யும் உயிரினமாகவும், மிகவும் பிடித்தமான சுவை மிக்க உணவாகவும் பயன்படுத்துகிறார்கள்.

சீனாவில் மிகப்பெரிய அழகான மாநகரமான ஷங்காயின் மையப்பகுதியில் நிறைய ஓட்டல்கள் இருக்கின்றன. நமக்கு சீன உணவு, வியட்நாம் உணவு, ஹாங்காய் உணவு, ஐரோப்பியன் உணவு என பல ஓட்டல் உணவு வகைகள் கிடைக்கின்றன. குறிப்பிட்ட இடங்களில் மட்டும் இந்திய உணவு, பாகிஸ்தானி உணவு, அரேபிய முஸ்லிம் உணவு என்ற ஓட்டல்கள் இருக்கின்றன.

ஒரு இந்திய உணவகத்தில் நுழைந்து சாப்பிடுவோம் என்று எண்ணியபடி நானும் என் மகனும் ஒரு ரெஸ்டோரன்டில் நுழைந்தோம். சீன மொழியில் என்ன வேண்டுமென்று கேட்டார்கள். ''மெனு சார்ட் கொடுங்கள்'' என்று கேட்டேன். அனைத்தும் சீன மொழியில் எழுதப்பட்டிருந்தது. அக்கம் பக்கத்தில் மக்கள் ஏதேதோ விரும்பி சாப்பிட்டு கொண்டிருந்ததை பார்த்த நான் எதிரில் டைனிங் டேபிளில் சாப்பிட்டுக் கொண்டிருந்த தம்பதியர்களை அடையாளம் காட்டி ''அவர்கள் சாப்பிடுவதை கொண்டு வாருங்கள்' என்று சைகை மொழியில் சொன்னேன்.

20 நிமிடங்களுக்குள் நல்ல நறுமணத்துடன் உடனடியாக சாப்பிடத்தோன்றும் வகையில் அழகான தட்டுக்களில் மாமிச உணவு வகைகள் எங்கள் உணவு மேசையில் வைக்கப்பட்டன.

பிரைட் ரைஸ், நூடுல்ஸ், வெங்காயம், வெள்ளரிப்பிஞ்சு, தக்காளி, முட்டைக்கோஸ், கேரட், பச்சைகாய்கறிகள் தனித்தனி தட்டுக்களிலும், வினிகர் ஒரு பாத்திரத்திலும் வைத்தார்கள்.

சரி சாப்பிடுவோம் என சொல்லி பிஸ்மில்லா! என்ற வார்த்தையை உச்சரித்து மாமிச துண்டு ஒன்று எடுத்து சாப்பிடலாம் என கையில் எடுத்தேன். அருகிலுள்ள டைனிங் டேபிளில் இருந்து உன்னிப்பாக எங்களை கவனித்துக் கொண்டிருந்த பாகிஸ்தானி பிரஜை ஒருவர் அருகில் வந்து என் மணிக்கட்டை லேசாக பிடித்து ''சாப்பிடாதீர்கள்! இது இஸ்லாமியர்கள் சாப்பிட அனுமதி இல்லை'' என்றார்.

திடுக்கிட்டோம். ''மீன்தானே?'' என்று கேட்டேன். ''இல்லை, இது கருநாகத்தின் மாமிசம்'' என்றார். ''இதோ பாருங்கள் தலை, இது உடல், இது வால் பகுதி.'' என தனித்தனியாக பிரித்துக் காட்டியபோது திடுக்கிட்டு போனேன்.

மற்றொரு தட்டில் இருந்ததை காட்டி ''இது என்ன கறி என்றால் நாகப்பாம்பு கறி'' என்றார். ''உங்களுக்கு சீனமொழி தெரியாதால் சப்ளையர் நீங்கள் பாம்புகறியை வேண்டுமென்று கேட்கிறீர்கள் என்று தவறாக புரிந்து கொண்டு இதை உங்களுக்கு வைத்திருக்கிறார்'' என்று விளக்கினார்.

''இந்த ஓட்டல் பாம்பு மாமிச உணவுக்கு புகழ் பெற்றது'' என்று கூறினார். வெளியே தர்பார் ஓட்டல் இந்தியன் டிஷ் என்று பெயர் பலகை இருக்கின்றது என்று கேட்டதற்கு... ''அதற்கு பக்கத்து வாசல் வழியாக செல்ல வேண்டும்'' என்று கூறி வெளியே வந்து ஓட்டலுக்கு வழி சொல்லி அனுப்பி வைத்தார். வெளியே வந்து பாம்புகறி ஓட்டலின் பெயர் பலகையை உன்னிப்பாக கவனித்தோம். அந்த ஓட்டலின் பெயர் 'ஷங்காய் சி சுவான் கசின்'. அந்த பெயரின் கீழ் உடலுக்கு வலிமை தரும் சீ உணவு என்று எழுதப்பட்டிருந்தது. விதவிதமான பாம்புகளின் படங்களும் அதை கொண்டு சமைக்கப்பட்ட உணவின் படங்களும் டிஜிட்டல் பேனர்களில் வைக்கப்பட்டிருந்தன. திரும்பவும் உள்ளே சென்று உணவக நிர்வாகியிடம் பேசினோம்.

சீனாவில் திருமணம் மற்றும் முக்கிய விசேஷங்களில், வகை வகையான பாம்பு கறி உணவுகள் கண்டிப்பாக இருக்கும். என் மகன் முதஸ்ஸிர் அர்பாத் பாம்புக்கறியை எப்படி சமைக்கிறார்கள் என்று பார்க்க விரும்பினார். அதன்படி ஓட்டல் நிர்வாகம் அனுமதியுடன் பாம்புக்கறி சமையலறைக்கு சென்று பார்த்தோம்.

கோழிப்பண்ணையில் கோழிகளை அடைத்து வைத்திருப்பதைப்போல் தனித்தனியாக ரேக்குகளில் ஜால் கட்டிய வலைச் சுவருக்குள், அறை அறையாக பிரிக்கும் கண்ணாடிச் சுவர்களில் நடுவில், மற்றும் பைபர் மூடிகளின் இடையில் பாம்பை அடைத்து வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.

''இதையெல்லாம் எங்கு வாங்குகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு ''இந்தியாவில் மாட்டுப் பண்ணை, ஆட்டுப் பண்ணைகள் இருப்பதைப் போல், இங்கு கிராமங்களில் பாம்பு பண்ணைகள் இருக்கின்றன. அங்கிருந்து வாங்குகின்றோம்'' என்றனர்.

எங்கள் கண் முன்னாலே சீறிப்பாயும் ஒரு கருநாகத்தின் கழுத்தைப் பிடித்து வெளியே எடுத்தார். அதன் உடலில் நடுவயிற்றுப் பகுதியை கத்தியால் கிழித்து அதன் பச்சை நிற பித்தப் பையை வெளியே எடுத்தார். ஒயின் என்னும் பிராந்தி பாட்டிலில் அதை போட்டு மூடினார். பாம்பின் பித்தப்பை கலந்த மதுபானங்கள் நம் நாட்டில் விலையுயர்ந்த மது என்றார்.

பின் பாம்பின் தோலை உரித்தார். லேசான கிறீம் நிறத்தில் இருந்த பாம்பின் சதைப்பகுதியை சிறிய துண்டுகளாக வெட்டி அதை பாத்திரத்தில் போட்டார். பாம்பின் உடல் மெல்ல மெல்ல துடித்துக் கொண்டிருப்பதை நம்மால் காணமுடிந்தது. அதை தண்ணீரில் கழுவினார். லேசான சிவப்பு நிற மசாலாவை சேர்த்தார். சிக்கன் 65 போல் சிவந்துவிட்டது. அடுப்பு கடாயில் கொதித்துக்கொண்டிருந்த மணிலா எண்ணெயில் (நாம் வடை சுடுவதைப் போல்) பொரித்தார். அதன்படி மாமிசத்தின் நிறம் கருத்துவிட்ட பின் எண்ணெயில் இருந்து வெளியே எடுத்தார். இப்படித்தான் சீன மக்கள் பாம்பு கறியை சமைத்து சாப்பிடுகிறார்கள்.

''பாம்புக்கறி சுவைமிக்க விருந்து மட்டுமல்ல. உயிரைக் காக்கும் மருந்தும் கூட'' என்றார் அந்த சமையல்காரர். அந்த மருந்து எங்கு கிடைக்கும் என்று கேட்டேன். எங்கள் கடையிலிருந்து 5வது கடையில் கிடைக்கின்றது. அங்கு சென்று பாருங்கள். அது தாம்பத்ய உறவுக்கு வலிமை தரும் சிறந்த பொருள் என்றார்.

அந்த கடையை நோக்கிச் சென்றேன் வியந்து போனேன். பாம்பு கொழுப்பால் தயாரிக்கப்பட்ட ஏகப்பட்ட கிரீம் வகைகள் இருந்தன. அதை சீன மக்கள் பாலுறவு உறுப்புகளில் விறைப்பும், வீரியமும் அதிகரிக்க அடிக்கடி பூசிக்கொள்கிறார்கள்.

நன்றி: தேவி

---

# பாலை அடிக்கடி சூடேற்றலாமா?



பசும்பாலை காய்ச்சி நேரடியாகவோ அல்லது தேனீரில் கலந்தோ அருந்தும் பழக்கம் பெரும்பாலும் நம் மத்தியில் நசிந்து போயுள்ளது. அந்த அளவுக்கு நாம் பால் பவுடருக்கு பழகிவிட்டோம். இந்தியாவில் பவுடர்பால் உபயோகிக்கும் வழக்கம் மிக குறைவு. நீண்ட பயணம் போன்ற விசேஷ சந்தர்ப்பங்களில்தான் பவுடர்பால் உபயோகிக்கிறார்கள்.

இருந்தாலும் பசும்பால் பாவனைபற்றி இங்கே கொஞ்சம் பார்ப்போம். ஏனெனில் பசும்பாலை குறைந்த அளவிலேனும் உபயோகிப்பவர்கள் வடக்கு,கிழக்கு மற்றும் மலையகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

காலையில் காய்ச்சிய பாலை நாள் முழுவதும் கெடாமல் வைத்திருப்பதற்காக அடிக்கடி பாலை சூடேற்றுவார்கள் நம் பெண்கள். ஆனால் அதை முறைப்படி சூடாக்கவில்லை என்றால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மும்பையைச் சேர்ந்த சுமார் 300 இல்லத்தரசிகளிடையே நடத்திய ஆய்வின்படி, அந்தப் பெண்மணிகள் அனைவரும் பாலில் கிருமிகளின்றிச் செய்வதற்கும் அது அதிக நேரம் கெடாமல் இருப்பதற்கும், அதை அடிக்கடி சுடவைத்துக்கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது. ஆனால் அவர்கள் அதைச் சூடேற்றிய முறையின் காரணமாக, பாலிலிருக்கும் முக்கியப் போஷாக்கு சத்துகள் அழிந்து கொண்டிருக்கின்றன.

இந்திய மருத்துவ கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பவன் குப்தா இப்படிச் சொல்கிறார்: ''பாலை அதிக வெப்பநிலையில் நீண்ட நேரம் காய்ச்சுவதால் அதிலிருக்கும் வைட்டமின் பி-1, பி-2 மற்றும் பி-13 போன்ற திரவத்தில் கரையக்கூடிய போஷாக்கு சத்துக்கள் ஆவியாக மாறிவிடுகின்றன. சாதரணமாகப் பாலை 2 முறைக்கு மேல் அதுவும் 2,3 நிமிடங்களுக்கு மேல் காய்ச்சக்கூடாது'' என்று கூறுகிறார் இவர்.

மேற்கூறிய ஆய்வில் 56 சதவீதம் பெண்கள், பாலை 5 நிமிடங்களுக்கு அதிகமாக காய்ச்சுவதாகவும், 41 சதவீதம் பெண்கள் ஒரு நாளைக்கு 3 முறைகளுக்கும் அதிகமாக காய்ச்சுவதாகவும் தெரியவந்தது. பால் என்பது ஒரு புரதப்பொருள் என்றும், அதை அதிக வெப்ப நிலையில் மீண்டும் மீண்டும் காய்ச்சுவதால் அதன் இயற்கையான கட்டுமானம் மாறி விடுவதாகவும் டாக்டர் குப்தா தெரிவிக்கிறார்.

எனவே தேவையான அளவு பாலை காய்ச்சிப் பயன்படுத்துவதும் மிகுதியை பிரிட்ஜில் வைத்து விடுவதுமே சிறந்தது. குளிர்பதன் பெட்டியில்தானே, இருந்துவிட்டு போகிறது என்று அலட்சியமாக இருக்கவேண்டாம். பசும்பாலை அன்றைய தினமே அல்லது மறுநாள் காலையில் பயன்படுத்தி முடித்துவிட வேண்டும்



நீதிபதி: நீ ஏன் சாமி சிலையை திருடினாய்?

குற்றவாளி: வெளியூரை சுற்றிக் காட்டுறதா சாமிக்கிட்ட வேண்டிக்கிட்டேன்.

- சி.புஸ்பராஜ், இறக்குவானை

# ஜன்னலுக்கு வெளியே...



கணவன்:
சாமியாரைப் போய்ப் பார்க்க பயமா இருக்கு...

மனைவி:
எதுக்குப் பயப்படணும், நீங்க ஆம்பிளைதானே?



சரியான விடை:

ராம்சரண்

1. அனூப்- நீலாவணை- 02
2. ஞானசௌந்தரி- அபுகஸ்தலாவை
3. மகேந்திரன்- கல்பிட்டிய
4. ரஸ்வி- புத்தளம்
5. தர்ஷி- புத்தளம்
6. ஜே. விதுஷா- புன்னாலைக்கட்டுவான்
7. பி.எஸ் அசார்தீன்- வத்தளை
9. நப்லா நியாஸ்- வெலிகமை
10. சபானா- தர்காடவுன்
11. டி. ஜெயந்தி- மட்டக்களப்பு
12. இந்து- அக்கறைப்பற்று
13. எஸ் ரெஜினா- பருத்திதுறை
14. எம்.என்.எம். இக்ரம்- பேருவளை
15. எஸ் ஜெசிந்தா- பூந்தோட்டம்
16. ஐ. தனுஷியா- வல்வெட்டித்துறை
17. அசாரா அஸ்ரி- பாணந்துரை
18. எப்.ரசீதா- குருநாகலை
19. ஜெரி ஜோன்சன்- மானிப்பாய்
20. எஸ். தேவி- மட்டக்குளிய- 15
21. ஆர். எழில் பிரகாஸ்- கொடிகாமம்.
22. சத்தியராஜ்- வெள்ளவத்தை
23. கே. நிலக்ஷினி- மாவத்துர
24. எச்.எப்.சுக்னா- காத்தான்குடி
25. சியா-வவுனியா
26. சிந்து- யாழ்ப்பாணம்
27. கே. புஸ்பராஜ்- இறக்குவானை
28. மோகனா அர்ஜுன்- இரத்தினபுரி
29. வி.கார்த்திகா- செங்கலடி
30. எஸ்.சுகந்தா- நெடுந்தீவு




- அம்ஜத்கான்,
மித்யால

## சொல் விளையாட்டு - 23

சரியான விடைகள்

இடமிருந்து வலம்
கரப்பந்து, டென்னிஸ், மானிடம், தோனி,

மேலிருந்து கீழ்
கரம், ரம்மி, பட்மின்டன், துயர், டெனிஸ், மானி

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

1. எஸ். ஜானகி, இரத்தினபுரி
2. எம். ஜாவத், கல்முனை
3. என்.ஜீவராஜா, கொழும்பு



ஹலோ பிரண்ட், ஹெல்ப் மீ... நான் வீட்டுக்கு போகணும் என் வாயில் சாராய வாடை வீசுதான்னு பார்த்து சொல்லுங்க...!

பொலிஸ்க்கும், பிரண்டுக்கும் உனக்கு வித்தியாசம் தெரியாதாடா?

அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். 'காவல்காரன் உங்கள் நண்பன்' என்று சொல்றது உங்களுக்குத் தெரியாதா...?

- எஸ். கவிதா, கண்டி



ஆறு அதிர்ஷ்டசாலிகள்

1. எச்.எஸ். ருக்ஸானா- கந்தளாய்
2. எம். காஞ்சனா- குளியாப்பிட்டி
3. எஸ்.எம்.யாசீர்- மூதூர்
5. ஜெ. யஸ்மிகா- மன்னார்
6. கே. வினோதினி- அச்சுவெலி

சுட்டும் சிஷ்யனும்

கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்து போட்டி - 23

விடைகள்

இடமிருந்து வலம்

சப்ரகமுவ. சவால், ஜாடி, சன், தில்லானா மோகனாம்பாள், ரஜனிகாந்த், பலம், கிலி, காலம், கிராம், கிலி, ருக்மணி, பசி, சிகப்பு, காட்டில் மழை, வையம்.


மேலிருந்து கீழ்

சந்திரன், ரவி, கஜானா, முடி, சஹானா, வாசம், விலா, சம்பளம், கத்தி, பாலம், காலணி, திகில், கருங்காலி, காமன், ராச்சியம், கிளி, பழைய, கலவை, புஜம், காலி

சரியான விடைகளை எழுதிய ஒரே வாசகி

வஸந்தா பாலேந்திரா
கொழும்பு- 6

# பிரதீபா பிரபா விருது பெற்ற அதிபர் மனோகரன்



களுத்துறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூல சிறந்த அதிபராக ஹொரண கல்வி வலய களு/றைகம் எஸ்டேட் கீழ்பிரிவு தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபரான பீ.மனோகரன் 'பிரதீபா பிரபா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மீபே கல்வி அபிவிருத்தி நிலையத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் அண்மையில் இந்த விருது வழங்கப்பட்டது.

களுத்துறை மாவட்டத்தில் பிரதீபா பிரபா விருதை வென்ற ஒரேயொரு தமிழ்மொழி மூல அதிபர் இவராவார்.

# படம் சொல்லும் கதை



1980 முதல் 1983 இனக்கலவரங்கள் இடம்பெற்றன வரை, இலங்கையில் அனைத்து இடங்களிலும் கிறேஸி குரூப் வழங்கிய மரிக்கார் ராம்தாஸின் 'கிறேஸி கோமாளிகள்' நாடகம் மேடையேற்றப்பட்டு வந்தது. நாடளாவிய ரீதியில் 150 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட தமிழ் நாடகம் இதுவாகத்தான் இருக்கும். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மட்டும் 'கிறேஸி கோமாளிகள்' 24 தடவைகள் மேடையேறியது.

யாழ் குடாநாட்டின் பல இடங்களில் மட்டுமன்றி மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி மற்றும் மலையகத்தில் பல இடங்களிலும் ஆயிரக்கணக்கான ரசிகர்களை 'கிறேஸி கோமாளிகள்' மகிழ்வித்தனர்.

1980களின் முற்பகுதியில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் (தனியார் எப்.எம் வானொலிகள் அப்போது இருக்கவில்லை) காலை இடம்பெறும் பொங்கும் பூம்புனல்' நிகழ்ச்சியின்போது 'கிறேஸி கோமாளிகள்' எங்கு எப்போது நடைபெறுகிறது என்று ஏழெட்டு Spot விளம்பரங்கள் பி.எச். அப்துல் ஹமீட், ஜோக்கிம் பெர்ணாண்டோ மற்றும் ராஜேஸ்வரி சண்முகத்தின் குரலில் ஒலிபரப்பாகும். அந்த விளம்பரங்கள் குறிப்பிட்ட தினத்தன்று மாலை 5 மணிக்கு பம்பலபிட்டிய கதிரேசன் மண்டபத்துக்கு கூட்டத்தை வரவழைக்கும்.

6.30க்கு நாடகம் ஆரம்பிக்கும்போது அத்தனை சீட்டிலும் நாடக ரசிகர்கள் நிறைந்திருப்பார்கள். நாடகங்களுக்கு ஹவுஸ்புல் போர்ட் போடுவதில்லை. டிக்கெட் முடிந்துவிட்டது என்றால் போதும். ரசிகர்கள் கவலையுடன் திரும்பிச் செல்வார்கள். ஆனால் அடுத்தமுறை நாடகம் மேடையேறும்போது அந்த ரசிகர்கள் முதலாவதாகவே வந்து விடுவார்கள்.

1981இல் கிறேஸி குரூப் மட்டக்களப்பில் 'கிறேஸி கோமாளிகள்' நாடகத்தை மேடையேற்றச் சென்றிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. இதில் இடமிருந்து வலமாக நடராஜா ராமலிங்கம், எஸ். செல்வசேகரன், ராம்தாஸின் உறவினர், எஸ். ராமதாஸ், எஸ். சிவசுந்தரம், டி.ராஜகோபால், ராஜா, எஸ்.குமாரவேல், ஜோக்கிம் பெர்ணாண்டோ, கே.சந்திரசேகரன் ஆகியோர் பின்னால் நிற்பதையும், பிரியா ஜெயந்தி, ராம்தாஸின் உறவினர், ஜெயதேவி, கந்தையா, ஸ்ரீதேவி கந்தையா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

நாடகத்தில் கதாநாயகனாக நடித்த ஈஸ்வரன் இப்படத்தில் ஏன் இடம்பெறாமல் போனார் என்பது புதிராக உள்ளது.

- ராம்ஜி

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்



தெளிவத்தை ஜோசப்

# சென்றார்கள் வென்றார்கள்

எம். டி. குணசேனாவின் தமிழ்ப் பதிப்புகளுக்குப் பொறுப்பாளராக முக்கிய பதவியில் அமர்ந்தார். நிறையவே தமிழ்ப் புத்தகங்களை குணசேனா மூலம் வெளியிட்டார்.

அப்போது தினகரன் வாரமஞ்சரியில் நீண்ட தொடர் கட்டுரையை ஆரம்பித்தார். கட்டுரையின் தலைப்பும் நீண்டதாகவே இருந்தது. 'ஈழத்துப் படைப்பாளியின் தமிழகத்து கலை இலக்கிய சுவடுகள்'

வாரமஞ்சரியில் என்னுடைய 'மலையகச் சிறுகதை வரலாறு' வந்து கொண்டிருந்த காலம் அது. ஒரு பக்கம் என்னுடைய தொடர் கட்டுரை. மறுபக்கம் அவரது தொடர் கட்டுரை.

தினகரன் என்னும் செய்திப் பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் இரண்டு இலக்கியத் தொடர் கட்டுரைகள். நினைக்கவே ஆனந்தமாக இருந்தது. என்னுடைய 23ஆவது கட்டுரை வரும்போது, அவருடையது 20ஆவது வரும்.

அவருடைய கட்டுரைகள் சில தமிழக மற்றும் ஈழ எழுத்தாளர்களை நோகச் செய்யும் விதத்தில் அமைந்திருந்தது. எதிர்ப்புகள் கிளம்பின. தமிழகத்தில் அவர் இருந்தபோது அவரது செயற்பாடுகள் பற்றிய செய்திகள் தகவல்களாக அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. நகல் பிரதிகள் ஆளுக்காள் அனுப்பி வைப்பட்டன. இவை எதையும் அறியாதவனாகவே நான் இருந்திருக்கிறேன்.

என்னுடைய 'மலையக சிறுகதை வரலாறு' 24ஆம் அங்கம் வந்தபோது பிரதம ஆசிரியர் அமரர் ராஜஸ்ரீகாந்தன் என்னை தொலைப்பேசியில் அழைத்தார். வணக்கம் கூறினார். ''தெளிவத்தை உங்களது தொடர்கட்டுரையை அடுத்த வாரத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

இலக்கிய கட்டுரைகளை இவ்வளவு நீண்டகாலம் பிரசுரிக்க வேண்டாம் என்று மேலிடம் தனக்கு அழுத்தம் தருவதாகக் கூறினார். எனக்குத் தூக்கிவாறிப்போட்டது. ஒரு வரலாற்றுக் கட்டுரையை அடுத்த வாரத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள் என்றால் எப்படி? மற்றவைகளை எப்படிப் பதிவு செய்வது; யாரிடம் போய்க்கேட்பது?

ஸ்தம்பித்துப்போன நான் ஏதோ கேட்பதற்காகப் பேசியபோது மறுமுனை துண்டிக்கப்பட்டிருந்தது. அடுத்தவாரத் தினகரனில் இரண்டு தொடர்க் கட்டுரைகளுக்கும் 'முற்றும்' போடப்பட்டிருந்தது.

'ஈழத்துப் படைப்பாளியின் தமிழகத்து கலை இலக்கியச் சுவடுகள்' என்னும் அமரர் செ. யோகநாதனின் கட்டுரை தினகரனில் 25 வாரங்கள் தொடராக வந்தது.

அவருடைய தமிழகத்துடனான கலை இலக்கியத் தொடர்புகள் பற்றிய ஒரு விரிவான பதிவு இது.

நானும் யோகநாதனும்; கார்மேகமும், சிவநேசச் செல்வனும், உரையாடிக் கொண்டிருக்கையில் ஒரு சில சிங்கள இலக்கியவாதிகளுடன் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா வந்துகொண்டிருந்தார்.

ஒரு ஐம்பது பேர் பயணம் செய்யத்தக்க குளிரூட்டப்பட்ட பஸ் தயாரான நிலையில் நிற்கின்றது.

ஒவ்வொருவராக வர வர ஏறி அமர்ந்தாலும் பாதி பஸ் கூட நிறையவில்லை. கூடுதலான சிங்கள நண்பர்கள் ஊடகவியலாளர்களாகவே இருந்தனர்.




வெளிநாட்டுக்காரர்களும்; உள்நாட்டில் சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமே சென்று வந்த யாழ்ப்பாணத்துக்கு இன்று தாங்களும் செல்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதில் சிங்கள பத்திரிகையாளர்கள் குஷியாகவும், மகிழ்வாகவும் இருந்தனர்.

சொகுசு பஸ்ஸில் டிக்கட் ஏதும் இல்லாமல் ஒரு ஊடகவியலானுக்குள்ள அத்தனை கௌரவங்களுடன் நாங்கள் அவர்களைக் கூட்டிச்செல்வதையிட்டு பெருமகிழ்ச்சி கொண்டிருந்தோம்.

தமிழ் எழுத்தாளர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றையோர் நன்றாகவும் ஒரு சிலர் சுமாராகவும் சிங்களத்தில் உரையாடக்கூடியவர்களாகவே இருந்தோம். அதுவும் கூட அவர்களுக்கு ஒரு வாய்ப்பாகவும்; தம்மில் ஒருவருமே தமிழில் உரையாட முடியாதவர்களாக இருக்கிறோமே என பதில் வருத்தமாகவும் இருப்பதை சுலபமாக உணரக்கூடியதாக இருந்தது.

மொழி தெரியாததனால்தான் ஒருவருடன் ஒருவர் பழகவும் பேசவும் முடியாத பயமும் கூச்சமும், ஒதுங்கலும் இருக்கிறது.

புரிந்துணர்வு இல்லாமல் போனதால்தான் பிரச்சினைகள் பெரிதாகின.

ஏழரை மணியளிவில் பஸ் புறப்படத் தொடங்கியது. எப்படியும் இரவு ஒன்பது பத்தாகும் என்று எண்ணிக் கொண்டேன்.

ப்ளெஷர்கார் போல் ஒரு சுகமான குலுக்கலுடன் பஸ் ஓடத் தொடங்கியதும், பஸ்ஸுக்குள் தமிழ்ப் பாட்டு ஓடத் தொடங்கியது இசையில் லயித்திருந்த சிங்களச் சகோதரர்களும் தலையசைத்து ரசித்தனர். நாம் இந்திப் பாடல்களை ரசிப்பதுபோல்.

ஒரு ஐந்து நிமிடம் இறங்கி நிற்க, தேநீர் அருந்த என்று பஸ்ஸும் நின்று நின்றோடியது. பசுமையான காட்சிகள் ஜன்னலினூடாகத் திரைப்படம் போல் ஓடிச் சென்றன.

வவுனியா தாண்டியதும்தான் இப்பசுமைக் காட்சிகள் நெருப்புக்காட்சிகளாயின. போரின் கோரவிளைவுகள் வெளிக்காற்றை உஷ்ணமாக்கின. இடிந்தழிந்த கட்டிடங்களும் கருகித்தீய்ந்த மரங்களும் இன்னும் இன்னும் என்று ஓடிக்கெண்டிருந்தன.

கொழும்பிலிருந்து வவுனியா 160 மைல். ரயில் பயணம் என்றால் ஆறு மணித்தியாலம். பஸ் என்பதால் எட்டு மணிநேரம் பயணம் செய்து பின்னேரம் மூன்று மணியளவில் வவுனியாவை அடைந்தோம்.

ஒரு காலத்தில் இந்த நாட்டுக்குக் கூடுதல் வருமானம் பெற்றுத்தந்த போக்குவரத்துத்துறையாக இருந்தது இந்த கொழும்பு யாழ் புகையிரத சேவை. இலங்கையின் முக்கிய ரயில் சேவைகள் மூன்று. கொழும்பு-பதுளை, கொழும்பு-மாத்தறை, கொழும்பு யாழ்ப்பாணம். இம்மூன்றிலும் கூட மிகவும் லாபகரமான; நீளமான ரயில் பாதை கொழும்பு- யாழ்ப்பாணம் ரயில் பாதைதான். இந்த ரயில் பாதையின் இப்போதைய நிலையும சீரழிந்த நிலைதான். வவுனியாவுக்கு அப்பால் யாழ்ப்பாணம் வரை ரயில் சேவை ஒன்று இருந்ததற்கான அடையாளம் கூட இல்லாமல் போய் விட்டது.

ஈழம்; தமிழ் ஈழம்; என்னும் கோஷத்தின் ஆரம்ப நுழைவாயிலே வவுனியாதான்.

முன்னொரு காலத்தில் இருந்த மத்திய மலைப் பிரதேசம் போலவே, அடர்ந்த காடுகளும், மண்டிய புதர்களுமாக இருந்த இடம் இந்த வன்னி நிலம். பண்டாரவன்னியன் ஆண்ட இந்த வன்னி நிலத்தின் தலைநகர் வவுனியாதான்.

ஒரு சூன்யப் பிரதேசமாகக் கிடந்துவிட்ட இந்த வவுனியாக் காடுகளில் ஒரு காலத்தில் வடபுலத்தின் தீவுப் பகுதி மக்களும்; மலையக மக்களும் படிப்படியாகக் குடியேறி வவுனியாவை வளப்படுத்தினர். பிரதேசம் வளம் பெறத்தொடங்கியபின் அரசு சிங்கள மக்களையும் குடியேறச் செய்தது.

(தொடரும்)



ரேவதி   செம்பியன் செல்வன்   சபாஜெயராஜா   விமல் சுவாமிநாதன்   தெளிவத்தை   சிவலிங்கராஜா   ஓ.கே.குணநாதன்   செ. யோகநாதன்

கா. சிவத்தம்பியின் பார்வையில்...

# தமிழ்த் திறனாய்வு ஊனப்பட்டிருப்பது ஏன்?

## 1978ம் ஆண்டு திருச்சியில் பேராசிரியரைச் சந்தித்த செந்தலை ந.கவுதமன், அவரை நினைவு கூர்கிறார்

இலக்கியக் கூட்டத்தில் அப்படியொரு காட்சியை அதற்கு முன் நாங்கள் பார்த்ததில்லை. நெடிய உருவம்! கனத்த உடல்! வெண்சுருட்டை வாயில் வைத்துப் புகைத்தபடியே அந்த உருவம் ஒலிவாங்கிமுன் உரையாற்றிக் கொண்டிருந்தது. வாயிலிருந்து பேச்சும் புகையும் சேர்ந்து வந்தபடி இலக்கிய உரை நிகழ்ந்த காட்சி, அன்று புதிது! (இன்றும் புதிதுதான்!) திருச்சி மலைக்கோட்டைக்குக் கீழே நகர மண்டபக் கட்டடத்தில் அப்படிப் பேசிக்கொண்டிருந்தவர் ஈழத்துத் தமிழறிஞர் கா.சிவத்தம்பி! கையில் வெண்சுருட்டு கனிந்து உதிர்ந்தபடி இருக்க, ஒலிவாங்கியைப் புகையால் குளிப்பாட்டியபடி அவர் பேசிய காட்சி, கூடியிருந்த அனைவருக்கும் வியப்பையும் திகைப்பையும் தந்தது. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி! நூறு பேருக்குக் குறையாத கூட்டம்! திருச்சி தேசியக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் த.மணிமாறன் தலைமை! 'தமிழில் இலக்கியத் திறனாய்வு' என்னும் தலைப்பில் கா.சிவத்தம்பி பேசிக் கொண்டிருந்தார். 1.7.1978ஆம் நாள் நடந்த நிகழ்ச்சி இது! இதற்கு முன் க.கைலாசபதி கூட்டமும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது நெருக்கடி நிலைக்காலம். அனைவரும் வந்துவிட்ட நிலையில், காவல்துறை தலையிட்டுக் கூட்டத்தை ஒத்திவைக்கச் செய்தது. நெருக்கடி நிலை தளர்ந்த, ஜனதா கட்சி ஆட்சி என்பதால் சிவத்தம்பி கூட்டத்திற்கு எந்தச் சிக்கலும் இல்லை. சிவத்தம்பி பேசி முடித்த பின், அவையோர் வினாக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சியும் தொடர்ந்தது. கூட்டம் முடிந்த பின் சேவற் கொடியோனும் நானும் சிவத்தம்பியைத் தொடர்ந்தோம். விடுதியில் சென்று சந்தித்தோம். நேர்காணல் காண்பது எங்கள் நோக்கம்! கூட்டத்தில் தொடங்கிய வினாவிடை நிகழ்ச்சியை அறையிலும் தொடர அவருக்கு விருப்பமில்லை. 'என்ன புத்தகம்?' என் கையிலிருந்த



புத்தகத்தைப் பார்த்துக் கேட்டார். கவி.கா.மு.செரீப் எழுதிய 'குறளா? குர்ஆனா' புத்தகம் வைத்திருந்தேன்; தந்தேன். சிவத்தம்பி புரட்டிப் பார்த்ததும், அவரின் கையெழுத்தைப் புத்தக முகப்பில் வாங்கிக் கொண்டேன். அதன் பின்னர் நான் அவரிடம் கையளித்த கேள்விகளுக்கு அவர் இலங்கை சென்ற பின்னர் பதில்களை அனுப்பி வைத்திருந்தார்.

இதோ தமிழ்த் திறனாய்வு பற்றி சிவத்தம்பி திறனாய்கிறார்:

''தமிழிலக்கிய விமர்சனத்தில் காணப்படும் முக்கிய குறைபாடு அது. பெரும்பாலும் தற்காலத் தமிழிலக்கியத்தையும் அதற்கு முந்திய இலக்கியங்களையும் ஒன்றுடன் ஒன்று இணையாத இரு இலக்கியத் தொகுதிகளாகக் கொள்ளும் உளவியல் எல்லைக் கோட்டு வரையறைக்கு உட்பட்டு நிற்பதே அதுவாகும்.

தமிழிலக்கியம் முழுவதையும் பூங்குன்றன் முதல் செல்வராஜ் வரை, கபிலன் முதல் அப்துல் ரகுமான் வரை ஒன்றிணைந்த ஆனால் காலவேறுபாடுகளால் இலக்கிய ரசனை விகற்பங்களுடைய ஒரு தொகுதியாக நோக்கும் பண்பு நம்மிடம் வளரவில்லை.

தமிழிலக்கிய வரலாற்றின் வழியாக மாத்திரம் வரக்கூடிய இலக்கிய ஒருமையுணர்வு பலரிடமில்லை. விமர்சனத் துறையில் வாழ்க்கை வரலாற்றையும் ஆக்கத்தையும் காய்தல் உவத்தலின்றி ஒளிவு மறைவின்றி ஆராயும் பண்பு இன்னும் நம்மிடையே வளரவில்லை.

' சங்கச் சான்றோர் முதல் வரதராசன் வரை யாவரையும் நிறைவுடைய மனிதர்களாகக் காணவேண்டுமென்ற பண்பாட்டு உந்துதல் காரணமாக நம்மிடையே விமர்சனம் ஊனப்பட்டு நிற்கின்றது." முப்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிய இந்த நேர்காணல் வழியாக, தாம் வகுத்த வரையறைக்குள் வளர்ந்தபடி இருந்துள்ளதை அனைவரும் அறிய வைக்கிறார் அந்தநாள் சிவத்தம்பி.

நன்றி: காக்கை சிறகினிலே


# Bios என்றால் என்ன?

வானவில் dot.com

ஜீசா

கணினியை இயங்க ஆரம்பித்ததும் ப்ரோசெஸ்ஸரினால் முதன் முதலில் அணுகப்படும் ஒரு கணினி செய்நிரலே (program) பயோஸ் (BIOS) எனப்படுகிறது. BIOS என்பதன் சுருக்கம் Basic Input / Output System என்பதாகும். அதன் மூலம். நினைவகம், ஹாட் டிஸ்க், மற்றும் துணைச் சாதனங்கள் அனைத்தும் முறையாக இயங்குகிறதா என்பதைச் சரி பார்த்து உறுதி செய்து கொள்ளும்.

பயோஸ் என்பது கணினியிலுள்ள இயங்கு தளத்திலிருந்து வேறுபட்டது. ஹாட் டிஸ்கில், சேமிக்கப்பட்டிருக்கும். இயங்குதளம் கணினிக்கும் அதனைப் பயன்படுத்துபவர்களுக்குமான ஒரு இடை முகப்பை வழங்கிறது. எனினும் பயோஸ் ப்ரோக்ரமானது கணினி மதர்-போர்டில் பொருத்தப்பட்டிருக்கும் ரொம் (Read Only Memory) எனும் நினைவக (Chip) சிப்பில் சேமிக்கப்பட்டிருக்கும். கணினியை இயக்கியதும் கணினியைக் கட்டுப்படுத்தி பின்னர் ஹாட் டிஸ்கிலுள்ள இயங்கு தளத்தை நினைவகத்தில் ஏற்றி கணினியை ஆரம்பித்து வைக்கிறது பயோஸ். இதனை Firmware எனவும் அழைப்பதுண்டு. ஏனெனில் இதில் நாம் மாற்றங்கள் செய்ய முடியாது.



கணினியில் பயோஸிற்கு பல பணிகள் வழங்கப் பட்டிருந்தாலும் இயங்கு தளத்தை ஆரம்பித்து வைப்பதே அதன் முக்கிய பணியாகும். கணினியை இயக்கியதும் பயோஸ் மைக்ரோ ப்ரொசஸருக்கு அதன் முதல் அறிவுறுத்தலை வழங்குகிறது. அனைத்து வன்பொருள்களும் முறையாக இயங்குகிறதா என்பதை சுய பரிசோதானை செய்து கொள்ளும். இதனை Power On Self Test (POST) எனப்படுகிறது ஹாட் டிஸ்க், சீடி ரொம் போன்றவற்றை இனம் காணுதல், நினைவகத்தின் அளவை சோதித்தல், ப்ரோசெஸ்ஸரின் வேகத்தை அளவிடல் கடிகாரம் மற்றும் முக்கிய செட்டிங்க்ஸ் என்பவற்றை நிர்வகித்தல். கிரபிக்ஸ் காட் (Graphics Card) , சவுண்ட் காட் (Sound Card) போன்ற ஏனைய சாதனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் இது போன்ற வேறு பயோஸ் சிப்புகளை ஆரம்பித்து வைத்தல் அவற்றின் ஏனைய பணிகளில் அடங்குகின்றன..

கணினியை இயக்கியதும் ஆரம்பிக்கும் பயோஸ் ப்ரோக்ரமுடைய வழமையான பணி ஒழுங்கில் CMOS I பரிசோத்திப்பதன் மூலம் பயனர் தெரிவுகளில் ஏதாவது மாற்றங்கள் உள்ளதா என்பதைப் உறுதி செய்தல். மின் சக்தி வழங்கியை நிர்வகித்தல் (Power Management) மற்றும் எந்த ட்ரைவிலிரிருந்து இயங்கு தளத்தை ஆரம்பிப்பது (Boot Sequence) என்பதைத் தீர்மானித்தல் போன்ற பல பணிகள் அடங்குகின்றன.

திகதி, நேரம் மற்றும் கணினியின் ஏனைய செட்டிங்ஸ் விவரங்களை பேட்டரி மின்சக்தியில் இயங்கும் ஒரு நினைவக சிப்பில் சேமிக்கிறது. இதனையே (CMOS) சிமோஸ் எனப்படுகிறது. BIOS (Basic Input/Output System) என்பதும் CMOS (Complementary Metal Oxide Semiconductor) என்பதும் ஒன்றையே குறிப்பதாகப் பலரும் தவறாகக் எண்ணுகின்றனர். இவற்றிற்கிடையே தொடர்புகளிருந்தாலும் இரண்டும் வேறு பட்டவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பயோஸ் என்பது கணினியை இயக்கும் அதேவேளை தேதி, நேரம் மற்றும் செட்டிங்ஸ் விவரங்களை பயோஸ் சேமித்து வைக்குமிடமே சிமோஸ் எனும் சிப்பாகும். சீமோஸ் என்பது ஒரு வகை நினைவகம்.

சீமோஸில் மாற்றங்கள் செய்ய கணினியை ஒன் (On) செய்தவுடனேயே கீபோர்டில் குறித்த ஒரு விசையை அழுத்த வேண்டும். இதற்கான அறிவுறுத்தல் கணினியை ஆரம்பித்துமே திரையின் கீழ் எந்த விசையை அழுத்த வேண்டும் என்பதைக் காண்பிக்கும். சீமோஸ் செட்டபில் நுளைந்ததுமே CMOS கணினிப் பயனருக்குப் பல தெரிவுகளைச் செய்ய அனுமதிக்கிறது. தேதி மற்றும் நேரத்தை மாற்றியமைப்பது, கணினியை எந்த ட்ரைவிலிருந்து இயக்கி இயங்கு தளத்தை ஆரம்பிப்பது பூட் செய்யப்படும் ஒழுங்கு (Boot Sequence), பாஸ்வர்ட் செட்டிங், நினைவக செட்டிங். மின் வழங்கியை நிர்வகித்தல் போன்ற பல செட்டிங்ஸை மாற்றியமைக்கக் கூடிய வசதியைத் தருகிறது.

பயோஸ் ப்ரோக்ரமை காலத்துக்குக் காலம் புதுப்பிக்கவும் (update) முடியும். புதிதாகத் தயாரிக்கப்பட்ட ஏதாவது வன்பொருள் சாதனங்களைக் கணினி இனம் காண வேண்டுமானால் அந்த பயோஸை வடிவமைத்த நிறுவனத்தின் இணைய தளத்திலிருந்து அதன் புதிய பதிப்பை டவுன் லோட் செய்து கொள்ள வேண்டும். பயோஸை அப்டேட் செய்வதற்குரிய யூட்டிலிட்டியும் அதனுடன் இணைந்து வரும்.

யூட்டிலிட்டி ப்ரோக்ரமையும் அப்டேட் பைல்களையும் ஒரு ப்லொப்பி டிஸ்கில் அல்லது ஒரு சிடியில் பிரதி செய்து கணினியில் நுளைத்து இயக்க பழைய பயோஸ் பைல்களை அழித்து புதிதாக நிறுவிக் கொள்ளலாம். எனினும் பயோஸ் அப்டேட் செய்வதில் கூடிய கவனம் தேவை.


தற்போது கணினிகளில் பயோஸை அப்டேட் செய்ய வேண்டிய தேவை அரிதாகவே ஏற்படுகிறது. எனினும் பழைய கணினிகளிலுள்ள பயோஸ் சிப் தற்போது பாவனையிலுள்ள வன்பொருள் சாதனங்களை ஆதரிக்காது. 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்த கணினிகளில் பயோஸ் ஆனது அதன் ரொம் சிப்பை மாற்றுவதன் முலமே அப்டேட் செய்யப்பட்டது. எனினும் தற்போது EEPROM (Electrically Erasable Programmable Read-Only Memory எனும் நினைவக சிப்பிலேயே சேமிக்க்கப்படுவதால் ரொம் சிப்பை மாற்றாமலேயே தேவையேற்படின் பயோசை அப்டேட் செய்து கொள்ளலாம்.

## Send To மெனுவில் உங்கள் போல்டர்!

வானவில் Top Tips

விண்டோஸ் இயங்கு தளத்தில் ஒரு பைல் மீது ரைட் க்ளிக் செய்ய வரும் மெனுவில் Send To எனும் கமாண்ட் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த Send To கமாண்ட் மூலம் ஒரு பைலை இலகுவாக இ-மெயில் செய்யவோ, டெஸ்க்டொப்பிற்கு ஒரு Shortcut ஐ உருவாக்கவோ, அல்லது புலொப்பி ட்ரைவ் அல்லது பென் ட்ரைவிற்குப் பிரதி செய்யவோ முடியும்.

சில வேளைகளில் அந்த பைலின் பிரதியொன்றை குறிப்பிட்ட ஒரு போல்டரில் சேர்க்க வேண்டிய தேவையும் ஏற்படலாம். உங்கள் பைல்களை நீங்கள் எப்போதும் ஒரு குறிப்பிட்ட போல்டரிலேயே சேமிப்பதானால் அந்த போல்டரின் பெயரையும் Send To மெனுவில் சேர்த்து விடலாம். இதன் மூலம் உங்கள் வேலை இலகுவாவதுடன் மேலுமொரு விண்டோஸ் எக்ஸ்ப்லோரர் விண்டோவைத் திறந்து ஒரு போல்டரிலிருந்து இன்னுமொரு போல்டருக்கு பைலைப் பிரதி செய்யும் வேலையும் தவிர்க்கப்படுகிறது.




உங்கள் போல்டரை Send To மெனுவில் சேர்க்க நீங்கள் செய்ய முதலில் மை கம்பியூட்டரைத் திறந்து கொள்ளுங்கள். அங்கு Tools மெனுவில் Folder Options தெரிவு செய்யுங்கள். தோன்றும் டயலொக் பொக்ஸில் View டேபில் க்ளிக் செய்து Show hidden files and folders என்பதைத் தெரிவு நிலைக்கு மாற்றுங்கள். பின்னர் மை கம்பியூட்டர் விண்டோவில் (C:) ட்ரைவில் உள்ள Documents and Settings போல்டரைத் திறந்து உங்கள் User Account க்குரிய போல்டரையும் திறந்து கொள்ளுங்கள். அங்கு Send To எனும் போல்டரைக் காணலாம். பின்னர் Send To போல்டரைத் திறந்து அதனுள் File - New - Shortcut ஊடாக நீங்கள் Send To மெனுவில் சேர்க்க விரும்பும் போல்டருக்கு ஒரு Shortcut ஐ உருவாக்கிக் கொள்ளுங்கள். இப்போது ஏதேனுமொரு பைலின் மேல் ரைட் க்ளிக் செய்து Send To தெரிவு செய்ய அங்கு நீங்கள் Shortcut உருவாக்கிய போல்டரையும் காணலாம்.

## இந்த மாத டவுன்லோட்

### தெரியுமா கூகில் டூட்ல்?



கூகில் தேடற் பொறியின் லோகோவை இணைய பயனர் எவரும் இலகுவில் மறக்க மாட்டார்கள். எனினும் சில நாட்களில் இந்த வழமையான லோகோவுக்குப் பதிலாக வெறொரு லோகோவினை கூகில் தளத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பதை அவதானித்திருப்பீர்கள். சில வேளை அது ஒரு எனிமேசன் படமாகவும் இருக்கும். இதற்கு கூகில் டூட்ல் (doodle) எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த கூகில் டூட்ல் சில விசேட நாட்களிலும், உலகப் புகழ் பெற்றவர்களை நினைவு கூறுவதற்காகாவும், உலகில் சில விசேட நிகழ்வுகள் நடைபெறும் போதும் கூகில் தளத்தில் இடம் பெறும். மிக சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த கூகில் டூட்ல் இரண்டொரு தினங்கள் மட்டுமே கூகில் தளத்தில் நீடிக்கும். பின்னர் வழமையான லோகோவைக் காண்பிப்பார்கள். முன்னர் பதிப்பித்த கூகில் டூட்ல அனைத்தையும் கூகில் தனது வேறொரு இணைய பக்கத்தில் வெளியிட்டு வருகிறது. அவற்றை நீங்கள் www.google.com/doodles/ எனும் இணைய தளத்தில் காணலாம். கூடவே அவை பற்றிய மேலதிக தகவல்களையும் கூகில் இங்கு வெளியிட்டு வருகிறது.

## வார்த்தை அறிவோம்

### OCR (Optical Character Recognition)

அச்சிடப்பட்ட அல்லது கையால் எழுதப் பட்ட ஆவணமொன்றை ஸ்கேனர் மூலம் ஸ்கேன் செய்து அதிலுள்ள எழுத்துக்களை டைப் செயாமலேயே கணினியால் புரிந்து கொள்ளக் கூடியவாறு அல்லது ஒரு சொல் முறை வழியாக்க மென்பொருள் மூலம் எடிட் செய்யக் கூடிய வாறு மாற்றக் கூடிய ஒரு தொழில் நுட்பமே OCR (Optical Character Recognition) எனப்படுகிறது. இந்த வசதியை வழமையான ஒரு ஸ்கேனர் மூலம் பெற முடிவதோடு அதற்கான மென்பொருளும் ஸ்கேனரோடு இணைந்தே வருகின்றது. எனினும் இவ்வாறு ஸ்கேன் செய்வதன் மூலம் கிடைக்கும் வெளியீடு எப்போதும் நூறு வீதம் சரியாக இருப்பதில்லை. மேலும் இது எல்லா மொழிகளையும் ஆதரிப்பதில்லை, தமிழ் மொழிக்கென பொன் விழி எனும் OCR மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

# face பக்கம்

FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம். சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:

facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com



அடுத்தவன் பொண்டாட்டிய
காதலிச்சா அதுக்கு பேரு
கள்ளக் காதல், நாளைக்கு
அடுத்தவனுக்கு பொண்டாட்டியாக
போறவள காதலிச்சா நல்ல காதலாம்...
என்னங்கடா உங்க நியாயம்....?

nalla killapuringada beethiya facebook




KHprasha@facebook

## உங்க செருப்பின் அளவை வைத்தே உங்க வயதை கண்டுபிடித்துவிடலாம்...

எப்புடி?...

1) உங்க செருப்பின் அளவை எடுத்துகொள்ளவும்
2) அதை ஐந்தால்(5) பெருக்கவும்
3) ஐம்பதை(50) கூட்டவும்
4) இருபதால்(20) பெருக்கவும்
5) ஆயிரத்து பனிரெண்டால்(1012) கூட்டவும்
6) பிறகு வந்த விடையுடன் உங்கள் பிறந்த வருடத்தை கழிக்கவும்

இப்பொழுது வந்த விடையில் கடைசி இரண்டு இலக்கம் உங்கள் வயது முதல் இலக்கம் உங்கள் செருப்பின் அளவு...

கணக்கு சரியாக இருந்தால் உங்கள் நண்பர் மற்றும் உறவினர்களுடன் பகிர்ந்துக்கொள்ளுங்களேன்....




MKharunanidhi@facebook




Tharshana prabapathy @facebook




pahiyarasa@facebook

## நான் ஒரு தமிழன்

Tamilan Naam

தட்டி எழுப்பிய
தம்பிக்கு
"குட் மோனிங்"

தட்டில் உணவு கொடுத்த
அன்னைக்கு
" தேங்க்ஸ் மா "

தோளில் கைபோட்டு
துட்டு கொடுத்த தந்தைக்கு
"ஸ்வீட் பா"

முற்றலில் இருந்த
தங்கைக்கு
"பை சிஸ்டர் "

வீதியில் கண்ட
நண்பர்களுக்கு
"ஹாய் ஹாய் ஹை"

விலகிப்போன
நண்பிகளுக்கு
"ஹாய் ஸ்வீடி"

பள்ளிக்கூட
வளாகத்திலே
"பச்சை பச்சை ஆங்கிலம்"

வீடு திரும்பும் நேரத்திலே
காலிலே குத்திய கல்லுக்காய்
கத்தினேன் "அம்மா" –என்று

குத்தியது கல்லா - இல்லை
குத்திக்காட்டியது - தமிழா ???

Tamilan Naam





வாணி, கமலுடன் ரஜனி, லதா

தொகுப்பு: பா. பிரதீப்



தொகுப்பு: ஜெயா, ஹுணுப்பிட்டிய

## வானவில் மங்கை

### டிப்ஸ்

*பலகாரங்கள் எண்ணெய் வாடை வீசாமலிருக்க ஒரு கைப்பிடி கல் உப்பை சிறிய துணியில் போட்டு முடிச்சாக கட்டிவிட்டு பலகார பானையில் போட்டு வைத்தால் போதும்.*

*சீடை, தட்டை மொறு மொறு என்றிருக்க நெய்யோ எண்ணெய்யோ சேர்க்காமல் பாத்திரத்தில் அரிசிமாவை போட்டு பொன்னிறமாக வறுத்தெடுத்து செய்து பாருங்கள்.*

*குலோப்ஜாமுனுக்கு சீனிபாகு காய்ச்சிய பிறகு அதனுடன் 2 தேக்கரண்டி நெய்சேர்த்து கலந்து விட்டால் குலோப்ஜாமுன் ருசியோ ருசியாக இருக்கும்.*

# நீங்களும் உங்கள் நகங்களும்





உடலில் காணப்படும் நகங்கள் தேவையற்றது என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் அது தவறு. நகங்களில் அடிக்கடி அழுக்குகள் நுழைந்து நகங்கங்களின் அழகை கெடுக்கிறது என்று வண்ணம் தீட்டுகின்றனர். மேலும் சிலரின் நகங்கள் நன்றாக பொலிவோடு இருக்கும். திடீரென்று நகங்களின் பழைய அழகு மாறி, நிறம் மாறி காணப்படும். இவ்வாறு ஏற்பட்டால் உடலில் ஏதோ பிரச்சினை என்று அர்த்தம். ஏனெனில் நாம் இந்த நகங்களை வைத்து உடலில் ஏற்படும் நோய்களை தெரிந்து கொள்ள முடியும்.

நகத்தின் அமைப்பு, நிறம் ஆகியவற்றை வைத்து மருத்துவர்கள் உடலில் உள்ள பிரச்சினைகளை எளிதில் கண்டறிவார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல உடலின் நலம நகத்தில் தெரிந்துவிடும்.

பொதுவாக நகங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

என்னென்ன நிறத்தில் இருந்தால் என்னென்ன பிரச்சினை என்பதை இப்போது பார்ப்போம்.

நகங்கள் வெள்ளை நிறத்தில் இருந்தால் கல்லீரல் பாதிக்கப்பட்டிருக்கலாம். நகங்களின் வளர்ச்சி குறைந்து பாதி சிவப்பாக இருநதால் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டிருக்கலாம். நகங்கள் மஞ்சள் நிறத்தில் இருந்தால் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். இதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அழுத்தமான இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

நகங்கள் வெளுத்து குழியாக இருந்தால் இரத்த சோகை ஏற்பட்டு இரும்புச் சத்து குறைவாக இருக்கும். மேலும் நகங்கள் கிளிமூக்கு போல வளைந்து இருந்தால் நாள்பட்ட நுரையீரல், இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். நகங்கள் நீல நிறத்தில் இருந்தால் இதயத்தில் ஓட்டை ஏற்பட்டு நல்ல இரத்தமும் கெட்ட இரத்தமும் ஒன்றாக கலந்திருக்கிறது என்று அர்த்தம்.

மேலும் இரத்தத்தில் போதிய அளவு பிராணவாயு இல்லாவிட்டாலும் ஆர்சனிக் போன்ற நச்சுக்களால் பாதிக்கப்பட்டிருந்தாலும் நகங்கள் நீலநிறத்தில் காணப்படும். அவர்கள் அதிக அமிலத் தன்மையுள்ள சோப்பு மற்றும் புளிக்கரைசல் போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது. உடலில் சர்க்கரையின் அளவு அதிகமாகவும், புரதம் மற்றும் துத்தநாகச்சத்து குறைவாகவும் இருந்தால் நகத்தில் வெண்திட்டுக்கள் காணப்படும். ஆகவே அவர்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை குறைத்துக் கொள்ள வேண்டும்.

சின்ன சின்னக் குழிகள் நகத்தில் உண்டாகி அவற்றில் வெடிப்பு ஏற்பட்டு செதில் செதிலாக உதிர்ந்தால், அது சொரியாசிஸ் என்ற தோல் வியாதியின் அறிகுறியாகும். நகத்தில் மஞ்சள் கோடுகள் இருந்தால், அதிகமாக புகைபிடிப்பதனால் நிக்கோடின் கறை படிந்து இருக்கலாம் அல்லது நகங்களுக்கு நெயில் பொலிஷ் தீட்டுவதாலும் ஏற்பட்டு இருக்கலாம்.




எம். ரிதுர்ஷா

இல: 153/8 மோதர வீதி, கொழும்பு 15

# கண் விழித்ததும் சோம்பல் தலை காட்டுகிறதா?

காலையில் படுக்கையில் இருந்து எழுவதற்கே சிலருக்கு மனம் வருவதில்லை. கண் விழிக்கவும் மறுக்கும். காரணம் சோம்பல். இதனை முறியடித்து நாள் முழுக்க பெண்கள் சுறுசுறுப்பாக இயங்க இதோ சில எளிய பயிற்சி, ஆலோசனை:

பொழுது விடிவதற்கு முன்பாகவே படுக்கையில் இருந்து விழிக்க வேண்டும். தூக்கத்தில் இருந்து உடனே விழிப்பது என்பது மிகவும் சோம்பல் ஆகத்தான் இருக்கும். கண்கள் திறக்க மறுக்கும். அந்த சோம்பல் எண்ணத்தை மனதில் ஒட்டவிடாமல் இருக்க நீங்கள் காலையில் 30 நிமிடம் உங்கள் அறையை மிகுந்த வெளிச்சமாக்குங்கள்.

இந்த வெளிச்சம் உங்கள் உடலை முதலில் சுறுசுறுப்பாக்கும். உங்கள் உடலை அடுத்த பணிக்கு தயார்படுத்தும். ஜன்னல் திரைச் சீலைகளை தாராளமாக விலக்கி வையுங்கள். இயற்கையின் வெளிச்சம் மெல்ல மெல்ல உங்கள் அறைக்குள் பரவும். உங்கள் மனமும் விழிகளும் விழிக்கத் தொடங்கும். படுக்கையில் உங்களை இருக்க விடாது. பிறகு சுறுசுறுப்பாகி விடுவீர்கள்.



கைகளை நீட்டி மடக்குங்கள்.

படுக்கையில் இருந்து எழுந்தவுடன் ஒரு இரண்டு மூன்று நிமிடங்கள் உங்கள் உடலை, தசைகளை இலகுவாக்கிக் கொள்ளுங்கள். அப்போது ரத்த ஓட்டம் சீராகி விடும். பிறகு பின்னும், முன்னுமாக வளையுங்கள். 12 முதல் 15 தடவை இப்படி செய்யுங்கள். சற்று இளைப்பாறுங்கள். பிறகு எழுந்து நில்லுங்கள். கைகளை மேலே உயர்த்துங்கள். எதிர் திசையில் கைகைள சுழற்றுங்கள். 8அல்லது10 முறை இவ்வாறு செய்யுங்கள்.

சோம்பல் பட்டென்று பறந்து விடும்.

- மங்களராணி

## சமைத்துப் பாருங்கள்

### மீன் புளிக்கறி (எம்புல் தியல்)

சிங்கள மக்களின் நளபாகங்களில் சுவை மிகுந்த இந்த மீன் உணவு 'எம்புல் தியால்' என அழைக்கப்படுகிறது. மீனை கொரக்கா புளியில் பக்குவப்படுத்தி சொதி இல்லாமல் கட்டியாக சமைப்பது இதன் விசேஷம். சிங்கள வீட்டு விருந்துகளில் கட்டாயமாக இது இடம் பெற்றிருக்கும். எம்புல் தியாலை சமைத்த பின்னர் பிரிட்ஜ் உதவி இல்லாமல் பல நாட்களுக்கு வைத்திருக்க முடியும் என்பது இதன் இன்னொரு விசேஷம். இந்த உணவினை சமைப்பதற்கு அலுமினியம், சில்வர் தவிர்ந்த கரண்டிகளை பயன்படுத்தல் வேண்டும். அத்துடன் ஈரம்படாமல் பயன்படுத்தினால் மட்டுமே பழுதடையாது பல நாட்களுக்கு பயன்படுத்த முடியும். இந்த ருசியான உணவை நீங்களும் செய்து பாருங்கள். சின்னசூறை, பெரிய சூறை (பலயா, கெலவல்லா) மீன் உகந்தது. வேறு சிறிய மீன்களிலும் செய்யலாம்.



#### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| மீன் | - 500 கிறாம் |
| வெங்காயம் | - ½(நறுக்கியது) |
| மிளகு | - 8 மேசைக்கரண்டி |
| கொரக்கா | - 5-6 துண்டுகள் |
| மிளகாய் தூள் | - 1 மே.கரண்டி |
| மசாலா தூள் | - 1 மே.கரண்டி |
| மஞ்சள் தூள் | - ¼ தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - 1 பிடி |
| வெள்ளைப்பூண்டு | - 3-4 பல் |
| உப்பு | - தே.அளவு |
| தண்ணீர் | - 3 - 4 கோப்பை |

(பாத்திரத்துக்கமைய மாறுபடும்)

#### செய்யும் முறை

(மண் சட்டியை பயன்படுத்துவது சிறந்தது)

மசாலா, மிளகாய் மற்றும் மஞ்சள் தூள் ஆகியவற்றை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும்.

வெட்டிக் கழுவிய மீன் துண்டுகளை ஒரு பாத்திரத்தில் இடவும். மேற்குறிப்பிட்ட அனைத்து பொருட்களையும் நன்றாக அரைத்துக்கொள்ளவும்.

கறிவேப்பிலையை சமைக்கும் சட்டியில் அடுக்கு போன்று பரப்பவும்.

அதன் மீது அரைத்த கலவையின் சிறிதளவைப் இடவும். அதற்கு மேலாக வெட்டிய மீன் துண்டுகளை உடையாமல் பரப்பி வைக்கவும். அதன் மேலாக மிகுதி கலவை, வறுத்த தூள் ஆகியவற்றை இட்டு நீரை ஊற்றவும்.

அளவான சூட்டில் சட்டியை வைத்து நீரை வற்ற வைக்கவும். அகப்பையால் கிண்ட வேண்டாம், அல்லது மீன் துண்டுகள் உடையாமல் கவனமாக கிண்டவும்.

சுவைக்கேற்ப உப்பைச் சேர்க்கவும்.

நீர் தன்மை முற்றாக நீங்கிய பின்னரே சிறந்த சுவை கிடைக்கும்.




# எச்சில் இலை



**சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி என்ற பெயர் கொண்ட ராஜாஜி, இராமாயணத்தையம் மகா பாரதத்தையும் எளிய தமிழில் தந்தவர். இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலும் தமிழக முதல்வருமாக பதவி வகித்த இந்த ராஜதந்திரி சிறுவர் கதைகளையும் எழுதி இருக்கிறார். 50 களில் அவர் எழுதிய சிறுவர் சிறுகதைகளில் ஒன்று உங்கள் பார்வைக்காக....**

அது ஒரு பரப்பரப்பான நகரவீதி. வீதி ஓரத்தில் ஒரு தெருநாய் சுருட்டிமடக்கி படுத்துக் கிடந்தது. வீதியில் ஏற்படும் எந்த சத்தங்களும், பரப்பரப்புக்களும் அதன் தூக்கத்தை குலைக்கவில்லை.

ஒரு பார வண்டி கடகடவென்று அதன் அருகே ஓடிச் சென்றது. நாய் அசரவில்லை. சிறிது நேரத்தில் ஒரு பெண் குய்யோ முறையோ என கதறிக் கொண்டு ஒரு வழியே ஓடி வந்தாள். பின்னால் அவள் கணவன் தடியுடன் விரட்டி வந்தான். எல்லோரும் இக்கலவரத்தை வேடிக்கையாக பார்க்க, நாய் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

பக்கத்தில்தான் ஒரு இரும்புக் கடை. லொறியில் வந்த இரும்பு பொருட்களை பெருத்த ஓசையுடன் இறக்கிக் கொண்டிருந்தார்கள். நாயோ நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

கொஞ்சம் நேரத்தில் நாய் படுத்திருந்த இடத்திற்கு அருகே லொறியும் பஸ்சும் மோதிக் கொண்டன. பெரிய விபத்து இல்லை. என்றாலும் ஓசை பெரிதாக இருந்தது.


நாய் கண்களைத் திறக்கவில்லை.

நாய் படுத்திருந்த இடத்தில் இருந்து இருபது மீற்றர் தூரத்தில் ஒரு சைவ ஹோட்டல் இருந்தது. ஹோட்டலுக்கு வெளியே வீதியில் ஒரு குப்பைத் தொட்டி. ஹோட்டலில் முதலாவதாக பகல் சாப்பாடு சாப்பிட்டவர் கைகழுவி பில் செலுத்தினர். மேசையை துப்பரவு செய்தவர் எச்சில் இலையை எடுத்து வந்து வெளியே இருந்த குப்பையைத் தொட்டியில் வீசிவிட்டு உள்ளே சென்றார்.

இலை, தொப்பென தொட்டிக்கு வெளியே விழுந்தது.

சட்டென கண்விழித்த நாய் எச்சில் இலையை நோக்கி ஓடியது.

## சொல் விளையாட்டு 24




### இடமிருந்து வலம்


1. சண்டையின் முடிவில் இது வரும் (5)
5. ராகங்களில் ஒன்று (4)
7. எனது (2)
8. மனைவியின் ஆண்பால் (4)
10. தப்புக்கு எதிர்ப்பதம் (2)
11. இது இருந்தால் எதையும் வாங்கலாம் (3)
12. இது விலகினால்தான் நாடகம் ஆரம்பமாகும் (2)

### மேலிருந்து கீழ்

1. இசை (5)
2. வீரர்களில் சிறந்தவன் (4)
3. வைத்தியசாலையில் நோயாளர்களை கவனிப்பவர் (2)
4. மனதுக்கு பிடித்தவன் (4)
8. மடியில் இது இல்லை என்றால் வழியில் பயம் வேண்டாம்.
10. சூழ்ச்சி

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 23ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

## எத்தனைக் கால்கள்?




**இந்தப் படத்தில் எத்தனைக் கால்கள் உள்ளன என்று கவனமாகப் பார்த்து சொல்லுங்கள் பார்ப்போம்.**

## சிறுவர் சித்திரம்



மொஹமட் இமாத் இருபான்
4-B, K.M.C.C, களுத்துறை

## ஓவியப் பயிற்சி



## ஸ்டெதஸ்கோப்



இதயத் துடிப்புக்களை அறிய உதவும் கருவியே 'ஸ்டெஸ்கோப்'. இன்றைய மருத்துவர்களுக்கு இது மிகவும் இன்றிய மையாதது. ரெனி தியோபைல் ஹயாசின்த்யேனக் என்ற பிரஞ்சு மருத்துவர் 1816ம் ஆண்டில் ஸ்டெதஸ்கோப் கருவியை முதன்முதலாக உருவாக்கினார். அது மரத்தினால் செய்யப்பட்டது.

அது ஓர் அடி நீளம் உள்ள துளை போடப்பட்ட உருளையே ஆகும். குழந்தைகள் ஒரு மரக்குச்சியின் ஒரு முனையில் குண்டுசியால் குத்தித் துளை போட்டனர். பின்னர் அவர்கள் ஒருபுறமாக இருந்து ஒலி எழுப்பினர். மறுமுனையில் காதை வைத்து அந்த ஒலியைக் கேட்டனர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரெஞ்சு மருத்துவருக்கு சிந்தனை ஓடியது. அந்த சிந்தனையின் விளைவாகவே அவர் ஸ்டெதஸ்கோப் கருவியை உருவாக்கினார்.

தியோபைல் தனது ஸ்டெதஸ்கோப்பை பயன்படுத்தி நோயாளிகளைச் சோதித்தார். அவர் தனது ஸ்டெதஸ்கோப் குழாயின் முனையை நோயாளியின் நெஞ்சில் வைத்து, அவருடைய இதயமும், நுரையீரல்களும் எழுப்பிக்கொண்டிருந்த சப்தங்களைக் கேட்டார். இப்படிப் பல நோயாளிகளைச் சோதனை செய்து, அவர்களின் உடலில் ஏற்பட்ட சப்தங்களை அறிந்தார்.

| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABAY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |
|---|---|

## Star Baby




## பூனை

சின்னச் சின்னப் பூனையே
செல்லக் குட்டிப் பூனையே
அறையை விட்டு வராதே
அடுத்தவர் கண்ணில் படாதே!

அந்தக் குவளையில் பாலுண்டு
இந்தக் கிண்ணத்தில் சோறுண்டு
வேண்டும் போது எடுத்துண்பாய்
வெளியே மட்டும் வராதே!

கட்டில் அடியே இடமுண்டு
புரண்டு படுக்கத் துணியுண்டு
உருட்டி ஆட பந்துண்டு
ஓடாமல் உலவ அறையுண்டு!

பள்ளிக்கு கிளம்பணும் தெரிகிறதா
மாலைதான் வருவேன் புரிகிறதா?
சொன்னது எதையும் மறக்காதே
தொல்லையில் சிக்கித் தவிக்காதே!



## வண்ணம் தீட்டுங்கள்



# ஜன்னலுக்கு வெளியே...



நட்பு என்பது
ரோட்டில் கிடக்கிற 1000 ரூபா நோட் மாதிரி...
தொலைச்சவன் பீல் பண்ணுவான்
கிடைச்சவன் என்ஜோய் பண்ணுவான்

- ஜி.கிரி, மாங்காடு

## SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய இயக்குநர்

A. பிரபுதேவா
B. அமீர்
C. ரவிக்குமார்
D. சேரன்

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்



பாசத்துக்கு உயிர்
கொடுப்பது
சுலபம்...!
but உயிர்
கொடுக்கும்
அளவிற்கு பாசம்
கிடைப்பதுதான் கஷ்டம்

- அஞ்சனா, கொழும்பு-10




உன் முகம் பார்க்கும் முன்,
உன் குரல் கேட்கும் முன்
நீ கருவில்
இருக்கும் போதே, உன்னை
காதலித்த முதல் பெண்...
உன் அன்னை மட்டுமே...
சோ லவ் யுவர் மதர்

- ஏ. டெலிங்குமார், லிந்துல



என்னதான்
தும்புத்தடி கூட்டிப்
பெருக்கினாலும்
அதனால் கணக்கு
வாத்தியாராக
முடியாது.

- டி.ஜி. அர்ச்சன்,
கல்முனைக்குடி



ஹாய் பிரண்ட்ஸ்,
கவிதை என்பது யோசிப்பது,
காதல் என்பது நேசிப்பது,
பிரண்ட்ஷிப் என்பது சுவாசிப்பது,
யோசிக்காமல், நேசிக்காமல்
இருக்கலாம் but சுவாசிக்காமல்
இருக்க முடியாது...
So... தேங்கஸ் for யுவர் பிரண்ஷிப்

- எஸ்.எச்.பாத்திமா வசீரா, பஸ்சர



பஸ்ஸில் ஒரு கணவனும் மனைவியும் பிரயாணம் போறாங்க...
மனைவி: என்னங்க எவனோ பின்னாடி இருந்து என் காலில் உதைக்கிறாங்க...
கணவன்: பின்னாடி திரும்பி உன் முகத்தை கொஞ்சம் காட்டு, உதைக்கிறவன் நெஞ்சு வெடிச்சி சாகட்டும்.

- எம்.எம். பசீல், பொலன்னறுவை.



### உங்களுக்கு ஒரு நியூஸ்

விஜயின் புதிய படம்: கிரிக்கெட்
கிளைமக்ஸ் காட்சி: விஜய் பெட்டிங். பத்து ரன் வேணும் but ஒரு பந்துதான் இருக்கு, எல்லார் முகத்திலயும் கவலை... but நம்ம தளபதி கூலா நிக்கிறாரு... ஒரு போல் 10 ரன்னுன்னு சொல்லிக்கிட்டே ஒரே அடி. என்ன நடந்தது? விஜய் ஆட்டம் அரோஹராவா? அடிச்ச அடியில் போல் இரண்டாக கிழிஞ்சு போய் ஒன்று போர்ராகவும் மற்றது சிக்ஸராகவும் போகுது... பிளிம் சூப்பர் ஹிட்

- ஹம்சு, மானிப்பாய்

கிழக்கே உதிக்கிற
சூரியன் மேற்கே
உதித்தால் எப்படி
இருக்கும்?
அப்பவும் வியர்த்து
கொட்டும்...

- இஸாம்.






கழுதைக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனை கழுதை என்று கூப்பிடலாம். ஆனா கழுதையை மனிதன் என்று கூப்பிட முடியாது. அதாவது உங்களைத்தான்!

- பார்த்தீபன், ஹட்டன்

இதயம் வலிக்கும்போது
கண்களில் கண்ணீர்
வரும். அது காதல்
கண்களில் கண்ணீர்
வரும்போது இதயம்
வலிக்கும் அது நட்பு

- ஆர். கவிதா, வத்தளை



இனியவளே...
பலரை நினைக்கும் வயதில் உன்னை
மட்டும் நினைக்க வைத்த
இனியவளே மனமிருந்தால்
வந்துவிடு என்னோடு மணவறைக்கு
இல்லையேல் வந்துவிடு என்
கல்லறைக்கு...

- ஆர். வேணுகா, வள்ளிபுரம்





காக்கா
என்னதான் கறுப்பா
இருந்தாலும் அது
போடுற முட்டை
வெள்ளைதான். முட்ட
என்னதான் வெள்ளையா
இருந்தாலும் அதுக்குள்ள இருக்கிற
காக்கா கறுப்புதான்.
ஹா... ஹா...

- ஆர். மொரீன்,
கேகாலை



A/L பெயில் ஆனா 'வேட்டைக்காரன்' அனுஷ்கா மாதிரி பிகர் மாட்டும், ஆனா O/L பெயில் ஆனா 'படிக்காதவன்' தமன்னா மாதிரி ஒரு பிகர் செட் ஆகும். கெம்பஸ் பெயில் ஆனா 1000 சமீரா ரெட்டி மாதிரி ஒரு பொண்ணு செட் ஆகும். நல்லா படிச்சா காதல் கொண்டேன் தனுஷ் நிலைமைதான்.



ஒரு ஹீரோ, ஹீரோயினை லவ் பன்றான். ஆனால் ஹீரோயின் வில்லனை லவ் பன்னுறான். வில்லனோ ஹீரோவோட தங்கச்சியை லவ் பன்றான். ஆனால் ஹீரோவோட தங்கச்சி நாயகியின் அண்ணனை லவ் பண்ணுரா. அந்த நாயகியின் அண்ணன் வில்லனோட தங்கச்சி மேல் பைத்தியமா இருக்கான். வில்லனோட சிஸ்டர் அவனைக் கண்டுக்காம ஹீரோவோட அண்ணனை லவ் பண்ணுறா. இப்போ பாரு யாரை யாரு லவ் பன்றான்னு சொல்லுங்க? சும்மா தானே இருக்கீங்க ட்ரை பண்ணுங்க...

- ஏ.எச் பர்வீன்,
மதுரங்குளி



முன்பள்ளி பையனின் காதல் கவிதை
அவள் பாதம் பட்ட இடமெல்லாம்
முத்தம் இட்டேன் ஆனால் அவள் என்
அம்மாவிடம் சொன்னால் ஆண்டி
உங்க பையன் மண்ணு திங்குறாரு

- டி.யுனித்தா, நெடுங்கேணி



நான் உங்க மேல் வச்சிருக்கும் பாசம்....
வெங்காயம் மாதிரி. அதை நீங்க கட்
பண்ண நினைச்சா கண்ணீர்தான்
உங்களுக்கு வரும். எனக்கு உயிரே
போய்விடும். ஓ.கே?

- டி.மனோஹரன், அலியாவத்த,
மொனராகலை





எட்டு செகண்டில் 1140 நேம் சொல்ல முடியுமா?
நான் சொல்லுவேன்.
கண் 1000
100 ஜகான்
10 டுல்கார்
9யன் தாரா
7 மலை
6 முகம்
5 ஜலி
3 ஷா
1140, எப்படி?

காதலர் தினம்
இருப்பதாலதானோ
என்னவோ
பெப்ரவரி
மாதத்திற்கு கூட
ஆயுள் குறைவு

- நந்தினி,
கெக்கிராவை





இன்றைக்கு வைக்கிற மீன்
நாளைக்கு கருவாடு ஆகும்.
ஆனா இன்றைக்கு வைக்கிற
மீன் குழம்பு நாளைக்கு
கருவாட்டு குழம்பு ஆகுமா?

- கே. லக்ஷி, மாதகல்



ஜி.கியூசி இ.ச பீடி எப். ஜி... என்ன முழிக்கிறீங்க? ஒன்றும் புரியலையா? கொய்யால... வன் ஹவரா பார்க்கிற எனக்கே ஒன்றும் புரியலையே அப்புறம் எப்படி உங்களுக்குப் புரியும்.

- நந்தனி கெக்கிராவ

பிரியா இருக்கீங்களா? கோல்
பண்ணவா?
உங்ககிட்ட ஒன்று சொல்லணும்,
கொஞ்சம் பேசுறீங்களா?
கொஞ்சம் பணப் பிரச்சினை...
தாஜ்மகாலை விற்கப்போறேன்,
வாங்கிறீங்களா?

- சத்யா, டிக்கோயா





ஒரு யானையும் எறும்பும் தெருவில் நடந்து போய்க் கொண்டு இருந்தன. அப்ப ஒரு லொறி வந்து யானை மீது மோதியது. யானை சீரியஸ் கண்டிஷனில் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனது. இரண்டு மணி நேரத்திற்கு பிறகு கண் விழித்தது யானை. அது வரை அழுது கொண்டிருந்த எறும்பு யானையின் காதில் ஏதோ சொன்னது. அது என்ன தெரியுமா? ''நான்தான் உனக்கு ரத்தம் கொடுத்தன்''

- யு.யிந்துஷா- மீசாலை





ஷாலினி அஜித்

உன்னைப் பற்றி ஒருத்தன் தப்பா பேசினான். அவனை ஓங்கி அடிச்சேன். இப்பகூட அவனைப் பார்க்கும்போதெல்லாம் அடிப்பேன். அவன் சொன்னதை கேட்டால் உனக்கும் கோவம் வரும்... அவன் என்ன சொன்னான் தெரியுமா? நீ டெய்லி குளிப்பியாம். அழகா வேற இருப்பியாம். இப்போ உனக்கு கோவம் வருமே... விடு விடு அவனை நான் பார்த்துக்கிறேன்.



## மலேசிய இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2011

17

# இஸ்லாமிய இலக்கியம் படைத்த பெண் படைப்பாளர்கள்

இராசையா மகேஸ்வரன்
(சிரேஷ்ட துணை நூலகர்,
பேராதனை பல்கலைக்கழகம்)



தமிழ் வளர்ச்சியில் முஸ்லீம் பெண்கள் என்ற ஆய்வினை பேராசிரியர் நசீமா பானு சமர்ப்பித்தார்.இவர் பேராசிரியர் மு. சாய்பு மரைக்காரின் துணைவியார். புதுவை மாநில காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி மேனாள் முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர் சாய்பு மரைக்காரும் இதே பல்கலைக்கழகத்திலேயே தமிழ்த்துறை தலைவராக உள்ளார். குடும்ப சமேதரராக இஸ்லாமிய தமிழ் இலக்கித்திற்கு பணி செய்கின்றனர். இவர்களுடைய மகளை மணம் முடித்தவரே முனைவர் அகமது மரைக்கார். இவரும் புகழ்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வாளர். இவர்களே காயல்பட்டின மாநாட்டினை நடத்திய இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகத்தின் முதுகெலும்புகள்.

நசிமாபானு முஸ்லிம் பெண்கள் பற்றிய ஆய்வில், பெண் என்பவள் மகளாகவும், மனைவியாகவும், மருமகளாகவும், தாயாகவும் தன் முழுப்பலன்களையும் பயன்படுத்தி, மானிட வாழ்வின் இனிமைகளைச் சரிவர உயர்த்திக் காட்டுபவளாக திகழ்கின்றாள் என்றொரு இலக்கணத்தைத் தந்தார். அன்பின், தியாகத்தின் உருவாய்ப் பெருமை கொள்கிறாள். தன்னை உருக்கி ஒளியூட்டும் மெழுகுவர்த்தியாய், தன்னை அழித்து மணம் பரப்பும் ஊதுபத்தியாய், ஏணியாய்த், தோணியாய்ச் செயல்படுபவள் பெண்.

இஸ்லாத்தின் வழியில் பெருமை பெற்றது பெண்ணினம். பெண்கள் மனித இனதின் அழகிய நல்ல பகுதி எனக் கூறிப் பெண்களைக் கண்ணியப்படுத்தியது இஸ்லாம். திருமறையாகிய திருக்குர் ஆனும், திருநபியும் பெண்களுக்கு உரிமைகள் பலவற்றை வழங்கிக் கண்ணியப்படுத்தியுள்ளார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்க-ளின் தோழர்களில் அறிஞர் பெருமக்களாக ஆண்கள் விளங்கியது போலவே பெண்களும் இருந்திருக்கின்றனர்.

"ஆடவரும் பெண்டிரும் ஒரே மூலத்தில் இருந்தே உதித்தவர்கள். ஆகையால் பெண்களுக்கு ஆன்ம ஞானமும் அறிவும் உண்டு" என்கிறது திருமறை.

''ஆண்கள் போலவே பெண்களும் கல்வி பயிலத் தகுதியுடைவர்கள்'' எனக் கூறுகிறது திருக்குர்ஆன்.

அன்றுமுதல் இன்றுவரை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய கல்வியுரிமையைப் பயன்படுத்தி இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குத் தம்பங்களிப்பைச் செய்துள்ள இஸ்லாமிய பெண்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரை என்கிறார் நசீமாபானு.

''குர்ஆன் ஹதீசுகளைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தவர்கள் அன்னை ஆயிஷாவைக் காட்டிலும் வேறு யாரையும் நான் கண்டதில்லை'' என்று அபூஸல்மா என்ற ஸஹாபி போன்றுகின்றனர்.

உம்முவரஷா என்ற அம்மையார் திருக்குர்ஆன் ஓதுவதில் திறமை படைத்திருந்ததைக் கண்ட நாயகம் (ஸல்) அவர்கள். அந்த அம்மையாரைப் பெண்களுக்கு இமாமாக நியமித்தார்கள். அஸ்மா பின்ந்த் அஸீஸ் என்ற பெண்மணி பண்பட்ட பேச்சாளராக விளங்கியுள்ளார். லைலா, உமைமா, உம்மு ஸுலைமா ஆகியோர் வைத்திய கலைவல்லுனராகவும், ராபித்துல் அதவியா, மைமுனா போன்றோர் சிறந்த ஆன்மீக ஞானிகளாகவும் திகழ்ந்துள்ளனர். இன்றும் பொதுப்பணி புரிந்து பூவையரையும். கையெழுத்துவர்காத்திபாக்களையும் பாட்டுமொழி பாவையரையும் இஸ்லாம் வரலாறு குறிப்பிடுகிறது.

இஸ்லாமிய கலைகளான கிராஅத் ஓதுதல், தப்ஸீர் (விரிவுரை), ஹதீது (நாயகமொழி) பிக்ஹு (இஸ்லாமிய மார்க்கச்சட்டம்) பராயிஸ் (பாகப்பிரிவினைச் சட்டம்) இவற்றில் பெண் ஸஹாபிகள் நல்ல அறிவுக்களஞ்சியமாகத் திகழ்ந்தனர். இஸ்லாமிய பெண்கள் இந்திய வரலாற்றில் பெண்களின் முன்னேற்றத்தின் முன்னோடிகளாக விளங்கியமைக்கு வரலாற்றச் சான்றுகள் உள்ளன. ஔரங்கசீபின் அன்புமகள் கவிக்குயில் ஜெய்புனிஸா, செங்கோலாட்சி நடத்திய ரஸியா சுல்தான், போர் வாளேந்திய சாந்த பீவி எனப் பல பெண்களைக் கூறலாம்.

இஸ்லாத்தில் 'அறிஞர்கள், திருத்தூதரின் நேர்வாசிகள்' என்று புகழப்படுகின்றனர். இப்படியொரு நெடிய வரலாறு இருந்தும் கல்வி கற்ற இஸ்லாமியப் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இதனால் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு குறைந்துள்ளதை நாம் உணரவேண்டும் என்று நசீமாபானு குறிப்பிட்டார். ஆண்கள் போல் பெண்களும் துறவு வாழ்க்கையில் சிறப்புப் பெற்றுள்ளனர் என்றும் இஸ்லாத்தின் சூ.:பிகள் பக்தித்தமிழ் என்ற தளத்தை என்றும் போற்றிப் பாதுகாத்துள்ளனர் என்றும் நசிமா-பானு குறிப்பிடுகிறார்.

ஞானப்பெண்கள் எனப் போற்றப்படும் முத்தமிழ் கவிஞர்-களைப் போலவே கீழக்கரை ஆசியாம்மாள், இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மாள், தென்காசி றசூல் பீவி ஆகிய மூவரும் தமிழகத்துச் சூ.:பிகளாகப் போற்றப்படுகிறனர் என்கிறார்.

இஸ்லாமிய ஞானப் பெண்மணிகளாக உம்முஹராம், ராபியா பிந்த், இஸ்மாயில் ராபியத்துர்பசரிய்யா, ஆதுல் ஆதவிய்யா, ஹாவானா, ந.:பிஸா ஷவந்தா, ஜைனப் ஹைநாரபேகம், உம்மு அப்துல்லாஹ் ஆயிஷா லைலா அல்கைசியா, உம்முதல்தா, கதிஜா (முஹய்தீன் அப்துல் காதிர் ஜிலானியமாமி) உம்மு யஹ்யா, பக்ரிய்யா, .:பிள்ளா பிஷ்ர்ஹாபியின் சகோதரி முன்கா, அமனார் மலிய்யாஷ், ஹப்ஸாபிந்த் இத்ரீஸ் ஹகீமா, ஷ.:ரானா, .:பாதிமாஸாம், ரபியத்து அதவிய்யா, ரைஹானத்துல் ஹபஷ்ஹியா, நபீசத்துல் மிஸ்ரிய்யா அமினத்துல் ரம்ஸிய்யா எனப் பலர் உள்ளனர் என்று பல பெண்களின் பெயர்களை ஆய்வாளர் சுட்டிக்காட்டினார்.

இராமநாதபுரம் கீழக்கரையை சார்ந்த சூ.:பியா செய்யது ஆசியா உம்மாள் காலத்தால் முந்திய பெண்பால் சூ.:பிய புலவராக திகழ்ந்துள்ளார். ஆசியா உம்மாவின் மூதாதையர் எட்டையபுர மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். மன்னர் அளித்த அன்புப் பரிசிலான தங்கப்பெட்டகம் அவர்களது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆசியாம்மாள் கீழக்கரை குதூபுஸ்ஸமான் வகவ்துல் அஸான் கல்வத்து நாயகத்தின் முதற்சீடராக இருந்தவர். இளமையிலேயே துதிப்பாடல்களையும், முனாகத்துகளையும் பாடுகிற வல்லமை பெற்றிருந்தார். அவர் பாடியுள்ள பாவகைகளில் கண்ண பைத்து முஜைத்து. விருத்தம், இன்னிசை, ஆனந்தகளிப்பு, துதி, வெண்பா, கும்மி, பதிகம், மாலை என்பன அடங்கும்.

அடைகலம், பிரார்த்தனை, இஸ்தி.:பார், மழை, தாலாட்டு, ஹெய்கு அபூபக்கர் (றலி), கல்வத்து நாயகம் (றலி), அஜ்மீர் மொய்னுதீன், ஹசன் ஹுசைன், பல்லாக் (றலி) இல்யாஸ், முஹைய்யதீன் ஆண்டகை, ஹாஹுல் ஹமீது ஆண்டகை போன்றோரை அழைத்து பாடியுள்ளார். இவற்றைத் திரட்டி 'மெஞ்ஞான தீபரத்தினம்' என்ற நூலாகத் தந்துள்ளனர். இது அரபுத் தமிழில் அமைந்துள்ளது. இவற்றில் பதினான்கு பாடலைத் தொகுத்து 'சூபிஞானி செய்யது ஆசியா உம்மாவின் மெஞ்ஞான பாடல்கள்' என்ற தலைப்பில் கீழக்கரை இதிரீஸ் மரைக்கார் தமிழில் பதித்துள்ளார்.

இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மா என்பவர் றுக்மான் ஹகீம் மகள் கும்மிபாடல்கள் தந்துள்ளார். இவரது 'மெஞ்ஞானமாலை' என்ற நூல் மெஞ்ஞனக் குறவஞ்சி, மெஞ்ஞான ஊஞ்சல், மெஞ்ஞானக்கும்மி, மெஞ்ஞானகுறம் ஆகிய பாடல்களைத் தொகுத்து நூலாக அமைந்துள்ளார். இது சிங்கன் சிங்கி உரையாடல் பாணியில் அமைந்துள்ளது. மெஞ்ஞான ஊஞ்சல் 20 பாடல்களையும், மெஞ்ஞானக்கும்மி 16 பாடல்களையும் கொண்டது. இவர் திருபரங்குன்றம் மலைமீது அடங்கியுளள சிக்கந்தர் (ஒலி) அவர்களின் பக்தரான முஹம்மது மீரான் மஸ்தான் சாஹிப்பின் சகோதரியாவர்.

தென்காசி றசூல்பீவி ஒரு தவஞானி. சூ.:பிக் கவிஞர். தந்தை நயினார்முகம்மது. குரு ஷைகு அப்துல்காதர் ஷாஷன்ஷா. கணவர் ஞான அமிர்த போதனை பாடிய பரிமளத்தார் என்னும் முஷம்மது காசிம் சாஹிபு. பரிமளத்தார் பாடலின் பிற்பகுதியில் 'ஞானமிர்தம் சாகரம்' என்னும் பகுதி இடம்பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் தென்காசி றசூல் பீவி. இவரே றகுமான் கண்ணி, பரமானந்தக் கண்ணி ஆகிய பாடல்களை பாடியுள்ளார்.

சித்தி ஜுனைதா பேகம் நாகூரில் 1917ல் பிறந்தார். 1938ல் 'காதலா கடமையா' என்ற பெயரில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர். இவர் 'செண்பகவல்லிதேவி' (தென்னாடு போந்த அப்பாஸி குலத் தோன்றல்) 'கலிமா அல்லது கற்பின் மான்பு', 'வனஜா- கணவரின் கொடுமை', 'பெண் உள்ளம்,' 'தந்திர உதயம்', 'திருநாகூர் அண்ணலின் திவ்விய மாண்பு', 'மூவாமூவர்', 'இஸ்லாமும் பெண்களும்', போன்ற நூல்களை படைத்துள்ளார்.

மதுரையின் முதல் பெண் பட்டதாரி என்ற பெருமையுடன் பள்ளப்பட்டி உஸ்வத்துல் ஹசனா அரபுப் பள்ளி முதல்வரான ஓய்வு பெற்ற கருளின்னி அப்துல்லா, பேச்சாளர், எழுத்தாளர், 'ஆய்வாளர் வியக்கும் அழகிய பண்பாளர்', 'மனிதனுக்கு மனிதன்', 'புரிந்து தொழுவோம் புரிந்துணர்வு பெறுவோம்' என்னும் நூல்களையும் பல கட்டுரைகளையும் படைத்துள்ளார்

ஜெய்புன்னிஸா கோவையை பிறப்பிடமாக கொண்டவர். 15 குறும்புதினங்கள், 600க்கும் மேற்பட்ட சிறுகதைகள் படைத்த எழுத்தாளர். இவர் படைப்புகள் 'தணல்', 'புரிய மறுக்கும் முகங்கள்', 'ஆற்றோர நாணல்கள்', 'மனசுக்குள் வரலாமா?', 'என் உயிர்த்துளி நீதானே', போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். 'நைல் நதிக் கரையில்' என்ற முதல் பயண நூலை வெளியிட்ட முஸ்லிம் பெண்மணி இவர்.

'மல்லிகை மொட்டுகள்', 'மகிழம்பூக்கள்', 'ஒற்றைப்பறவை', 'கண்மணியே கண்ணுறங்கு', கேஹாவின் சிரிப்புக் கதைகள்', 'அர்த்தமுள்ள அரபிப் பழமொழிகள்', 'நெஞ்சங்களின் சங்கமம்', நல்ல வாழ்க்கைக்கு வல்லவன் காட்டிய வழி', போன்ற சிறுகதை நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

ஜரினாஜமால், 'நர்கிஸ்' இதழ் ஆசிரியர் அனீஸ் பாத்திமா, பேராசிரியர் நசீமா அஹமட், பேராசிரியர் பர்வீன் சுல்தானா, பர்வீன் நஜ்மா மொய்தீன், அம்மாஜான், ஆயிஷா பேகம், கதீஜா பேகம், பேராசிரியர் சவ்தா உம்மா, பாத்திமா முஸப்பர், பாத்திமா யாஸ்மின், ரைஹானா பேகம், ஜுவைனா பைஜல் ஜெஸிலா பானு, ஜெஸோபானு, ஆமினா பர்வின், ஹாஜியா சான்பேகம், ஜெய்புன்னிஸா, சுமையா தாவுது, சித்தி சாரா, ந.:பிஸா பீவி, பரீதாபானு, சம்ஹத், எம். ஆர், எம் பாத்திமா சாஜஹான் ஆகியோர் பற்றியும் இவ்வாய்வில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் பர்வீன் சுல்தானா பற்றி இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். இவர் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் தொகுதி-1, தொகுதி-2, இஸ்லாமிய மக்களின் வாழ்வியல் சடங்குகள், படைப்போர் இலக்கியம் காட்டும் பண்பாட்டுக் கூறுகள், படைப்போர் மூலமும் ஆய்வும், காசீம் படைப்போரும் படைவெட்டும், படைப்போர் இலக்கியமும் போர் நெறிமுறைகளும் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஹாஜினயா சான்பேகம், 'நல்ல மனது', என்ற நாடகம் நூல் படைத்தவர். ஜெய்புன்னிஸா 'சாந்திவயல்', 'சமாதானப்பயிர்', போன்ற இருபத்தேழு மரபு கவிதை நூல்களை படைத்தவர். சித்தி சாரா 'இஸ்லாத்தில் பெண்கள்', என்ற நூலை எழுதியவர். பரீதா பானு 'சுமைதாங்கி' என்ற புதுக்கவிதை நூலை படைத்தவர் என இவர்கள் பற்றி ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இதுபோலவே, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை எனத் தமிழர் வாழும் மண்ணில் உள்ள பெண் படைப்பாளிகளின் படைப்புகளையும் வாழ்க்கை வரலாறுகளையும் தொகுத்து நூலாக்கம் செய்வதற்கு ஆய்வாளர்கள் முன்வரவேண்டும் என்றும தமது ஆய்வில் இவர் வேண்டுகோளை முன்வைத்தார்.

இந்த ஆய்வாளர் பேராசிரியர் நசீமா தன்னைப் பற்றியும் இந்த ஆய்வில் குறிப்பிட்டிருந்தார். 'சங்க இலக்கியத்தில் மனையறம்' என்ற ஆய்வு நூலையும், 'இலக்கியத் தென்றல்', 'இவர்கள் இன்று சந்தித்தால்', 'இல்லறமும் பெண்களும்', 'கருத்தரங்குக் கட்டுரைகள்', போன்ற பதினான்கு நூல்களை வெளியிட்டுள்ளார். 'வெற்றிப்பதக்கம்', என்ற வரலாற்று நூலும், 'கண்மணிகளுக்கு காயிதேமில்லத' என்ற வரலாற்று நூலும் 'சாதனையாளர் சாயபு மரைக்கார்', என்ற தனது துணைவர் பற்றிய நூலையும் வெளியிட்டுள்ளார்.

**தொடர் அடுத்த இதழில் நிறைவு பெறும்**




ஹாய் சினிமானந்தா நான் கமல் ரசிகன். விஸ்வரூபம் எப்போ வரும் என்று சொல்ல முடியுமா?

- ஜே. தில்ஷன், கண்டி



விஸ்வரூபம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் தயாராகியுள்ளது. டிசம்பரில் கிறிஸ்மஸ் - புதுவருட வெளியீடாக வரக்கூடும். 'அலட்ரேரா 3 டி' என்ற நவீன ஒலி தொழில் நுட்பம் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உலகிலேயே இந்த தொழில் நுட்பம் பயன்டுத்தப்பட்ட இரண்டாவது படம் 'விஸ்வரூபம்'தான். விஸ்வரூபம் என்றால் பிரமாண்டம் என்று பொருள். கமலின் கனவுப்படம் மருதநாயகத்துக்கு விஸ்வரூபம் வித்திடுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

ஹன்ஷிகா மோத்வானி குண்டாவது போல் தெரிகிறதே?

- ஜி. வசந்தன், அனுராதபுரம்

ஹன்ஷிகாவுக்கு இப்போது 21 வயது. சின்னக் குஷ்பு என்று அன்பாக அழைக்கப்படுபவர். எனவே குஷ்பு போல் (இட்லி) இருப்பது சரிதானே! மொழுக் மொழுக் ஹன்ஷி பேபியின் கன்னத்தை கிள்ள நிறையப்பேர் காத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு அந்தந்த இடங்களில் மச்சம் இருக்கவேண்டும். அப்போதுதான் அந்த அதிர்ஷ்டம் கிட்டும்.

நடிகைகள் தன் நாயை அதிகம் நேசிக்கிறார்களே?

- ஆர்.ரமேஸ், ஹொரண

நடிகைகளின் தத்ரூப நடிப்பின் சிறப்பை நாய்கள் வெளியே சொல்வதில்லை. அத்துடன் நன்றியுடன் நடந்துகொள்ளும். குரைக்குமே தவிர உளறிக்கொட்டாது. இதனால்தான் நாய்கள் நடிகைகளின் BF (Best Friend) ஆக இருக்கின்றன.

தாண்டவம் எப்படி?

- கவிதா, ஹட்டன்


எதிர்பார்த்த மாதிரி தாண்டவம் ஆடவில்லை. விக்ரம் நெஞ்சில் ஏறி மதிக்கவும் இல்லை. கந்தசாமியோடு தொடரும் தோல்விப் படலத்துக்கு தாண்டவம் முற்றுப்புள்ளி வைக்கவும் இல்லை. விக்ரம் நிறைய யோசிக்க வேணடியிருக்கறது. இல்லையேல் காணமாற்போய் விடுவார்.



கமல் மகள் ஸ்ருதி இதுவரை காதல் வலையில் விழவில்லையே. ஏன்?

- கே.விஜிதா, மஸ்கெலியா

ஸ்ருதிஹசனைத்தானே சொல்கிறீர்கள்? காதல் என்ன காதல் சித்தார்த்துடன் குடும்பமே நடத்தினாராமே? ஊடகங்களில் கசிந்த செய்தி இது. இந்த விடயத்தில் அப்பாவின் பெருமையை ஸ்ருதி நிச்சயம் காப்பாற்றுவார் என எதிர்பார்க்கலாம்.



தீபாவளிக்கு துப்பாக்கி வெடிக்குமா?

- விஜய் ரசிகை ப்ரியா, கிளிநொச்சி

துப்பாக்கி சுடுமா? இல்லை சரவெடியாக வெடித்து ஓயுமா? டுமீலா, டமாரா என்பதுதான் கேள்வி. ரசிகர்களின் லைசென்ஸ் கிடைத்தால்தான் டுமீல். இல்லையென்றால் டமார்தான்.

மாற்றான் மற்றும் சாருலதா எப்படி?

- வி. அஜந்தா, கெக்கிராவை

மாற்றானைப் பற்றி சில நெகட்டிவ் விமர்சனங்கள் வந்துள்ளன. ஆனால் சாருலதாவை பற்றி நிறைய பொசிடிவ் செய்திகள்தான் வருகின்றன. சாருலதா ஒரு கொரிய படத்தின் தழுவல். மாற்றான் ஒரிஜினல் கதையாம்.

அஜித்தின் அடுத்த அவதாரம் என்ன?

- எஸ். சிவசுதன், பதுளை.

மங்காத்தாவில் கிடைத்த புகழ் பில்லா 2ல் கொஞ்சம் மங்கியது. எனவே அடுத்த படத்தில் அதை தக்க வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் அஜித்துக்கு உண்டு. முகவரி, தீனா, வரலாறு, சிட்டிசன், மங்கத்தா, பில்லா இதில் ஏதாவது ஒரு அவதாரத்தைத்தான் அஜித் மீண்டும் எடுக்கலாம். ஆனால் TARARAMPUM இந்திப்படத்தின் ரீமேக்கில் அஜித் ஒரு ரேஸிங் டிரைவராக வரப்போவதாக கேள்வி. அப்படி வந்தால் அது ஒரு புது அவதாரமாக இருக்கும். அவரும் ஒரு பந்தயக்காரர்தானே.



வீட்டு முகவரி


Ajith Kumar
No: 5, Kamarajar Salai, Opp. to Prasad Lab,
Saligramam, Chennai - 600 093,
Ph. 00914423767058
00914432929578

சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்சிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்.

சினிமானந்தா
பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி:
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501




## வண்ணம் தரும் வானவில்

மழைபெய்யும் ஒவ்வொரு தடவையும் வானவில் தோன்றுவதில்லை. அதுபோல் நீயும் மாதம் ஒருமுறை மலர்கிறாய், அறிவு வளர்ச்சிக்காக பக்கங்களை ஒதுக்கி புதுமை படைக்கிறாய். அத்தனை அம்சங்களும் சுவையாக உள்ளன. பெயருக்கு ஏற்றமாதிரி வண்ண மயமாகத்தான் இருக்கிறாய். இந்த இதழைப் படித்து பூரிப்படையாதவர் யாராக இருக்க முடியும்? நான் மிகவும் பூரிப்படைகிறேன்.

கவிமுற்றத்தை நான் விரும்பிப் படிக்கிறேன் தத்துவப் பித்தனும் உண்மைகளைத்தான் சொல்கிறார். உன் வாசகர்களான காயம்பு மோகன், த.ச.பிதா, ஆர். சியா ஆகிய சகோதர சகோதரிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

நீ மாதம் ஒரு தடவை (லேட்டாக) வந்தாலும் லேட்டஸ்டாகத்தான் வருகிறாய். நீ மென்மேலும் வளம்பெற இறைவனை பிரார்த்திக்கிறேன்.

- லோ. ருக்சாயின்,
கைதடி.

## சின்ன சிட்டு போல ஒரு வண்ணவானவில்!

வானவில்லே உன் வர்ணங்களில் நான் ஒரு வாசக வர்ணம். பத்திரிகைகளில் தலைப்பு மட்டுமே படிக்கும் எனக்கு தலைப்புடன் உள்ளடக்கத்தையும் படிக்க வைத்தாய். உன் விஞ்ஞான விளக்கங்களைப் பார்த்து நான் வியந்து போனேன். உன் சிறுகதை படித்தேன், ரசித்தேன். என் SMS பூக்கள் சிரிக்க வைக்கிறது. கவிமுற்ற கவிதை பாத்ததில் கவிக்கு அர்த்தமே தெரியாத என்னை கவி வடிக்க வைத்தது. சமைத்து பாருங்கள் பகுதி ருசிக்க வைக்கிறது. என்னை சமைக்கவும் வைத்தது. விலங்கு விந்தை உலகம் பார்த்தேன். என் செல்லப் பிராணிகளிடம் கருணை வைத்தேன்.

சினிமா செய்திகள் பரவசமூட்டுகின்றன.

பித்து பிடித்து அலையும் 'தத்துவ பித்தனை பார்த்து சிரிப்பு அதிகமானதால் கண்ணீர் வடிக்கிறேன். வண்ண வானவில் என் மனதை குதூகலப்படுத்துகிறது. வானவில்லே நீ வாழ வேண்டும். வாழ்த்துகிறேன். உன் புதுமை எனக்கு புதுமை. சின்னச் சிட்டுப்போல பத்திரிகைகளின் சிட்டுக்குருவி நீ.

- எம்.எஸ்.எப் சுக்னா,
காத்தான்குடி

## கண்டதில்லை இப்படி ஒன்றை!

இந்நாட்டின் பல பத்திரிகைகளையும் சஞ்சிகைகயையும் வாசித்தவன் நான். வானவில்லையும் நான் ஆரம்பத்தில் இருந்து வாசித்தவன் அல்ல. இடைநடுவில்தான் வானவில் வாசகனாகி தொடர்ச்சியாக வாசித்து வருகிறேன். இந்த சஞ்சிகை அனைவரையும் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது.

இந்த உழைப்புக்காக வானவில் ஆசிரியர் குழுவினருக்கு நன்றிகள்.

இந்த சஞ்சிகை மாதம் இருமுறை வெளிவரவேண்டும். கேள்வி-பதில், தொடர்கதை போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அனைத்து வாசகர்களும் இதைத்தான எதிர்பார்க்கிறார்கள். விரைவிலேயே இதை நிறைவேற்றவேண்டும்.

*சிறியோர் முதல் பெரியோர் வரை*
*தேவையறிந்து தந்துள்ளாய் – உன் படைப்புகளை*
*பார்ப்பவர் மயக்கும் பக்க வடிவமைப்பும்*
*படித்தவர் மகிழும் படைப்புகளும்...*
*என்றும் நாம் இருப்போம்*
*உங்களுடன் உறுதுணையாக*

- எஸ்.டி. விருஷன்,
சித்தங்கேணி

## உசெய்ன போல்ட்

இம்மாத (அக்டோபர்) வானவில்லைப் புரட்டியதும் பெரு மகிழ்ச்சிக்கு உள்ளானேன். என் ஓட்ட நாயகனின் வாழ்க்கை வரலாறு, 'உசெய்ன் போல்ட்: மின்னல் வேகத்தின் முகவரி' என்ற தலைப்பில் வெளிவந்திருக்கிறது. இந்த வரலாற்றில் போல்ட்டின் சிறுவயது மற்றும் குடும்பப் படங்கள் போன்ற பிரத்தியேகப் படங்களையும் நீங்கள் பிரசுரிக்க வேண்டும். என்னைப் போலவே பல விளையாட்டுப் பிரியர்களுக்கு இவரது வரலாறு பொக்கிஷமாக இருக்கும் என நம்புகிறேன். எஸ்.எம்.எஸ் ஜோக்ஸ், பேஸ்பக்கம், மிருகங்களைப் பற்றிய தொடர் என்பவற்றையும் நான் விரும்பிப் படிக்கிறேன்.

- லோகேஸ்,
கரவெட்டி கிழக்கு

## சிறுகதை மாதிரிதான் ஏனைய ஆக்கங்களும்

வானவில்லின் சிறுகதை என்ற பெயரில் ஒரு கதை வந்தாலும் சிறுகதையைப் போலவே அமைந்த ஏனைய கதைகளும் எனக்கு விருந்தாக அமைகின்றன. மன்றில் கேட்ட கதைகள், மனநல மருத்துவக் கதைகள், இந்த இதழில் வெளியான ஹலோ மைடியர் ரோங் நம்பர், குற்றச் சம்பவம் என்பனவும் சிறுகதைகள் மாதிரிதான் இருக்கின்றன. வானவில் வானலை இன்னும் சூடாக அமைய வேண்டும்.

- ப.பாஸ்கரன், லிந்துலை

## சிறுகதை நன்று ஆனால்...

இந்த இதழில் வெளியான பழிக்குப்பழி என்ற சிறுகதை எளிமையாக எழுதப்பட்டிருந்தது. செ.குணரத்தினத்தின் பாணி அது. கதை நன்றாக இருந்தாலும் பெண்ணிய பார்வையில் அந்த முடிவை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. மேலும் அர்த்தம் புரியாமலேயே மந்திரங்களையும் சடங்குகளையும் ஏன் மேற்கொள்கிறோம் என்ற கட்டுரை பல தகவல்களைத் தந்தன. ஆனால் கட்டுரையாளர் மந்திரங்களை சரி என்கிறாரா அல்லது தவறு என்கிறாரா என்பதை அழுத்தமாகச் சொல்லவில்லை.

- சாந்தி வரதன்
வத்தளை

## கைம் பெண்கள்:



# ஆண் பார்வை மாறாதா?

கணவனை இழந்த விதவைகளுக்கு சமூகத்தில் பல்வேறு வாழ்வியல் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சமுதாயத்தின் பழக்க வழக்கங்களும் அவற்றின் மரபுகளும் அவர்களுக்கு எதிராக அமைந்திருப்பதே இதற்கு அடிப்படையான காரணம். சங்க காலத்திலேயே இந்த நெருக்கடிகள் 'கைம்மை வழக்காறு' என்ற பெயரில் இருந்ததை சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

''கோரிக்கையற்று கிடக்கு தண்ணே வேரில் பழுத்த பலா" என்றார், பாரதி-தாசன். முக்கனிகளுள் ஒன்றான பலாப்பழம், தேடுவாரற்ற நிலையில் கிடப்பது போன்று, விதவை பெண்கள் மனவேதனையோடு, மன உளைச்சலில் இருப்பதை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

சமூகத்தில் கணவனை இழந்த பெண்களின் மறுமணம் மறுக்கப்படும்போது அவர்கள் உடலாலும், மனதாலும் ஒடுக்கப்படுகின்ற அவல நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். மற்றவர்களால் வெறுத்தும் ஒதுக்கப்படுகிறார்கள். விதவைக்குச் சமுதாயப் பழக்க வழக்கங்களால் வாழ்வியல் சிக்கல்கள் தோன்றுகின்றன. சமுதாய நிறுவனங்களினாலும் சமுதாய உறுப்பினர்களாலம் அவளது உள்ளுணர்வுகளினாலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

சமுதாயக் கட்டுப்பாடு, விதவையின் மன உணர்ச்சிகள், இளம் விதவைகளுக்கு தோன்றும் பாலியல் உணர்ச்சிகள், குடும்ப உறவுகள், ஆடவருடன் பழகுதல், பொருளாதாரம் ஆகியவை விதவை பெண்களுக்கு சிக்கல்களை தோற்றுவிக்கின்றன.

விதவை என்றால் அபசகுனமாக கருதுகின்றனர். இதனால் விதவைகள் சமுதாயத்தில் மனதால் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். விதவை தாலி, வளையல், நகைகள் அணியக்கூடாது. பொட்டு, பூ, மஞ்சள் ஆகியவை கூடாது. நல்ல காரியங்களில் கலந்து கொள்ளுதல் கூடாது. வண்ண ஆடைகளை அணியக் கூடாது எனக் கூறி சமுதாயம் அவர்களை சில இடங்களில் இன்னும் ஒதுக்கத்தான் செய்கிறது. சமீப காலங்களில் பெண்களிடைய மறுமண சிந்தனை அதிகம் உள்ளது. நல்ல வாழ்க்கைத் துணைவர்களை தேர்ந்தெடுத்து மீண்டும் வாழ்க்கை மகிழ்ச்சிக்குரியதாக அமைகிறது. பெரும்பாலும் பெற்றோர் சம்மதத்தோடு ஏற்படுத்திக் கொள்ளும் மறுமணங்களே முழு வெற்றியடைகின்றன. எனினும் பெண்கள் மறுமணத்திற்கு ஆண்களைத் தேர்ந்தெடுக்கும் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

## சிங்களம் மட்டும்...

(08ஆம் பக்கத் தொடர்)

அதற்கு முக்கிய காரணம், ஏகாதிபத்தியவாதிகளின் செல்வாக்கினால் இந்நாட்டின் உயர் அதிகாரிகளும் சில அரசியல்வாதிகளும் ஆங்கில மொழிக்கு இசைவாகி அதற்கு தேவையற்ற ஒரு முக்கியத்துவத்தினை வழங்கியமையாகும்.

ஆகவே சிங்கள மொழி அரச கரும மொழியாக முழுமையாக செயல்படுவதற்கு தமிழ் மொழி தடையாக இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அது நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒரு உண்மை.

1947ஆம் ஆண்டில் சீனாவிலும் இந்நிலையே காணப்பட்டது. சீன மொழி உபயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திபெத் மக்கள் பரந்த அடிப்படையில் கிளர்ச்சிகள் மேற்கொண்டதை நாம் அறிவோம். ஆயினும் அங்கு திபெத் இனத்தவரான சிறுபான்மை மக்களுக்கு மொழி, கலாசாரம், மற்றும் ஏனையவற்றின் பேரில் ஓரளவு உரிமைகளை வழங்கி அந்த அடிப்படையிலேயே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் எமது நாட்டில் விட சீனாவில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. திபெத் மக்கள் சீன மொழியை கற்கவும், சீன கலாசார பண்பாட்டை சிறிது சிறிதாக ஏற்று நடத்தவும் ஆரம்பித்திருக்கிறார்கள்"

மொழி சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஆற்றிய உரையை இன்றைய காலகட்டத்தில் நாம் சிந்தித்து பார்ப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் சிறுபான்மை மக்களுக்கு அரசகரும மொழி உரிமை உட்பட ஏராளமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றும் அவர்களுடைய ஒத்துழைப்பை பெற்று ஆட்சியை நடத்தவேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மத்துகமையிலேயே...

(10ஆம் பக்கத் தொடர்)

தனது மல்லிகையில் எனது கவிதைகளை அச்சிட்டு வெளியிட்டார். தனி ஒரு மனிதராக மல்லிகையை சைக்கிளில் வைத்து கட்டி வீடு வீடாக, தெருத்தெருவாக சென்று விற்பனை செய்வார். அப்படி ஒரு உழைப்பு, முயற்சி! அந்த பெரிய மனிதருக்கு நான் எந்த கைமாறும் செய்யவில்லை.

இலக்கியம், கவிதை, பற்றி நான் சிந்திக்கும்போதெல்லாம் எனக்கு அது ஒரு குற்ற உணர்வாக தெரிகிறது. மல்லிகைக்கு அடுத்ததாக எனது படைப்புக்களுக்கு முன்னுரிமை தந்த "அலை" ஜேசுராஜாவை என்னால் மறக்க முடியாது. ஜேசுராஜா இன்றைக்கு என்னைப் பற்றி எந்த நிலைப்பாட்டில் இருந்தாலும் அவர் எனக்கு எப்போதுமே நல்ல நண்பர்தான்.

அவ்வப்போது எனது படைப்புகளைப் பார்த்து பாராட்டி தட்டிக்கொடுத்தவர்களில் கவிஞர் சோலைக்கிளி, உள்ளிட்ட பலர் என் வெற்றிக்கு பின்னால் இருக்கிறார்கள், என்று நெஞ்சு நிறைய பேசுகிறார் ஜெயபாலன்.

நான் பிறந்த நெடுந்தீவு வரலாற்று சிறப்பு மிக்க இடம். இங்கேதான் எனது சந்ததியினரான குசுவன் கந்தன் உள்ளிட்டோர் போர்த்துக் கேயரை எதிர்த்துப் போராடினார்கள். இந்திய கடலோடியின் முதல் பிதா மகனாக கருதப்படும் குஞ்சிலி மரக்கார் என்ற மலையாளி, டச்சுக்காரர்களுக்கும், போர்த்துக்கேய ருக்கும் சிம்மசொப்பனமாக விளங்கினார். அவரை போர்த்துக் கேயர் கடற்கொள்ளையன் என்றே பெயரிட்டு அழைத்திருக்கிறார்கள். அவன் சங்கிலியனின் கடற்படைக்கு பாதுகாப்பாளனாக இருந்திருக்கிறான். அதனால் அவனுக்கு நெடுந்தீவிலும் தளம் இருந்திருக்கிறது. அந்த தளத்தை பிடிக்க நெடுந்தீவிற்கு போர்த்துக்கேயர் வந்ததாகவும், வந்த இடத்தில் குதிரைப் பண்ணை அமைக்க நெடுந்தீவில் உள்ள பருத்தித் தோட்டத்தை அழித்ததாகவும் கூறப்படுகிறது. அந்த அக்கிரமத்தை எதிர்த்து மக்கள் போராடி இருக்கிறார்கள். பிறகு மக்கள் பருத்தியை பூஞ்செடிபோல வீடுகளில் வளர்க்கவும் செய்திருக்கிறார்கள். அதை டச்சு அரசு தடை செய்ததாகவும் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. மக்கள் புரட்சிக்கு பெரிய பலமாக இருந்த குசுவன் கந்தனைப் பற்றிதான் எனது அடுத்த படைப்பு இருக்கபோகிறது. எனவே நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் குசுவன் கந்தனைப் பற்றி தெரிந்திருந்தால் என்னுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். நெடுந்தீவில் எங்கள் வீட்டுக்கு பின்னால் கந்தன் தரை என்று ஒரு இடமும் இருக்கிறது.

டச்சு, போர்த்துக்கேயரின் தடையை மீறி நெடுந்தீவு மக்கள் பருத்தியை ரகசியமாக பயிர் செய்தமைக்கு அவர்களது நெஞ்சுரம் தான் காரணம். பனியாமையின் சின்னமாக அவர்கள் பருத்தியைக் கருதினார்கள் என்று நெடுந்தீவு வரலாறு பற்றிப் பேசிய ஜெயபாலன், ஒரு வேண்டுகோளை முன்வைத்தார்.

இன்றைய நமது நெடுந்தீவு சந்ததியும் வீட்டுக்கொரு பருத்திச் செடியை தமது வரலாற்றுப் பெருமையை நினைவுபடுத்தும் வகையில் வளர்க்கவேண்டும். மேலும் நெடுந்தீவின் இயற்கை வளமான செங்கத்தாழையும் படிப்படியாக அழிந்து வருகிறது. அதையும் விட்டு விடாதீர்கள் என்கிறார் ஜெயபாலன்."

## பிரட்டுத் தப்பு...

(12ஆம் பக்கத் தொடர்)

அதுலயும் வேற டிவுசன்ல இருந்து தப்பு அடிக்கிறதுக்கு கூப்புட வந்தா பெருமாளு வராங்காட்டி ஒத்துக்கமாட்டானுங்க... பெருமாளு கையி தப்போட பேசும்டா... பெருமாளு, ஆளு கட்டயன். சப்பட்ட மூக்கு. பரட்ட தல. அடுப்புக்கரி நெறம். தப்படிக்க ஆரம்பிச்சிட்டா ஒங்க வூட்டு அடி எங்க வூட்டு அடியில்ல..."

''அப்ப யாரு வூட்டு அடி பெரிசு...!"

பையன் ஒருவனின் குறும்புக் கேள்வி.

''ம். ஒங்க ஆத்தா வூட்டு அடி. அவன் வாயில அசிங்கத்த அமுக்குங்கடா..."

பெரிசுக்கு கோபம் வரும். வந்த வேகத்திலேயே மாறியும் விடும்.

''பயலுங்களா! பெருமாளுக்குத் தப்புன்னா பைத்தியம். சொந்தக்காரங்க வீட்டு நல்லது கெட்டதுக்குப் போனா கூட ராத்தங்க மாட்டான். லீவு போட மாட்டான்.

சம்பள வாசல்ல கௌாக்கரு ஐயா 'டொம்... டொம் பெருமாளு'னு பேர் வாசிக்கிறப்ப அவன் மூஞ்சிய பார்க்கணுமே... அப்படியொரு பெரும. ஆனா அவனோட புள்ளைங்களுக்கு அப்பன் தப்படிக்கிறது புடிக்கல. வெக்கமாம். தப்புக்காரன் புள்ளைங்கனு பேசுறாங்கனு சொல்லி தப்ப புடுங்கி வீசிப்புட்டானுங்க. அப்ப பெருமாளுக்கு வந்த கோபத்த பாக்கணுமே... நம் பங்களா லயத்து கோடாங்கி பெரியசாமி அருளு வந்து ஆடுறமாதிரி ஆடிபுட்டான்.

கோவிச்சுக்கிட்டு பணிய லயத்துல இருந்த அக்கா வூட்டுக்குப் போயிட்டான். அவன சமரசம் பண்ணி வூட்டக்குக் கூட்டிக்கிட்டு வர ஒரு மாசம் போச்சி. தப்பு அடிப்பேன்கிற எக்ரீமெண்டு போட்டுக்கிட்டுத்தான் வந்தான். நானு அப்ப தலவரு. சமரசம் பண்ணி வச்சதே நானுதான். அடே! அப்ப அவன் ஏங்கிட்ட என்ன சொன்னான் தெரியுமா? ''தலவரு! எனக்கு ஒரு ஆச. தப்ப அடிச்சிக்கிட்டு இருக்கிறப்பயே செத்துடனும்!"

ம்! அப்டி வெறி நம்ம பட்டுக்கோட்ட ஒரு பாட்ல சொன்னாரு... செய்யும் தொழிலே தெய்வம்னு. அத அப்படியே செஞ்சிக் காட்டினான் பெருமாளு.

தம்பீகளா! இப்பத்தான் என்னென்னமோ வச்சிக்கிட்டு அடிக்கிறானுங்க... அப்ப தப்ப வச்சே எல்லா சோலிகளையும் முடிச்சிடுவோம். சாமிக் கும்பிட ஒரு அடி, கலியாணம் காட்சிக்கு ஒரு அடி, எழவு வூட்டுக்கு ஒரு அடி. தப்பு அடிக்கிற சத்தத்த வச்சே என்ன காரியம் நடக்குதுன்னு புரிஞ்சுக்குவோம்.

அதுலயும் பெருமாளுட்டு தப்படிக்கு தனி ரெஸ்பேட்டு. சாமிக் கும்புடுறப்ப தொரயும் தொரசாணியும் கோயிலுக்கு வருவாங்க. தப்ப அப்படியும் இப்படியும் தூக்கி அசைச்சி அடிச்சி ஒரு ஆட்டம் ஆடுவான் பாரு. தொரசாணிக்கு அதப்பாக்க சரியான ஆச. கொறஞ்சது பத்து ரூபாயாவது அவன் கையில வச்சிடும்.

''பத்து ரூபாவா? கஞ்சக்காரனுங்க..."

ஒரு சிறுவனின் முணுமுணுப்பு.

''டேய் படவா! அந்த நேரத்துல பத்து ருவாவோட மதுப்பு தெரியுமாடா ஒனக்கு... அந்தக் காசுல கொழும்புக்குப் போயிட்டு வந்திருலாம்டி... பாவம் அந்த பெருமாளு எப்டி செத்தான் தெரீமா...!"

பெரிசு நிறுத்தியது.

''எப்டி பாட்டா! தப்படிச்சிக்கிட்டே செத்துட்டதா?..."

கேட்டவன் குரலில் ஒரு தவிப்பு

''நல்லா ஞாபகம் இருக்கு... புரட்டாசி மாசம். முப்பதாம் தேதி. அந்திக்கு பெரட்டுக்களத்துல தோட்டத்துச் சனமே பேரு போட வரிசயா நிக்குது. சின்னத் தொர படபடன்னு வந்து எறங்குறான். பெரிய கணக்கப்புள்ள பக்கமா வந்து ஆளுங்க மூஞ்சிய பாத்திட்டு கொழுந்து மடுவத்து தூண்ல சாஞ்சி நிக்கிற பொருமாளு பக்கமா திரும்பி பேசுறான்.

''எல்லாம் கவனிக்கிறது. நாளைக்கி இருந்து பெரட்டுத் தப்பு அடிக்கிறது நிப்பாட்டியாச்சி. இனி ஸ்டோருல இருந்து சங்குதான் ஊதுறது. நீங்க எல்லாம் எப்பவும் போல பெரட்டுக்கு வர்றது அவ்ளோதான்." எல்லாரும் பெருமாளு பக்கம் திரும்பிப் பாக்குறாங்க. அவன் மூஞ்சி செத்துப் போச்சி ஒடம்பெல்லாம் நடுங்குறமாதிரி பட்டுச்சி. பெருமாளு பொண்டாட்டி வேலாயி ஓடிப்போய் புடிச்சிக்கிட்டா. பெருமாளு எழவு குடுத்தவன் மாதிரி தள்ளாடிக்கிட்டே போறான்.

மறுநாளு பளபளன்னு விடியுது. ஸ்டோரு சங்கு ஊ... ஊன்னு ஊதி ரொம்ப நேரமாச்சு. பெரிய கணக்குபுள்ள பெரட்டுக் கலைக்க ரெடியா நிக்கிறாரு.

ஆனா... ஆளுங்க யாரயும் பெரட்டுக்குக் காணல. தப்புச் சத்தம் கேட்டு எந்திரிச்சி பழகினவங்க சங்கு சத்தத்துக்கு எழும்பலயோன்னு ஐயாவுக்கு சந்தேகம்.

"அப்பத்தான்யா சேதி வர்து. எழவுச் சேதி. தப்புப் பெருமாளு செத்துப் போயிட்டானாம். இஸ்தோப்புல சுருண்டு படுத்த வாக்குல முடிஞ்சு போச்சாம். உசுரு மாதிரி வச்சிருந்த தப்ப நெஞ்சோட அணைச்சபடி ஆளு போயிட்டான்."

பெரிசு நிறுத்த சிறுவர்கள் மத்தியில் திடீர் நிசப்தம். எங்கோ எதுவோ சுட்டதுபோல ஒரு நிரடல்.

உரசிச் சென்ற காற்றில் மாமரத்து இலைகள் சில உதிர்ந்து விழுகின்றன மாமரம் அப்படியேதான் நிற்கிறது.


''உங்களுக்கு ஏண்டா இந்தக் கொலவெறி? காலயிலயே பெரிசுகிட்ட கத கேட்டு உசுர வாங்குறீங்க... ஒங்கள எல்லாம் ஒதச்சி ஸ்கூல் அனுப்பமாட்டேன்கிறாங்களே..."

புறுபுறுத்தபடி கணிணி பயிற்சி வகுப்புக்கு போகும் இளங்குரலுக்குச் சொந்தக்காரி ஈஸ்வர்யா. பெரிசுவின் பேத்தி.

பெரிசு தலையை உயர்த்திப் பார்க்கிறது.

'பேசத் தெரிந்த அளவுக்கு சிந்திக்கத் தெரிந்தால் எவ்வளவு நன்றாகவிருக்கும்' என்பதுபோல ஒரு இளக்கார முறுவலிப்பு. கண்களை மூடிக்கொள்ள பெரிசு- முனியாண்டி தலைரின் காதுகளில் பெருமாள் அடிக்கும் தப்புச் சத்தத்தின் ரீங்காரம். பெருமூச்சுக்குள் ஏராளமான இழப்புக்களின் அசதி.

சீறிவந்த பெருங்காற்றில் அலைகழிக்கப்பட்ட மாமரத்துக் கிளைகளில் படபடப்பு. மெதுவாக எழும்புகிறார். காற்றின் விசையால் மாமரக் கிளைகள் உடைந்தாலும் உடையலாம். ஆயினும் மனசுக்குள் எதையோ சாதித்து விட்ட நிரம்பல். புன்னகையுடன் கதைக் கேட்க வந்த சிறுவர்களை கம்பீரமாக பார்க்கிறார்.



# உலக சாம்பியனான கிராமத்து சிறுவன்

உச்சி வெயில் கொளுத்தியது
கரும்புத் தோட்டத்துக்கு நடுவே ஒரு உஷ்ணக் காற்று வீசிச்சென்றது.

அன்றைய தினம் 1986 ஆகஸ்ட் 21ம் திகதி. இடம் ஜமேய்க்கா. வெஸ்லி போல்ட், ஜெனிபர் போல்ட் ஆகிய இருவரினதும் முதல் ஆண் குழந்தை பிறந்தது. ஏற்கனவே ஷெரின் என்ற பெண் குழந்தை அவர்களுக்கு இருந்தது.

உசேய்ன் சென்ட் லியோ போல்ட் என்று அக்குழந்தைக்கு அவர்கள் பெயர் வைத்தனர்.

ஜமேய்க்காவின் பிரபல வீரர்களில் பலர் கிரிக்கெட் விளையாட்டின் மூலம் பெயர் பெற்றவர்கள். அவர்கள். தலைநகரான கிங்ஸ்டனை அல்லது அதன் சுற்றுப்புறத்தை சேர்ந்தவர்கள். ஆனால் உசேய் போல்ட் பிறந்ததோ தலைநகரில் இருந்து வெகு தூரத்தில், மிகவும் கஷ்டப்பிரதேசமாக இருந்த ஜமேய்க்காவின் வடக்குப் பகுதியில். 'ஷெர்வூட் கொன்டென்ட் என்ற கிராமம் அவர் பிறந்த ஊர். இது ஷெர்வூட் மற்றும் கொன்டென்ட் என்ற கிராமங்கள் இணைந்த ஒரு பிரதேசமாகும்.


கிங்ஸ்டனில் இருந்து இந்த பிரதேசத்துக்கு வாகனத்தில் செல்ல மூன்றரை மணி நேரம் பிடிக்கும். கரும்பு மற்றும் மஞ்சள், வற்றாழை பெருமளவில் விளையும் பிரதேசம் அது.

மேற்கத்திய தீவுகளில் பிரபல்யம் பெற்ற சுற்றுலாத் தலமான 'மொன்டேகா பே' போல்ட்டின் பிறந்த ஊரான 'ஷெர்வூட் கொன்டென்ட்'டில் இருந்து ஒரு மணிநேர வாகனப்பயண தூரத்தில் அமைந்துள்ளது.

உசேய்ன் போல்ட்டின் பிறந்த ஊரான ஷெர்வூட் கொன்டென்ட் 'டிரிலட்னி' நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ளது.

1967 முதல் 1772 வரை ஜமேய்க்காவின் ஆளுநராக இருந்த வில்லியம் டிரிலட்னியை கௌரவிக்கும் வரையில் அவர் பெயர் இந்த மாவட்டத்துக்கு வைக்கப்பட்டுள்ளது.

உசேய்னின் தந்தை வெஸ்லி போல்ட்டும் அவரது தாயாரான ஜெனிபர் போல்ட்டும் இனிப்பு வகைளையும் சிற்றுண்டிகளையும் விற்கும் ஒரு சிறிய கடையை நடத்தி வந்தனர். அந்த கடையின் மூலம் கிடைத்த வருமானமே குடும்பத்தை நடத்தி செல்ல உதவியது. கரும்பு பாணி மூலம் சுவையூட்டப்பட்ட இனிப்பு மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கு அக்கடை பிரசித்தம்.



அப்பா


இவர்களுக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள். மூத்தவள் ஷெரின், அடுத்தது உசேய்ன், மூன்றாவது உசேய்னின் தம்பி சாட்கி.

நல்லவொரு கிரிக்கெட் வீரரான சாட்கி, இப்போது கிங்ஸ்டன் கிரிக்கெட் கழகத்துக்காக விளையாடி வருகிறார். சாட்கி எதிர்காலத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணிக்காக விளையாடும் வாய்ப்புக்காக காத்திருக்கிறார்.

உசேய்ன் என்ற பெயரை இவருக்கு சூட்டியவர் அவரது தந்தை வழி உறவினர் ஒருவர். கெசயின் லியோ என்ற நடுப்பெயர் அவரது தாயின் சகோதரியால் சூட்டப்பட்டது. போல்ட் என்பது இவரது மரபுப் பெயர். ஆங்கிலத்தில் தாள்ப்பாள் அல்லது இடி என்று இது அர்த்தம் கொடுக்கும்.



தங்கையுடன்...



அம்மா வீட்டின் முன்பாக

பிறந்த காலத்தில் இருந்தே உசேய்ன் திடகாத்திரமாகவே இருந்து வந்திருக்கிறார் உசேய்ன். 5 வார குழந்தையாக இருந்தபோது கட்டில் பாதுகாப்புக்கென போடப்பட்டிருந்த மரப்பலகை மீது ஏறி உருண்டு உருண்டு கட்டிலின் ஓரத்துக்கே சென்று அங்கிருந்து மறுபுறம் திரும்பிய சின்னஞ்சிறு உசேய்னை கண்ட அவரது பாட்டனார் (தாய் ஜெனிபரின் தந்தை) வியப்படைந்தாராம்.



தாய், தந்தை, சகோதரி, தம்பியுடன்...

உடனே தனது மகளை அழைத்த அவர் உசேய்ன் பற்றி கூறியிருக்கிறார்.

"மகளே, இவன் புதுமையான சக்தியை கொண்ட குழந்தை. என்றாவது ஒருநாள் இவன் முழு உலகமும் புதுமைப்படும் ஒரு விடயத்தை செய்யப்போகிறான். அதனை எனக்கு நிச்சயமாக கூறலாம்" என்று சொல்லியிருக்கிறார்.

உசேய்ன் போல்ட் பற்றிய முதலாவது எதிர்வு கூறல் அதுதான்.

எனினும் 2008 பிஜிங் ஒலிம்பிக்கில் 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்ததை நேரில் பார்க்க அவரது தாத்தாவினால் முடியவில்லை. அந்த நிகழ்வுக்கு முன்னரே அவர் காலமாகியிருந்தார்.

சிறுவயதில் உசேய்ன் போல்ட் வேகம் மிகுந்த குழப்படிக்கார சிறுவனாகவே இருந்தான். ஷெர்வூட் கொன்டன்ட் சிறு நகரத்தின் வீதிகளில் கிரிக்கெட் விளையாவதை அவன் பெரிதும் விரும்பினான். இன்னும் பாலர் பாடசாலைக்குக் கூட போகாத நிலையில் ஏனைய வளர்ந்த சிறுவர்களுடன் சரிசமமாக நின்று பந்து வீசவும் துடுப்பெடுத்தாடவும் போல்ட்டுக்கு மிகவும் பிடித்தது. அனுபவமிக்க வேகப்பந்து வீச்சாளர்களைப்போல் தூரத்தில் இருந்து வேகமாக ஓடிவந்து துடுப்பாட்ட வீரரை திணறடிக்கவைக்கும் வேகத்தில் போல்ட்டினால் பந்து வீச முடிந்தது.

வீதிகளில் விளையாடும் கிரிக்கெட் போட்டிகளின்போது வாழை மரங்கள் விக்கெட்டுக்களாக பயன்படுத்தப்பட்டன. இந்த விளையாட்டை போல்ட்டும் அவரது நண்பர்களும் மாலையில் சூரியன் மறையும் வரை விளையாடுவார்கள். இருட்டும் வரை நடைபெறும் டென்னிஸ் போல், கிரிக்கெட் முடிவுற்றதும் கால்பந்தாட்டம் ஆரம்பமாகும். பெற்றோர் தமது பிள்ளைகளை தேடிக்கொண்டு வரும்வரை இந்த கால்பந்தாட்டம் தொடரும்.

உசேய்னை தேடி வரும் அவரது தாய் உசேய்னின் தலையில் ஒரு குட்டும் வைத்த பிறகே அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்வார். சாட்கியையும் அவர்களது தாயார் ஜெனிபர் தூக்கிக்கொண்டு வரும்போது சிற்றுண்டிக் கடையை மூடிவிட்டு உசேய்னின் தந்தை வீட்டுக்கு வந்து இவர்களுக்காக காத்துக்கொண்டிருப்பார்.

பாடசாலை செல்லும் வயதை எட்டியபின் உசேய்ன் போல்ட் 'வெல்டெஸ்னியா' ஆரம்ப பாடசாலையில் சேர்க்கப்பட்டார். கிரிக்கெட், கால்பந்தாட்டம், ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபாடு காட்டி வந்தபோதும் போல்ட்டுக்கு இயல்பாக அமைந்த மெய்வல்லுன போட்டிகளில் அவரது திறமை முதன் முதல் இங்குதான் வெளிப்பட்டது.

'வெல்டெஸ்னியா' பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டிகளில் 9 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் சிறிய சிறுத்தைக் குட்டியைப்போல பாய்ந்தோடி உசேய்ன் போல்ட் முதலிடம் பிடித்தார். உசேய்னின் அந்த ஓட்டத்திறமை அப்பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் கிலாசித்துப் பேசப்பட்டது.

**அடுத்த இதழில்...**

போல்ட்டுக்கு பிடித்த வேகப்பந்து வீச்சாளர் யார்?

# பென் டிரைவ் வாங்குவோமா?







இது கணனி யுகம். ஒரு அலுமாரி அளவில் இருந்த கணனி டேபிள் டொப் வடிவில் வந்து, லெப்டொப்பாக மடியில் அமர்ந்து, கையடக்க அளவில் வந்து இன்று அலைபேசிக்குள் வந்து உட்கார்ந்து விட்டது! இப்படி அனைத்துமே சிறிய வடிவில் வரத் தொடங்கி விட்டன. உலகம் கிராமமாகி விட்டது அல்லவா!

கணனி தொடர்பான சேவைகளில் தரவுகளை பாதுகாப்பாக சேமிப்பதும் இடத்துக்கு இடம் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதும் முக்கியமானது. டிஸ்கெட், சீடி காலம் முடிந்து இப்போது பென் டிரைவ் அல்லது ஃபிளாஷ் டிரைவ் என்று அழைக்கப்படும் தகவல் சேமிப்பு உபகரணம் பாவனைக்கு பரவலாக வந்துள்ளது. இதன் மூலம் வெகு எளிதாக தரவுகளை கணனியில் இருந்து பிரதிபண்ணி சேமித்துக்கொள்ள முடியும். இப்பென் டிரைவ்கள் ஒரு ஜி.பி முதல் 20, 25 அல்லது அதற்கும் மேற்பட்ட ஜி.பி அளவுகளில் கடைகளில் பல்வேறு விலைகளில் விற்பனைக்கு உள்ளன.

கணனியோ, மடிகணனியோ அல்லது வேறு எந்த எலக்ட்ரானிக் உபகரணமோ, அவற்றை வாங்கும்போது அவை எந்தக் கம்பனி உற்பத்தி, எந்த நாட்டு உற்பத்தி, அசலா, போலியா, பணத்துக்கு ஏற்ற பெறுமதி கிடைக்குமா? உத்தரவாதம் அளிக்கப்படுமா? நீங்கள் வாங்கப்போகும் எலக்ட்ரானிக் பொருளின் இலங்கை இறக்குமதி அல்லது மொத்த விற்பனையாளர் யார்? என்பதையெல்லாம் நீங்கள் தெரிந்து வைத்திருக்கவேண்டும். அல்லது தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இன்று அனைவரிடமும் இருக்க வேண்டிய பென் டிரைவ்களை வாங்கும்போது கவனிக்க வேண்டியவற்றை இங்கே பார்ப்போம்.

பல்வேறு தரங்களுடன் விற்பனைக்குள்ள இந்த பென் டிரைவ்கள் 2ஜி.பி, 4ஜி.பி, 8ஜி.பி, 16ஜி.பி, 32ஜி.பி,ஆகிய அளவுகளில் கடைகளில் வாங்கலாம்.

2GB அளவுடைய பென் டிரைவில் சேமிக்கப்பட்ட தகவல்களை (DATA) சுமார் 3 இறுவட்டுக்களில் பதிவு செய்ய முடியும். நீங்கள் ஒரு பென்ட்ரைவை விலை கொடுத்து வாங்கினால் அதிக எண்ணிக்கையான பாடல்கள், புகைப்படங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றை மிக இலகுவாக சேமித்து வைக்க முடியும்.




தற்போது பென் டிரைவ்களை கொழும்பின் பல விற்பனை நிலையங்களில் விலைகொடுத்து வாங்கலாம். கிங்ஸ்டன், இமேஷன், ஸ்கேன் டிஸ்க், டேடா ட்ரவலர் ஆகிய பெரிய நிறுவன வர்த்தக பெயர்களில் விற்கப்படும் பென் டிரைவ்கள் பிரபலமானவை.

போட்டிப்போட்டுக்கொண்டு இந்த பென் டிரைவ்களை கொழும்பு புறக்கோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள கடைகளில் மிக குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள முடியும். பென் டிரைவ் ஒன்றை விலைகொடுத்து வாங்கும் எண்ணம் உங்களுக்கு இருக்குமானால் பொதுவான விற்பனை விலையை தெரிந்துக்கொண்டு பின்னர் சென்று வாங்குவதே சிறந்தது. அதேபோன்று தரமானவைகள் விற்பனை செய்யும் நம்பிக்கைக்குரிய விற்பனை நிலையங்களை அடையாளங்கண்டு வாங்குவதும் அவசியமாகும்.

பொதுவாக 4ஜி.பி பென்ட்ரைவ் ஒன்று 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோன்று 8ஜி.பி 900 ரூபாவுக்கும் 16ஜி.பி 1600 ரூபாவுக்கும், 32ஜி.பி மூவாயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. புறக்கோட்டையின் முதலாவது குறுக்குத் தெருவில் ஸபென்ஸர் ஹவுஸ், பிரதான வீதியில் சிடி பெரடைஸின் மேல் மாடி, இரண்டாம் குறுக்குத் தெரு, கொள்ளுபிட்டியவில் மெஜஸ்டிக்சிட்டி, பம்பலபிட்டியவில் யுனிட்டி ப்ளாஸா போன்ற இடங்களில் பென்ட்ரைவ்களை வாங்கலாம்.

# டி.வி திருத்த யாரை அழைக்கிறீர்கள்?



வெளிநாட்டிலிருந்து வரும்போது தேவியின் கணவன் மோகன் கொண்டு வந்த எல்.சி.டி டிவியில் ஏதோ கோளாறு. இயங்கவில்லை. என்ன நடந்ததோ தெரியவில்லை.

''உடனே திருத்த எடுத்துப் போகனும்,'' என்று மோகன் கூறினார்.

''வேண்டாம்... வேண்டாம்...! இந்த புதிய டி.வியை திருத்தக் கொண்டு போறத பார்த்தா வெட்கக்கேடு. பக்கத்து வீட்டில உள்ள பொறாமைக்காரர்கள் தெரிந்து கொண்டா கைகொட்டி சிரிப்பாங்க. நாங்க டிவி செய்யுற ஒருவர வீட்டுக்கே கொண்டு வந்து திருத்துவோமே... அதுதான் தேவைக்கு அதிகமான தொடர்பு இலக்கங்கள் பத்திரிகைகள்ல போட்டிருக்கே...!'' என்ற தேவியின் கருத்தை மோகன் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

''வீட்டுக்கு வந்து செய்றவங்கள நம்பலாமா தேவி...?'' சந்தேகத்துடன் கேட்டான் மோகன்.

''நாங்க பார்த்துக்கொண்டிருக்கிறப்பவே திருத்தித் தாறாங்க, இதிலென்ன சந்தேகம் உங்கஞக்கு? உங்களுக்கு யார்மேலயும் நம்பிக்கையில்ல...'' சற்று ஆதங்கத்துடன் கூறினாள் தேவி.

மனைவியின் முகவாட்டத்தை கண்ட மோகன் ''சரி... சரி கதைச்சி பாரேன்'' என்றார்.

உடனடியாக பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கத்துடன் தொடர்பு கொண்ட தேவி விடயத்தைக் கூறினார்.

அன்று மாலையே டிவி திருத்துநர் ஒருவர் வீட்டுக்கு வந்தார். டிவியை முழுமையாக பரிசோதித்தார்...

''இதுல பவர் சப்ளைல பிரச்சினையிருக்கு. இந்த சிறு பகுதியை மாற்றி புதிதாக போட்டால் பிரச்சின முடிஞ்சிரும் மிஸ்... புதுசா போடனும் என்டா ஆறாயிரம் வரும்...'' டிவியில் இருந்து எடுத்த ஒரு சிறு பகுதியைக் காட்டினார் திருத்தல் வேலைக்கு வந்த நபர்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்ட தம்பதி, ''பிரச்சினை இல்ல... எவ்வளவு செலவானாலும்..., நீங்க உத்தரவாதம் தருவீங்களா?'' தேவி கேட்டாள்.

''ஆமா மிஸ். அதெல்லாம் யோசிக்காதிங்க... மூன்று வருட உத்தரவாதம் இருக்குது. தரமான பொருட்களை மட்டுமே நாங்கள் பயன்படுத்துவோம். இதோ என்ட கார்ட். தொலைப்பேசி இலக்கம், முகவரி எல்லாம் இதுல இருக்குது.'' என்று தனது பேர்ஸிலிருந்து 'பிஸ்னஸ் கார்ட்'டை எடுத்துக் கொடுத்தார்.

சில விநாடிகளில் டிவியை திருத்திக் கொடுத்தார். தம்பதியினருக்கு பெரு மகிழ்ச்சி.

''உங்கட சொந்த இடம் எது தம்பி?'' தேநீர் கோப்பையை நீட்டியவாறே தேவி கேட்டாள்.

''மாத்தளைதான் என் சொந்த இடம். இங்க கொழும்புல ரும் எடுத்து தங்கியிருந்து இந்த வேல செய்றன்... டிவியில ஏதாவது பிரச்சின வந்தா இந்த நம்பர்ல கதைங்க...'' என்றவரை நன்றியுடன் பார்த்தனர் கணவனும் மனைவியும்.

இரண்டு வாரங்கள் கடந்தன... ''இங்கே பாருங்களேன், டிவி மறுபடியும் மக்கர் பண்ணுது...'' என்று சத்தமிட்டாள் தேவி.

மோகன் தனக்கு தெரிந்தளவு ஆராய்ந்து பார்த்தபோதும் பிரச்சினையை அடையாளம் காண முடியாமல் போகவே மீண்டும் அந்த நபரை தொடர்பு கொள்ள முயற்சிசெய்தார் தேவி.

''நீங்கள் அழைத்த இலக்கம் தற்போது பாவனையில் இல்லை...'' என்று மறுமுனையில் பெண்குரல் வழிந்தது. இலக்கத்தை சரி பார்த்து மீண்டும் அழைத்தான் மோகன். பயனில்லை... தொடர்ந்து மூன்று நான்கு நாட்கள் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் வேலைக்காகவில்லை.

''ஐயோ அப்பா நாங்க ஒரு ஏமாற்றுகாரன் கிட்ட மாட்டிகொண்டோம் போல...'' தான் செய்த முட்டாள் செயலை நினைத்து தலையில் கை வைத்தாள் தேவி.

மீண்டும் எல்.சி.டி டிவி, நகரிலுள்ள மின்சார பொருட்களை திருத்தும் கடையொன்றுக்கு எடுத்து செல்லப்பட்டது.

''இதுல பவர் சப்ளை கட் ஆகியிருக்கு... தரம் குறைந்த 'பார்ட் பொருத்தப்பட்டதாலதான் இந்த பிரச்சின வந்திருக்கு...'' என்று கடைகாரர் கூற அதிர்ச்சியுடன் ஒருவரையொருவர் பர்த்துக்கொண்டனர் மோகனும் தேவியும்.

எனவே, வீட்டுக்கு யாரை அழைக்கிறீர்கள், அவர்கள் நம்பகமானவர்களா என்பதில் எப்போதும் உஷாராயிருங்கள். வீட்டுக்கு வெளியே எத்தர்கள் எக்கச்சக்கம்!

# அமிதாப்பின் வளர்ச்சியை முடிந்தவரை தடுக்க முயன்ற ராஜேஷ்!



## ரஜேஷ்கன்னா:
### உதிர்ந்த நட்சத்திரத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

இந்தியாவின் உச்ச நட்சத்திரம் (Super star) என்கின்ற பட்டப்பெயரால் முதன்முதலாக அழைக்கப்பட்ட ராஜேஷ்கன்னா புகழின் உச்சத்திலிருந்த காலத்தில் தனது ரசிகர்களுக்கிடையே, முக்கியமாக ரசிகைகளுக்கிடையே அதீதமான ஆவேசத்தையும் வெறியையும் பித்தையும் உருவாக்கியவர்.

காலம் காலமாக அச்சம் மடம் நாணம் எனும் 'குலப்பெண்'களின் முக்கியமான குணங்களைக் 'கடைப்பிடித்து' வாழ விதிக்கப்பட்ட இந்தியப் பெண்கள் முதன்முதலாக ஒரு திரைநடிகனின் பின்னால் ஓடினார்கள்.

நடிப்புத்திறனை விட ராஜேஷ் கன்னாவின் உடல் அசைவுகளும் மயங்கின கண்களும் கண் சிமிட்டல்களும்தான் அப்பெண்களைப் பித்தெடுக்கச் செய்தன. அத்துடன் ஒருவகையான காதல் காவித்தன்மை கொண்ட அவரது குரலின் வசீகரமும், அக்குரலினூடாக வசனம் பேசுவதில் அவர் வெளிப்படுத்திய தனக்கேயுரிய ஏற்ற இறக்கங்களும் ராஜேஷ் கன்னாவை அவர்களது காதல், காம இச்சையின் உச்சபட்சக் குறியீடாகவே மாற்றின. அது இந்தியாவில் அதற்கு முன்பும் பின்பும் ஒருபோதும் நிகழாத ஒன்று!

பதின்பருவத்தினர், கல்லூரிக் குமரிகள், திருமணமான பெண்கள், நடுத்தர வயதைத் தாண்டிய பெண்கள் என அனைத்து வகையான பெண்களும் ஒருகணம் அவரைப் பார்ப்பதற்காகவே படப்பிடிப்புத் தளங்களுக்கு வெளியே பெரும் திரளாக நின்றனர். மும்பையில் அவரது பங்களாவின் வெளியே ஒரு 'தரிசன'த்திற்காக நாள்முழுவதும் பெண்கள் நின்று கொண்டேயிருந்தனர்! திறந்தவெளிக் காட்சிகளின் படப்பிடிப்புக்கா அவர் செல்லும் கிராமப்புறங்களிலும் அவரைப் பார்க்கப் பெண்கள் வரிசையாக நின்றனர். சில பெண்கள் ராஜேஷ் கன்னாவின் உருவப் படங்களுக்கு மாலையிட்டு அவரை 'மணந்தனர்'. தங்களது கைவிரல்களை அறுத்து நெற்றியில் ரத்த குங்குமம் வைத்தனர். சொந்த ரத்தத்தில் காதல் கடிதங்களை எழுதி அவருக்கு அனுப்பினர். தொலைதூரப் பிரதேசங்களில் இருந்து தான் ராஜேஷ் கன்னாவின் மனைவி என்றோ ராஜேஷ் கன்னாவால் தான் கர்ப்பமாகியிருக்கிறேன் என்றோ உரிமைக்கோரிக்கை முன்வைக்கும் பெண்களின் கதைகள் அக்கால நாளிதழ்களில் வந்து கொண்டேயிருந்தன. அவர் வெளியே சென்றபோது வெறிகொண்ட ரசிகைகள் அவரது உடைகளைப் பிடித்து இழுத்து கிழித்தனர். அவரது வாகனத்தை முற்றுகையிட்டு அதை முத்தங்களால் மூடினர்.

ரசிகைகளிலிருந்து அவரைக் காப்பாற்ற பல காவலர்கள் தேவைப்பட்டனர். இந்தியாவில் முதன்முதலாக ஒரு நடிகனை அவனது ரசிகர்களிலிருந்து பாதுகாக்க காவல்துறை பாதுகாப்பு அளித்தது ராஜேஷ் கன்னாவுக்குத்தான்! ஆராதனா படத்தின் அமோக வெற்றிக்குப் பிறகு சென்னையிலும் கூட ரசிகைகளின் 'முற்றுகை'களுக்கும் 'தாக்குதல்'களுக்கும் ராஜேஷ் கன்னா ஆளாகியிருக்கிறார்.

"புஷ்பா... இது என்ன புஷ்பா... உனது கண்களில் மீண்டும் கண்ணீர்! உனது கண்ணீரை என்னால் பார்க்க முடியாதென்று எவ்வளவு தடவை நான் சொல்லவேண்டும் புஷ்பா? கண்ணீரை நான் வெறுக்கிறேன். ஐ ஹேட் டியர்ஸ் புஷ்பா..." போன்ற அவரது வசனங்களில் மயங்காத பெண்கள் அக்காலத்தில் மிகவும் குறைவு. ராஜேஷ் கன்னாவின் முதல் படம் 1966ல் வந்த ஆக்ரி கத் (கடைசிக் கடிதம்) முதல் 2008ல் வெளிவந்த வ:.பா (விசுவாசம்) வரைக்கும் மொத்தம் 163 படங்களில் நடித்தார். அவற்றில் நூற்றுக்கும் மேலான படங்கள் பெரும் வெற்றிகள்.

தன் படத்தில் சிறந்த பாடல்கள் வருவதற்காக சில சூத்திரங்களை அவர் கடைபிடித்தார் என்று சொல்லப்படுகிறது. ஒரு பாடல் உருவானவுடன் ஓரிருமுறை அதைக் கேட்டு அங்கிருந்து போய்விடுவாராம். இரண்டு நாட்கள் கழித்து குறைந்தபட்சம் அப்பாடலின் ஆரம்ப வரிகளாவது தனக்கு ஞாபகம் வரவில்லை என்றால் அப்பாடல்களை நிராகரித்து விடுவாராம்!

ரிஷிகேஷ் முகர்ஜியின் இயக்கத்தில் ஆனந்த் எனும் படம் வெளிவந்தது. ராஜேஷ் கன்னா நடித்த ஆகச் சிறந்த திரைப்படம் அது. சிறந்த நடிகனுக்கான :.பிலிம் பேர் விருதை ராஜேஷ் கன்னாவுக்கு வாங்கித்தந்தது மட்டுமல்லாமல் அவ்வாண்டின் சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதையும் வென்றது அப்படம்.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட கதாநாயகன் கடைசியில் இறந்துபோகும் அந்த ஆனந்த் படத்திலிருந்துதான் கேன்சரினால் பாதிக்கப்பட்ட கதாநாயகன் எனும் கதைப்போக்கு இந்தியத்திரையில் புற்றுநோய் போல் பரவியது! அதே ஆனந்த படம் வழியாகத்தான் ராஜேஷ் கன்னாவுக்கு முதல் அடி விழுந்தது என்பதும் வினோதமானது. அப்படத்தில் இரண்டாம் நாயகனாக நடித்த அமிதாப் பச்சன் மிகுந்த கவனத்தைப் பெற்றார். துணைப்பாத்திரத்துக்கான :.பிலிம்:.பேர் விருதையும் பெற்றார். தனது ஆட்சியை ஒழிக்க வந்தவர்தான் அமிதாப் என்று ராஜேஷ் கன்னாவிற்கு உள்ளுணர்வில் தோன்றியிருக்கவேண்டும்! எப்போதுமே பாதுகாப்பின்மை உணர்வால் பீடித்தவராகயிருந்த ராஜேஷ் கன்னா அமிதாப்பச்சனை அகற்ற தன்னால் முடிந்த அனைத்து வேலைகளையும் செய்தார். தனது படங்களிலிருந்து அவரை வெளியேற்ற முயற்சித்தார். நேரடியாக அவரை அவமானப்படுத்திய நிகழ்வுகளும் நடந்தன. ஆனால் ஆனந்த் மற்றும் நமக்ஹறாம் படங்களில் ராஜேஷ் கன்னாவுடன் நடித்துக்கொண்டே தனது இடத்தை உறுதி செய்த அமிதாப்பச்சன், படிப்படியாக சுப்பர் ஸ்டார் என்ற இடத்தைப் பிடித்தார்.

எனினும் ராஜேஷ் கன்னாவை அழித்தது அமிதாப்பச்சன் அல்ல. ராஜேஷ் கன்னாவேதான்! நெப்போலியன் சக்கரவர்த்தியை விட ஆணவமும் கர்வமும் மிக்கவராக இருந்தார் ராஜேஷ்கன்னா என்று அவரது நேர்காணல் இடம்பெற்ற ஒரு பி.பி.சி நிகழ்ச்சி சொன்னது! தன்னை ஒரு கடவுளாகவே அவர் நினைத்தார் என்று அவரை நன்கு அறிந்த அலி பீட்டர் ஜோன் போன்ற பத்திரிகையாளர்கள் பின்னர் எழுதினர். படப்பிடிப்பிற்கு மிகவும் காலங்கடந்து வருவது, சிலபோது வராமலே இருப்பது, சொன்ன வார்த்தையையும் நேரத்தையும் காப்பாற்றாதது, விசித்திரமான பழக்கவழக்கங்கள், திடீர் மனநிலை திருப்பங்கள் போன்றவற்றுடன் மிதமிஞ்சிய குடிப்பழக்கமும், தனது தொழில்சார்ந்த மிகத்தவறான முடிவுகளும்தான் ராஜேஷ் கன்னாவின் காலகட்டத்தை மிகவேகமாக குறுக்கியது.

ராஜேஷ் கன்னா ஒரேமுறைதான திருமணம் செய்தார். நடிகை டிம்பிள் கபாடியாவை. பத்தாண்டுகள் ஒன்றாக வாழ்ந்த பின்னர் அவர்களாகவே பிரிந்தனர். மாடல் அழகியும் நடிகையுமான அஞ்சு மஹேந்ரு, சக திரை நடிகை மும்தாஜ், சக திரை நடிகையும் இன்று தொழில் அதிபர் அனில் அம்பானியின் மனைவியுமான டினா முனிம், பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் மருமகள் அனிதா அட்வானி என்று பிரபலமான பல பெண்களுடனும் ஆயிரக்கணக்கான பிற பெண்களுடனும் ராஜேஷ் கன்னாவுக்கிருந்த உடல் சார்ந்த உறவுகள் அவரது வாழ்க்கையை சிக்கலாக்கியது. அவர் மன அழுத்தத்தை அதிகரிக்கச்செய்தது.

தனது உண்மையான நலம்விரும்பிகளை அடையாளம் காணாமல், தனக்கு நிகரானவர்களுடன் சேர்ந்தியங்காமல் தன்னை அண்டிப்பிழைப்பவர்களின் புகழாரங்களுக்கு மட்டும் செவி மடுத்து வாழ்ந்து வந்தார் ராஜேஷ் கன்னா. யார் பேச்சையும் அவர் கவனமாக கேட்பதில்லை. ஒரு சின்ன விமர்சனத்தையோ, எதிர்ப்புக் குரலையோ கூட சகித்ததில்லை. தன்னை எதிர்க்கும் நடிகர்களின், தன்னை பிரிந்த பெண் நடிகைகளின் படங்கள் வெளிவராமல் தடுக்கும் முயற்சிகள் வரைக்கும் அவர் இறங்கினார் என்று சொல்லப்படுகிறது. தன்னை பற்றியதன்று வேறெதுவுமே யோசிக்க முடியாதவரான அந்த ராஜேஷ் கன்னாவை அரசியலுக்கு இழுத்தவர் ராஜீவ் காந்தி. ஆனால் அரசியலில் அவர் தாக்குப் பிடிக்கவில்லை.

இன்னும் மணவிலக்கு வழங்காத மனைவியும் இரண்டு மகள்களும், ஒரு மகளின் கணவரான அக்ஷய் குமார் எனும் ஹிந்தித் திரை உச்ச நட்சத்திரமும் அவ்வப்போது வந்துபோகும் பல பெண் தோழிகளும் இருந்தும் கடந்த பல ஆண்டுகளாகப் புற்றுநோயால் பீடித்து தனிமையில்தான் வாழ்ந்து வந்தார் ராஜேஷ் கன்னா. மிகச்சிறிய வயதில ஏற்படும் அனுபவங்களும் அதன் மனப்பதிவுகளும்தான் ஒரு மனிதனின் குணங்களையும் வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்று :.பராயிட் எழுதினார். சிறுவயதில் தனது பெற்றோர்களால் கைவிடப்பட்ட ஜதின் அரோரா எனும் சிறுவன்தான் தூரத்து சொந்தத்திலுள்ள ஒரு பணக்கார குடும்பத்தால் தத்தெடுக்கப்பட்டு ராஜேஷ் கன்னாவாக மாறினார்! அங்கு எல்லா வசதிகளுடனும் வாழ்ந்தார். பின்னர் உலக புகழ்பெற்ற திரை நட்சத்திரமானார். கடந்த ஜுலை மறைந்தார்

## முறுக்கு

**தேவையானவை:-**

| | |
|---|---|
| உளுத்தம் பருப்பு | - 1/2 கப் |
| அரிசி மாவு | - 2 1/2 கப் |
| சீரகம் | - 2 தே.க. |
| பட்டர் | - 2 தே.க. |
| காய்ச்சிய எண்ணெய் | - 1/2 மே.க. |
| உப்பு | - தே. அளவு |

**செய்முறை:-**

உளுத்தம் பருப்பை கழுவி மூழ்கும் அளவு நீர் ஊற்றி குக்கரில் மூன்று விசில் வரும் வரை வைத்து ஆறியதும் பிறகு மிக்ஸியில் போட்டு மைப்போல அரைக்கவும். பின் அரிசிமாவில் உப்பு, பட்டர், சீரகம், காய்ச்சிய எண்ணெய், சேர்த்து நன்றாக பிசறி அரைத்த உளுந்தையும் சேர்த்து தேவைப்பட்டால் சிறிது நீர் தெளித்து முறுக்கு மாவு பதத்திற்கு பிசைந்து முறுக்கு உரலில் போட்டு சூடாக்கி எண்ணெயில் பிழியவும். விரும்பினால் சீரகத்திற்கு பதில் எள்ளு சேர்க்கலாம்.



தீபாவளி பட்சணங்கள்

## பேரீச்சம்பழ பர்பி

**தேவையானவை:-**

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | - 500g |
| நெய் | - 2 மே.க. |
| கோதுமை மா | - 2 மே.க. |
| டின்பால் | - 400g |
| தண்ணீர் | - 1/2 கப் |

**செய்முறை:-**

பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடாக்கி 2 மேசைக் கரண்டி நெய்யை விட்டு நெய் உருகியதும் கோதுமை மா சேர்த்து ஒரு நிமிடம் கிளறி நீரை ஊற்றி கலந்து நன்கு கொதிக்கவிடவும் பின் விதை நீக்கிய பேரீச்சம் பழத்தை சிறிது சிறிதாக வெட்டிச் சேர்க்கவும். அதனுடன் டின்பாலையும் ஊற்றி நன்றாக கலந்து கொண்டிருக்கவும். பாத்திரத்தின் ஓரங்களில் ஒட்டாமல் வரும்போது அடுப்பை அணைத்து நெய் தடவிய தட்டில் ஊற்றி ஆறியதும் வெட்டி பரிமாறவும்.



தீபாவளி பட்சணங்கள்




# பெங்குவின்

## சிறுவர்களுக்கு பிரியமான பறக்காத பறவை

மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை



பார்ப்பதற்கு மிகவும் வித்தியாசமானதும் அள்ளிக் கொஞ்ச வேண்டும் என்பது போன்ற தோற்றத்தையும் கொண்ட பறவையே பெங்குவின். அதனால்தான் உலகெங்கும் உள்ள சிறுவர்களின் மனம் கவர்ந்த பறவையாக இது விளங்குகிறது.

உலகெங்கும் ஒன்பதாயிரம் வகையான பெங்குவின்கள் இருப்பதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். இது பறக்காத ஒரு பறவை.

இவை பனிப்பிரதேசத்திலும் ஓரளவு வெப்ப பிரதேசத்திலும் வாழக்கூடியவை. எனவே அண்டார்டிகா போன்ற துருவப் பிரதேசத்திலும் வாழக்கூடியவை என்று பெங்குவினை மட்டுபடுத்திவிட முடியாது. வடக்கே கலப்பகோஸ் தீவுகள் வரை கூட இவைகள் வாழ்கின்றன.



சில சமயம் உணவுக்காக பூமத்திய ரேகையையும் கடந்து செல்வதுண்டு இவை Krill, மீன், squid முதலிய கடல் வாழ் உயிரினங்களை உண்டு வாழ்கின்றன. நீரின் கீழ் நீந்தி அவற்றை பிடித்து உண்கிறது. நிமிர்ந்த நேராக நடையை கொண்ட இக் கடல்வாழ் பறவை இனம் மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்டது.

பெங்குயின் இனத்தில் 'எம்பரர் பெங்குவின்' என்று அழைக்கப்படும் பெங்குவின்கள் உயரத்திலும் பருமனிலும் பெரியவை. அதனால்தான் சக்கரவர்த்தி என்று அதற்குப் பெயர்.

இது 3 அடியை விட உயரமானதாக இருக்கும். 35 கிலோ அல்லது அதிலும் கூடிய எடையைக் கொண்டிருக்கும். இது குளிர் பிரதேசத்தில் மட்டுமே வாழ்கிறது. பெங்குவின்களில் மிகவும் சிறிய இனம் 'லிட்டில் பெங்குவின்' என அழைக்கப்படுகிறது. இவை மிதவெப்ப காலநிலைப் பகுதியிலும், வெப்ப காலநிலை பகுதியிலும் வாழக்கூடியவை. 35 செ.மீ தொடக்கம் 40 செ.மீ வரையான உயரத்தை இவை கொண்டிருக்கும்.

சுமார் ஒரு கிலோ எடை கொண்டது. பெங்குவின் பெரிய கண்கள் அமைந்திருப்பது போல அதன் பார்வைத் திறனும் அதிகம்.

பெங்குவின்கள் சுமார் நான்கு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய இனமாகும். Eocene சேர்ந்தவையாக கண்டறியப்பட்டுள்ளது. Miocene காலத்தைச் சேர்ந்தவையாக கண்டறியப்பட்டுள்ளது. Miocene காலத்தைச் சேர்ந்த Pachydypte, மற்றும் இன்று அழிந்து போன ஒக்குகள் போன்ற பறவைகள் நவீன பெங்குவின்களை ஒத்துள்ளன. ஏனைய பறவைகளுக்கும் பெங்குவின்களுக்கும் இடையிலான இணைப்பு பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை.

பொதுவாக பெங்குவின்கள் பாறைகள் அதிகம் உள்ள கடல் பகுதிகளிலேயே பெருமளவில் உயிர் வாழ்கின்றன. அதனால் தென் ஆப்பிரிக்கக் கடல் பகுதியில் இவற்றை அதிகம் காணலாம்.


பெங்குவின்களை கடல் சிங்கம், திமிங்கிலம், சிறுத்தை நீர்நாய் போன்றன வேட்டையாடி உணவாக உட்கொள்கின்றன.



பெங்குவின்கள் பறவை இனமாக இருந்தாலும் நீர் பகுதியில் வாழவே விரும்புகின்றன. பெங்குவின்களின் சிறகுகள் பறப்பதற்கு பயனற்றவை. ஆனால் நீரில் நீந்துவதற்கு அது துடுப்புகளாக அமைகின்றன. கடலில் இவை பிரமிக்கதக்க வகையில் நீந்தும். இவற்றில் இறகுகளிடையே ஒரு படைக்காற்று இருப்பதால் நீரில் மிதப்பதற்கு இலகுவாக உள்ளது. அதனால்தான் பெங்குயின்கள் நீந்தும்போது அதன் பின்னால் நீர்குமிழிகள் தோன்றுகின்றன. இறகின் கீழுள்ள இக்காற்று படலம் அட்லாண்டிக் கடும் குளிரில் உடல் வெப்பத்தை பாதுகாக்க இவற்றுக்கு உதவுகி றது.

மிதவெப்ப பகுதியில் வாழும் பெங்குவின்களின் சிறகுகள் தடிப்புக் குறைந்தவை.

எல்லா பெங்குவின்களின் கீழ்ப் பகுதி வெண்ணிறமாகவும், அதன் மேற்பகுதி பெரும்பாலும் கறுப்பாகவும் இருப்பதால் எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடிகிறது. கடலில் நீந்தும்போது எதிரிகளால் அடையாளம் காணப்படுவதை தவிர்ப்பதற்கு இயற்கை அந்த நிறத்தை கொடுத்திருக்கிறது.



சுழியோடும் பெங்குவின்களின் வேகம் மணிக்கு ஆறு தொடக்கம் 12 கிலோ மீட்டர்கள் ஆகும். சிறிய வகை லிட்டில் பெங்குயின்கள் அதிக ஆழத்தில் சுழியோடுவதில்லை.

கடல் மேற்பரப்பு அருகிலேயே இரையைப் பிடித்துக் கொள்கிறது. இவற்றின் சுழியோட்டம் ஒன்று, அல்லது இரண்டு நிமிடங்கள் வரையே நீடிக்கும். பெரிய பெங்குவின்கள் 24 மீட்டர் ஆழம் வரை சுழியோடக் கூடியவை. அதன் மூச்சுப் பிடிக்கும் கால அளவு 18 நிமிடங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. பனிப்பிரதேசத்தில் வாழும் பெங்குவின்கள் பனிக்கட்டிகளின் மீது தமது வயிற்றைப் பயன்படுத்தி வழுக்கிச் செல்வது கண்கொள்ளாக்காட்சி.

மேலும் மனிதர்களின் வேகத்திற்கு ஈடுகொடுத்து நடக்கும், மனிதர்களை விட வேகமாகச் செல்லும் ஆற்றல் கொண்டவை இவை.

பெங்குவின்கள் சினைப்படும் அல்லது இனப்பெருக்கக் காலத்தில் கடலிலிருந்து 126 மைல் தூரம் வரை நிலத்தில் நடந்து சென்று முட்டையிடுகிறது. ஒரு தடவைக்கு இரண்டு முட்டைகளை மட்டுமே பெங்குயின்கள் இடுகின்றன. 35 தொடக்கம் 40 நாட்கள் ஆணும் பெண்ணும் மாறி மாறி முட்டைகளை அடைகாக்கின்றன. இரண்டு முட்டைகளை அடைகாத்தாலும் முட்டையிலிருந்து முதலில் வெளிவரும் குஞ்சுக்குத்தான் முதல் மரியாதையும் நல்ல உபசரிப்பும் நடக்கிறது. அதனால் ஒரு குஞ்சு மட்டுமே உயிர் பிழைக்க கூடிய வாய்ப்பு உள்ளது.




முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்த பிறகு மூன்று கிழமைக்கு மிகவும் அன்புடன் பெங்குவின்கள் அவற்றைப் பராமரிக்கின்றன. பிறகு சுமார் ஏழு கிழமைகளில் மயிர்கள் அடர்த்தியாக வளர்ந்த பிறகு குஞ்சுகள் சுதந்திரமாக நடமாடத் தொடங்கி விடுகின்றன.

பெங்குவின் குஞ்சுகள் பிறந்து இரண்டு வாரங்களிலேயே தமது பெற்றோர்களின் குரலை அடையாளம் கொள்கின்றன. குஞ்சுகள் வளர்ந்தபின் கடலுக்கு செல்கின்றன. கடலில் நீந்தி இரையை ஆசைத்தீர உண்டு மகிழ்கின்றன. பெங்குவின்கள் பிரசவ காலத்தில் பட்டினி கிடக்கின்றன. இதனால் பிரசவத்தின் பின் பெங்குவின்களின் மயிர்கள் உதிர்ந்து அவை மெலிந்து விடுகின்றன.



இருவாரங்களுக்கு பின்னரே மயிர் மறுபடி வளர்கின்றது. பெங்குவின்கள் சுமார் 25 வருடங்கள் உயிர் வாழக்கூடியவை. நமது தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் தற்போது பெங்குவின்கள் பார்வைக்கு இல்லை.






Printed and published by ANCL No: 35 D.R.Wijewardena Mawatha, Colombo-10 in November, 2012.